# செம்மண்

நிலம் 1 துகள் 10 வள்ளுவர் ஆண்டு 2051 19 - 25 புரட்டாதி வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

# அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது அரசு கழுகுக் கண்!

■ ரி.பி.அன்ரன்

ராஜபக்சக்கள் ஆட்சியில் அரச சார்பற்ற நிறுவனங்கள், குறிப்பாக அரசியல் பணிகளுடன் தொடர்புபடும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கண்காணிப்பும் இறுக்கமும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

தேசிய புலனாய்வுச் சேவை, நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு என்று காவல்துறையின் பல பிரிவுகள் இத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான விசாரணைகளைத் தனித் தனியே தொடக்கியுள்ளன.

இதுவரையில் கொழும்பைத் தலைமையமாகக் கொண்டியங்கும் 3 நிறுவனங்களும் வடக்கைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் 2 நிறுவனங்களும் கண்காணிப்பு, விசாரணை வளையங்களுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்று செம்மண் அறிந்தது.

வடக்கில் அஃவ்ரியல் எனப்படும் அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு மற்றும் அடையாளம் ஆகிய நிறுவனங்கள் தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. தெற்கில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் உள்ளிட்ட மூன்று நிறுவனங்கள் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிறுவனங்களின் நிதிக் கையாளுகைகளைக் குறைக்குமாறு இவை கணக்கு வழக்குகளைக் கொண்டிருக்கும் வங்கிகளுக்கு நெருக்கீடுகள் வழங்கப்படுகின்றன என்றும் செம்மண் அறிந்தது.

அடையாளம்
கொள்கை ஆய்வுக்கான நிலையம்
Adayaalam Centre for Policy Research

இதையடுத்து தமது வங்கிகளுக்குப் பணத்தை வைப்பிலிடுவதைத் தவிர்க்குமாறு இவற்றில் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகிகளிடம் வங்கி மேலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஒரு வங்கி மேலாளர் "பணம் போடுவதாக இருந்தால் ஒரே தடவையில் போடுங்கள்" என்றும் அடிக்கடி கொடுக்கல் வாங்கல் வைக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தினராம்.

அஃவறியல், அடையாளம், மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் ஆகியன தமிழர்கள் சார்ந்தும் பல செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அமைப்புக்கள். அஃவ்றியல் சிங்களவர் ஒருவரை முதன்மைச் செயற்பாட்டு அதிகாரியாகக் கொண்டு இயங்குகின்றபோதும் வடக்கில் உள்ள பல மாவட்டங்களில் கிராம மட்டத்தில் தமிழ் இளைஞர்களுடன் பணியாற்றுகின்றது. அதேபோன்று அந்த நிறுவனம் அம்பாந்தோட்டை உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் சிங்கள இளைஞர்களுடனும் பணியாற்றுகின்றபோதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்யும் நோக்கம் குறித்து அந்த நிறுவனத்தின் அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

AFRIEL
Association for Friendship and Love

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளரான

(03 ஆம் பக்கம் பார்க்க)

## யானையையும் டிப்பரையுமே அடித்துத் தூக்கும்

# ட்ரெய்ன் என்றால் சும்மாவே!




■ காயா

யாழ். நகரக் குடிமனைகள், கட்டடங்களுக்கூடாக ஊர்ந்து நாவற்குழி முடிந்த கையோடு வயல் வெளிப் பாதையில் வேகமெடுத்து ஆணையிறவை அண்மித்ததும் கடற் காற்றைக் கிழித்துக்கொண்டு கிளிநொச்சியூடாகக் கொழும்புக்குப் பறக்கிறது தொடர் வண்டி. தொடருந்துப் பயணங்கள் தரும் அனுபவங்கள் அலாதியனவை. 1956ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு ஓட ஆரம்பித்த யாழ். தேவியை எவரால்தான் மறக்க முடியும். யாழ்ப்பாணத்தவருக்கு அது ஒரு வரலாற்று நிகழ்வல்லவா?



எப்போது தீரும்... 05



யாழ். பாடியும்.... 14

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**


## மூன்றாவது பாய்ச்சலுக்கான காத்திருப்பு!

தமிழ்த் தேசிய அரசியல் ஒரு தேக்க நிலையை அடைந்திருப்பது தெளிவாகின்றது. கொழும்பு மையத்தில் ஓர் அசுர பலம் மிக்க ஆட்சி அமைந்திருக்கும் நிலையில் தமது அரசியல் நகர்வுகளை எதை நோக்கிக் கொண்டு செல்வது என்பது தொடர்பில் தமிழ்த் தலைவர்கள் தெளிவற்றவர்களாகவே இருக்கிறார்கள் என்பது அண்மையில் தமிழ் அரசுக் கட்சி விடுத்த போராட்டம் தொடர்பான அறிவிப்பின் மூலம் தெரிகின்றது.

தமிழ்த் தேசியச் சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து அரசுக்கு எதிரான ஒரு போராட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் அக்கறை செலுத்தப் போவதாக அந்தக் கட்சி அறிவித்திருக்கிறது. அப்படியொரு போராட்டத்தைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் அல்லது ஒருங்கிணைப்பில் மற்றைய கட்சிகளும் சேர்ந்து, இன்றைய அரசியல் சூழலில் நடத்தும் என்று எதிர்பார்ப்பதைப் போன்ற பகல் கனவு வேறேதும் இருக்க முடியாது.

இந்தத் தேக்க நிலையில் இருந்து தமிழ்த் தேசிய அரசியலை மீட்டெடுத்து அடுத்த பாய்ச்சலை நிகழ்த்தக் கூடிய தலைவர் ஒருவரே இன்றைய தேவை என்ற போதும் அத்தகைய ஒரு தலைவர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்பது பெரும் சோகத்திற்குரியது.

இலங்கையில் தமிழர்கள் சிறுபான்மையினர் என்கிற தாழ்நிலையை அப்படியே ஏற்றுக்கொண்டு, பெரும்பான்மையினரை ஆட்சியாளர்களை அனுசரித்துத்தான் போகவேண்டும் என்கிற அரசியலை முன்னெடுத்துச் சென்ற தமிழ் அரசியலில் இருந்து அதனை விலக்கி, தமிழர்களும் சிங்களவர்களுக்குச் சமமானவர்கள், அவர்களுக்கென்றொரு தாயகம், சுயநிர்ணயம் எல்லாமும் உண்டு என்பதை ஓங்கி உரைத்து தமிழ்த் தேசிய அரசியலில் முதல் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியவர் தந்தை செல்வா.

தமிழர்கள் இந்த நாட்டில் ஆளும் உரிமையைக் கொண்ட சமத்துவ மனிதர்கள் என்கிற அரசியல் நிலைப்பாட்டைத் தமிழர்கள் மத்தியில் நிலைநிறுத்தியதில் தந்தை செல்வாவின் இந்தப் பாய்ச்சல் பெரும் வகிபங்கைக் கொண்டிருக்கிறது. அடுத்து வந்த 30 ஆண்டு கால விடுதலைப் போருக்கான உந்துதலையும் சக்தியையும் அதுவே வழங்கி நின்றது.

தந்தை செல்வாவிற்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை திட்டமிடலோடு கூடிய கட்டமைப்பாக்கி இரண்டாவது பாய்ச்சாலை நிகழ்த்தியவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன். அது வரையில் சாத்தியமற்றவைகள் என்று எண்ணப்பட்ட பலவற்றையும் சாத்தியமாக்கிக் காட்டியவர்.

தமிழர்களுக்கான நிழல் அரசு ஒன்றை உருவாக்கிக் காட்டியவர். தமிழர்களின் தனிநாட்டுக் கனவுக்கு உருவம் கொடுத்தவர். தந்தை செல்வா நிகழ்த்திய முதல் பாய்ச்சலில் இருந்து இலக்கு நோக்கிய அடுத்த பாய்ச்சலை வெற்றிகரமாகத் தலைமை தாங்கி வழிநடத்தியவர். அவரது வழிமுறை தோல்வியைத் தழுவிக்கொண்டாலும் தமிழ்த் தேசிய அரசியலிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் அவர் ஏற்படுத்திச் சென்றிருக்கும் தாக்கமளவிற்கு இது விரையில் வேறெந்தத் தலைவரும் ஏற்படுத்தியிருந்ததில்லை என்பதே யதார்த்தம்.

ஆனால், பிரபாகரனிற்குப் பின்னரான கடந்த 10 ஆண்டுகள் காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலை முன்னகர்த்தும் மூன்றாவது பாய்ச்சாலை நிகழ்த்தக்கூடிய தலைமையொன்று உருவாகவில்லை அல்லது அதனைத் தமிழர்கள் இன்னும் கண்டடையவில்லை. அத்தகைய மூன்றாவது பாய்ச்சாலை நிகழ்த்தக்கூடிய தலைமை ஒன்று ஏற்படும் வரைக்கும் இதுபோன்று அரசியல் கட்சிகளின் பின்னடைவுகளில் இருந்து மீண்டெழுவதற்காக தமிழ்த் தேசியத்தையும், போராட்டங்களையும் பயன்படுத்திக்கொள்ளும் நடைமுறை தொடரவே செய்யும். மூன்றாவது அரசியல் பாய்ச்சாலை நிகழ்த்தித் தமிழர்களை வழிநடத்தக்கூடிய தலைவர் கிடைக்கும்வரை தமிழ்த் தேசிய அரசியலின் இந்தத் தடுமாற்றம் தொடரவே செய்யும்.

## ட்றெயின் என்றால்...

தொடருந்துப் பயணங்களையும் தாம் பயணிக்கின்ற அதிசொகுசு, அதிவேகத் தொடருந்துகளையும் எவராலும் இலகுவில் மறந்துவிட முடிவதில்லை. ஆனால், அந்தத் தொடருந்து தம்மைப் பத்திரமாகக் கொண்டு சேர்ப்பதற்குக் காரணமாகவிருக்கின்ற அதன் சாரதியை தொடருந்துகளில் பயணிக்கும் எவருமே காண்பது அரிது. அவர் குறித்துத் தேடுவதும் அரிது.

கடந்தவாரச் செம்மண் பத்திரிகையில் "ட்ரெய்ன் ட்ரைவேர்ஸ் டயறி" என்கிற திரைப்படம் பற்றிய குறிப்பைப் பார்த்ததுமே இங்கே எம்மருகாகவே ஓடும் தொடருந்துகளின் சாரதிகளின் கதைகள் எப்படியிருக்கும் என்கிற கேள்வி அரித்தெடுக்கத் தொடங்கியது. செம்மண்ணுக்காவே தேடத் தொடங்கினேன். சிங்களம் எனக்குச் சுட்டுப்போட்டாலும் வராது. ஆக, யாராவது தமிழ்ச் சாரதி இருந்தால்தான் பேசமுடியும். அப்படியொரு தமிழர் இருப்பாரா என்கிற கேள்வியே மலைப்பைத் தந்தது. தேடலில் அரிதாகத் தமிழர் ஒருவர் தொடருந்து ஓட்டுநராக இருப்பதைக் கண்டறிந்தேன். மகிழ்ச்சிக்கு அளவேயிலை. அவரைத் தேடி அடைய யாழ்ப்பாண தொடருந்து நிலைய அதிகாரிகள் பெரிதும் உதவினார்கள். நாம் தேடிப் போனவரும் நல்ல செம்மண் பூமியைத்தான் பூர்வீகமாகக் கொண்டிருந்தார்.

மாதகலைச் சொந்த இடமாகக் கொண்ட திருஞான செல்வம் கிட்டத்தட்ட 37வருடங்கள் வரையில் தொடர்வண்டிகள் பலவற்றுக்குச் சாரதியாக இருந்தவர். என்னுடைய நோக்கம் குறித்து விளக்கியதும் சிரித்துக்கொண்டே பேசத் தொடங்கினார். தான் தொடர்வண்டி ஓட்டுநராகிய காலம் குறித்து நினைவுகூர்ந்தார். தற்போது ஓய்வுபெற்றுவிட்ட அவர் தனது வீட்டு விறாந்தைக்கு முன்புறத்தில் சாய்மனைக் கட்டிலில் இளைப்பாறிக் கொண்டிருந்தார். பெரியதொரு காரியத்தைத் திறம்படச் செய்து முடித்த திருப்தி அவரது சாய்மனை இளைப்பாறலில் தெரிந்தது. "1981ஆம் ஆண்டு. எனக்கு 23 வயதிருக்கும். இந்த வேலைக்கு அப்பிளிக்கேசன் கோல் பண்ணியிருந்தவங்கள். அட்வான்ஸ் லெவல் படிச்சிட்டு இருந்த நான் அதுக்குப் போட்டு இன்ரவியுக்குப் போய் எடுபட்டனான். பைவ் இயர்ஸ் றெய்னிங் முடிச்சுக்கொண்டு வேலையில இறங்கிட்டன்" அவரது முகத்தில் ஒரு பெருமிதம் தெரிகிறது.

"பைவ் இயர்ஸ் றெய்னிங்" மீண்டும் அழுத்திச் சொல்கிறார். "ரத்மலானை, மருதானை என்று கொழும்பில எல்லா இடங்களிலையும் போட்டாங்கள். 81ஆம் ஆண்டிலயிருந்து கொழும்பில 23வருசம் வேலை செய்தனான். நாவலப்பிட்டியில இருந்தனான். ஒரு வருசம் கஸ்ரப் பிரதேசத்திலயும் வேலை செய்திருக்கவேணும் என்று நிங்கோவுக்கு மாத்திற்றன். நாட்டுப் பிரச்சினையால அங்க சிங்களிஸ் ஒருத்தரும் போக மாட்டம் எண்டு நிற்க, எங்கட சீவ் இஞ்சினியர் என்னை அங்க நிக்கச் சொல்லி, நிங்கோவிலயே நிப்பாட்டிப் போட்டார். அங்க நாலு வருசம் இருந்தனான். பிறகு அங்க இருந்து மட்டக்களப்புக்கு றெய்ன் ஓட வெளிக்கிட்டதும் மட்டக்களப்புக்கு வந்தனான். அங்க அஞ்சு வருசம். அது முடிய அனுராதபுரத்தில 7 வருசம் இருந்திட்டு றிட்டேயர் பண்ணினான்"

கிட்டத்தட்ட 37வருடங்கள் தொடர் வண்டி ஓட்டுநராக இருந்திருக்கிறார் செல்வம். நாடு முழுதும் அவர் தொடர் வண்டிகளை ஓடியிருக்கிறார். அந்தத் துறையில் அனுபவம் முதிர்ந்திருக்கிறார் என்பதை அவரது ஞாபக மீட்டல்கள் உணர்த்தின.

"தமிழாக்கள் என்னோட பத்துப்பேர் வரையில இந்த வேலைக்கு வந்திருந்தவை. 83 கலவரம் நடந்த பிறகு ஆறு, ஏழு பேர் விட்டிட்டுக் கனடாவுக்குப் போட்டாங்கள். அப்ப ஓப்பின் விசாவும் இருந்ததுதானே! சிங்கள ஆக்கள் எங்களப் புலி புலி எண்டு சொல்லுவாங்கள். சும்மா சொல்லுவாங்கள்... அவங்கள் அப்பிடிச் சொன்னாலும் எங்கட ஆக்களிட்ட இருக்கிற எரிச்சல் பொறாமைக் குணம் அவங்களில இல்ல. நல்ல குணங்கள் அதுகளெல்லாம் இருக்கு.

ட்ரெய்னிங்கில முதல் வருசம் ட்ரெய்ன் இஞ்சின் சம்பந்தமாப் படிப்பிப்பாங்கள். லொக்கோமற்றிக் கனக்கக் கிடக்குத்தானே. (தொடருந்து இயந்திரங்களின் வகைகள்) லொக்கேமற்றியப் பற்றித்தான் நிறையப் படிப்பு. சாதாரணமா இஞ்சினில ஒய்ல் சேக்கிளேசன், வோட்டார் சேக்கிளேசன் எண்டு இஞ்சின் சம்பந்தமான முழுக்கச் சொல்லித் தருவினம். அடுத்தது ரெய்ல்வே றூல்ஸ் அன்ட் றெகுலேசன் சொல்லித் தருவினம். அதுகளை முதல் வருசம் படிப்பிச்சவை. பிறகு செக்கன்ட் இயரில சண்டிங்க் செய்ய விட்டினம். சண்டிங் என்டுறது கோச்சியல (தொடருந்து) யாட்டுக்க போம் பண்ணுறது. ஒரு ட்ரெய்னை எடுத்துக் கொண்டுபோய் மற்றைய ட்ரெய்னின்ர பெட்டியளக் கழட்டிப் பூட்டிப் பழகிற ட்ரெய்னிங். சண்டிங்க் றைவர் எண்டு ஒருத்தர் இருப்பார் அவரோட போய்ப் பழகிச் சண்டிங் செய்ய வேணும்" தொடருந்துகளின் வகைகள், அவற்றின் இயக்கம், அவற்றுக்கிடையிலான வித்தியாசங்கள் என்று செல்வம் ஐயா உற்சாகமாக விளக்கிக் கொண்டே செல்கிறார். ஒரு சிறு குழந்தைக்குரிய உற்சாகம் அவரிடம் பீறிடுகிறது.

தொடருந்தை ஓட்டுவதற்கு முன்னர் அதன் இயந்திரங்கள் குறித்து அதிகம் அறிந்திருக்க வேண்டும் என்று அவர் கூறினார். ஆனால், பழங்கால இயந்திரங்களே இப்போதும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன என்று கவலையும் தெரிவித்தார்.

"எம்4, எம்5, எம்6, எல்லாம் எங்கட காலத்தில வந்த கனேடியன் இஞ்சினுகள். இப்ப எஸ். 12 வந்திருக்கு. அதிலை நான் வேலை செய்யேல்ல. எஸ்10 இல வேலை செய்தனான். இன்ரசிற்றியெல்லாம் அதுதான். கனேடியன் இஞ்சினுகள்தான் இன்னும் ஓடிக்கொண்டிருக்குதுகள். அதுகள் இல்லாட்டி, ரெய்ல்வே றண் பண்ணாது. கிட்டத்தட்ட 55 வருசத்துக்கு மேல, 24 அவேர்ஸூம் ஓடுதுகள். அப்பிடியெண்டால், எப்பிடியான இஞ்சினுகள் எண்டு பாருங்கோவன்.. இஞ்சின் பெய்லியர் ஆனாத்தான் ரத்மலானைக்குப் போகும். இல்லாட்டிக்கு அப்பிடியே தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருக்கும்" ஓய்வு பெற்றுவிட்டாலும் அவருக்கும் தண்டவாளங்களுக்குமான உறவு மானசீகமாக இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது என்பதை அவரது பேச்சு உணர்த்துகின்றது.

தொடர் வண்டிகளில் பயணிப்பது மகிழ்ச்சியைத் தந்தாலும், தொடர்வண்டிப் பயணம் தரும் சோகங்களும் மறுபுறமிருக்கின்றன. மனிதர்கள், விலங்குகள், வாகனங்கள் தொடர் வண்டியுடன் மோதுண்டு. நிகழ்கின்ற இறப்புகள் அவ்வப்போது பெரும் துயரங்களை ஏற்படுத்திவிடுகின்றன. இது தொடர்வண்டி ஓட்டுநர்களுக்கு மனச் சஞ்சலத்தை அளிக்காமல் விடுமா என்ன? செல்வம் ஐயாவும் சஞ்சலப்பட்டார்.

"வாகனங்கள் அடிக்கடி அடிபடும். ஆக்கள் அடிபடுறது சிம்பிளா நடக்கிறது. என்ர 37 வருச சேர்விஸ்சில ஒரு 350, 400 பேருக்குக் கிட்ட அடிபட்டிருக்குங்கள். தற்கொலை செய்யுங்கள். நான் ஒண்டும் செய்ய ஏலாது. கோன் அடி அடியெண்டு அடிப்பன். ட்ரெய்ன் இஞ்சின் வந்து உயரம். ஒராள் அடிபடப் போகுது எண்டாலும் தூரவாத்தான் தெரியும் கோனைப் போட்டு அடிப்பன். விலத்தினால் சரி. விலத்தாட்டி ஆள் சரி. நாங்க உயரத்தில இருக்கிற படியாக் கிட்ட வந்தபிறகு என்ன நடந்திருக்கும் என்டு தெரியாது. ரெண்டு பக்கமும் பாப்பம். அசிஸ்ரன்ட் ஒரு பக்கமும் நான் ஒருபக்கமும் பாப்பம். ஆளைக் காணவில்லையென்டால் ஆள் உள்ளுக்குத்தான். பிறகு ட்ரெய்ன நிப்பாட்டிப்போட்டு உள்ள இருக்கிற காட்டிட்ட சொல்லுறது. அவர் பொடிய எடுத்து அடுத்த ஸ்ரேசனில குடுக்கிற வேலையச் செய்துகொண்டு போவம். ட்ரெய்ன் அடிச்சால் எந்த உயிரினமா இருந்தாலும் தப்புறது குறைவு. ஒன்றிரண்டு இடங்களில அதிஷ்டவசமாத் தப்பியிருக்கு. நல்ல மெல்லிய ஆள் நடுவில மாட்டினால் ஒண்டும் நடக்காது. மொத்த ஆக்கள் எண்டால் நசிச்சுப் போடும். பிறேக் அடிச்சு ஒருக்காலும் ட்ரெய்ன நிப்பாட்ட ஏலாது கால் மைலுக்குக் கூடவாக் கண்டால் நிப்பாட்ட ஏலும். ட்ரெய்ன் இஞ்சின் பெட்டியள் எல்லாமாச் சேர்த்து 500 தொன் எண்டு வையுங்கோவன். அந்த 500 தொன்னும் வந்தொரு 30 மைல் ஸ்பீட்டில

## ட்றெயின் என்றால்...

வாறதெண்டால் எப்பிடி நிப்பாட்டுறது? சும்மா சாதாரண டிப்பரையே மண் ஏத்தினால் அவங்கள் நிப்பாட்ட முடியாமல் நிக்கிறாங்கள். யானையையே... டிப்பரையே தூக்கியெறிஞ்சிட்டுப் போற ட்ரெய்ன எப்பிடி நிப்பாட்டுறது?" யதார்த்தத்தைச் சொல்கிறார் அவர்.

அவர் மனதை விட்டு அகலாமல் இருக்கும் சின்னஞ்சிறுசுகளின் சாவுகள் அவரை இப்போதும் வாட்டுகின்றன. "மறக்க முடியாத சம்பவம் அது" என்றபடி தொடங்குகிறார். "அதுகள் பாவங்கள். இப்ப நினைச்சாலும் கவலையாக் கிடக்கு. அஞ்சாறு பிள்ளையள். றாகமாவுக்கு அங்காலை உனுப்பிட்டிய ஸ்ரேசனுக்குக் கிட்டவா... பென்ட் (வளைவு) ஒண்டு... நான் மாகோவிலயிருந்து ட்ரெய்ன் கொண்டுபோனான். அங்கையிருந்து அதேநேரம் கண்டிக்குப் போற இன்ரசிற்றி வந்தது. பிள்ளையள் தண்டவாளத்தோட நடந்து போய்க்கொண்டிருந்ததுகள். நாலோ அய்ஞ்சு பொம்பிளைப் பிள்ளையள். என்ர ட்ரெய்னக் கண்டிட்டுதுகள், பென்ட் தானே... நான் கோர்ன் அடிச்சவுடன அந்தப் பிள்ளையள் அங்காலை போச்சுதுகள். போனா அங்கையிருந்து வந்த இன்ரசிற்றி அடிச்சு அந்தளவு பிள்ளையளும் சரி.... பாவங்கள்... பள்ளிக்கூடம் போய் வந்த பிள்ளையள்."

தொடருந்துகளின் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொள்பவர்கள் தெரிந்தே செய்வதால் அவற்றை ஓரளவுக்காவது கடந்துசெல்ல முடியும் என்று கூறும் செல்வம் ஐயா, இந்தப் பிள்ளைகளின் எதிர்பாராத இழப்பால் பெரிதும் சோகமடைந்திருக்கிறார்.

"வெலிகந்தை லெவல் குறோசிங்கில ஒரு பஸ் அடிபட்டது. அப்ப நான் மட்டக்களப்பில வேலை. ஏறாவூர் முஸ்லிம் ஆக்கள் கிட்டத்தட்ட 68 பேரோ என்னவோ செத்தது. கல்லோயாவிலயிருந்து மட்டக்களப்புக்குப் போன ட்ரெய்ன். அண்டைக்கு மூண்டு எண்ணெய் ராங், பெற்றோல் ராங்கையும் போட்டு விட்டவை. ட்ரெய்ன் வேற லோட். கேற் ரெண்டும் பூட்டியிருக்க வலு ஸ்பீற்றா ஓடிவந்து பூட்டியிருந்த கேற்றையும் குறொஸ் பண்ணி... பஸ்காரர் வந்திருக்குதுகள். அதில ஆமிக்காரர் நிண்டவங்கள் கோச்சி எனவ கோச்சி எனவா எண்டு அவங்கள் கத்தக் கத்த கணக்கிலையும் எடுக்காமல் ஓடி... அடிச்ச அடியில அப்பிடியே இழுத்துக் கொண்டுபோய்.... அங்க வெலிகந்தையிலயிருந்து ஞயமான தூரம்... தேவனப்பிட்டிய எண்டு அதுவரைக்கும் பஸ்ஸை றோள் பண்ணி இழுத்துக்கொண்டுபோச்சுது. பஸ்ஸுக்க இருந்த காஸ் சிலிண்டரும் வெடிச்சு எரியத் தொடங்கீற்றுது. அதுக்குள்ள உள்ள சனம் ஞாயமா எரிஞ்சு போச்சு. ஏறாவூரில இருந்து வந்த முஸ்லிம் ஆக்களின்ர பஸ் அது. ஜட்ஜ் (நீதிபதி) நேரயே வந்து எல்லாம் பார்த்துக் கொண்டு போனார். எங்களில ஒரு பிரச்சினையும் இல்ல. நாங்கள் என்ன செய்யிறது? ஆனாலும் மறக்க முடியாத கவலையது. கேற் மூடிச் சிக்னலும் போட்டிருக்க ஓடி வந்திருக்கிறாங்கள்" கவலைகள் இப்படிப் பல இருக்கின்றன என்றார் செல்வம் ஐயா. தொடக்கத்தில் அவரிடமிருந்த உற்சாகம் நினைவுகளின் சுமைகளால் இப்போது வடியத் தொடங்கியிருந்தது.

# அகராதி பிடிச்சவன் பதில்கள்



**கே: சத்தியபாமா, மானிப்பாய்.**
தமிழர்கள் உரிமைக்காகப் போராடி, கடைசியில் உரிமையையும் பெறவில்லை அபிவிருத்தியையும் பெறவில்லை, ஆனால் முஸ்லிம்கள் ஆட்சியாளர்களோடு சேர்ந்து நின்று அபிவிருத்தியைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் உரிமையை இழந்துவிடவும் இல்லை என்று துணை அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்திருக்கிறரே?

**ப:** அவர் சொல்வது உண்மை. ஆனால், அதற்கூடாக அவர் சொல்லவருவது பச்சைப் பொய். கூட்டமைப்பின் பக்கம் இருந்து ராஜபக்சக்கள் பக்கம் தாவியவர் அவர். அதனால் தன்னை நியாயப்படுத்திக்கொள்ளக் கிழக்குத் தமிழர்களுக்கு உரிமை மட்டுமல்ல அபிவிருத்தியும் தேவை, கூட்டமைப்பு அதைக் கண்டுகொள்ளவில்லை, அதனாலேயே தான் ஆட்சியாளர்களுடன் சேர்ந்துவிட்டேன் என்பது போன்ற மாயையை ஏற்படுத்தப் பார்க்கிறார். போர் நடந்துகொண்டிருந்தபோதும் அதன் பின்னரும் அமைச்சர்களாகத் தமிழர்கள் இருந்தார்கள், இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் போன்று வேகமும் விவேகமும் பத்தாது என்பதால் அவர்களால் எதையும் தமிழ் மக்களுக்காகச் செய்ய முடிந்ததில்லை. அப்படிப் பத்தோடு பதினொன்றாக வந்திருப்பவர்தான் வியாழேந்திரனும். முஸ்லிம் அரசியல்வாதிகள் கிழக்கில் தமது பகுதிகளை அபிவிருத்தி செய்ததைப்போன்று இவரால் ஒரு போதும் செய்ய முடியாது. பின்னர், அப்படி முடியாமல்போனதற்கு என்ன காரணம் என்று அதற்கும் கூட்டமைப்பின் வாலைப் பிடித்தபடி ஏதாவது ஒன்று சொல்லிக்கொண்டு வருவார் பாருங்கள்.

**கே: டினேஸ், நாகர்கோவில்**
தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கடைசியில் சேர்ந்து விட்டார்கள் போலுள்ளதே, கவனித்தீர்களா?

**ப:** இதெல்லாம் அரசியலில் சாதாரணமப்பா! என்கிற நடிகர் கவுண்ட மணியின் வார்த்தைகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன. தேர்தலையொட்டி இவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து மோதலால் கட்சிக்குள் மாவை அணி, சுமந்திரன் - சிறிதரன் அணி என்று இரு பிரிவுகள் உருவாகிவிட்டன. கடைசியில் தலைவர்கள் சேர்ந்துவிட்டார்கள். ஆனால், பாவம் இரு தரப்புக்கும் விசுவாசமான தொண்டர் அடிப்பொடிகள் இன்னும் முகப்புத்தகங்களில் தங்கள் கருத்து மோதல்களை நிறுத்திய பாடாயில்லை. மற்றொரு விடயம் இவர்களின் அரசியல் கொலைவெறியில் பந்தாடப்பட்டு பரிதாபமாகிப் போனவர் அப்பாவிச் செயலாளர் துரைராஜசிங்கம்தான். தனது பதவி விலகல் தொடர்பில் அவர் தலைமைக்கு இரகசியமாக எழுதிய கடிதம் ஊடகங்களில் வெளியாகி இருக்கிறது. தேடிப் படித்துப்பாருங்கள். என்னா ஒரு வில்லத்தனம்!

**கே: கலையரசி, மட்டக்களப்பு**
கொரோனாவால் வீழ்ந்துவிட்ட திரைப்படத்துறை இனி எப்போது வழமைக்கு வரும்?

**ப:** திரைப்படத்துறையும் திரை அரங்குகளின் வர்த்தகமும் இனிப் பழைய நிலைக்குத் திரும்ப முடியாது என்கிறார்கள். அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் கொரோனா தாக்கம் அதிகமாக இருக்கும் நிலையில் தமிழ்த் திரைப்பட உலகு இயல்புக்குத் திரும்ப நீண்ட காலம் எடுக்கும்.

இப்போதே படப்பிடிப்புக்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டாலும் செல்வதற்கு யாரும் தயாராக இல்லை என்கிற நிலைதான் இருக்கிறது. கொரோனா அச்சம் நீங்கினாலும்கூட மக்களைத் திரையரங்குகளுக்கு இழுத்துவருவது என்பது மலையைக் கெல்லி எலி பிடிக்கும் கதையாகத்தான் இருக்கும் என்கிறார்கள். அதுவரைக்கும் வெள்ளித் திரையில் பார்க்க வேண்டிய ரம்யா பாண்டியன் போன்ற கதாநாயகிகளை சின்னத் திரையில் பார்த்து ரசிக்க வேண்டியது தான்.

**கே: யூட் நிமலன், வெள்ளவத்தை.**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ராக்கிங் என்கிற பெயரில் சிலர் தமது பாலியல் வக்கிரங்களைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள் என்று செய்திகள் அடிபடுகின்றதே?

**ப:** சிலோன் டுடே என்கிற ஆங்கிலப் பத்திரிகையில் இந்தச் செய்தி வெளியாகி இருக்கின்றது. அதன் பின்னால் உள்ள உண்மை பொய்களுக்கு அப்பால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களில் சிலர் அப்படிச் செய்திருக்க மாட்டார்கள் என்று அடித்துச் சத்தியம் செய்துவிட முடியாத நிலைதான் இருக்கிறது. பல்கலைக்கழகத்தில் இருப்பவர்கள் ராக்கிங்கை ஒரு பண்பாடாக மதிக்கும் வரைக்கும் இத்தகைய கொடூரங்களைத் தடுத்து நிறுத்த முடியாது. இன்னும் இரண்டு வருடங்களில் இதைச் செய்தவர்களும் அவர்களைப் பாதுகாத்தவர்களும் அரசியல் தலைவர்களுக்கு வகுப்பெடுக்கிறோம், சமூகத்திற்கு வழிகாட்டுகின்றோம் என்று புறப்பட்டு வருவார்கள் பாருங்கள், அதுதான் மிகக் கொடுமை.

**கே: எழிலரசி, நல்லூர்.**
கொழும்பில் வாகனங்களுக்காக தனி ஒழுங்கைகள் ஒதுக்கப்பட்டு விட்டனவாமே! மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் இனிக் கண்டபடி ஓடமுடியாதாமே! உண்மையா? இந்தச் சட்டம் யாழ்ப்பாணத்திற்கு எப்போது வரும்?

**ப:** அது வேற நாடு இது வேற நாடம்மா! இன்னும் 10 வருடங்கள் போனாலும் அதுபோன்ற நடைமுறைகள் இங்கு வருவதற்குச் சாத்தியங்கள் கிடையாது. இங்கு இருப்பதே பக்கத்துக்கு ஒரு ஒழுங்கைதான், பிறகெப்படி வாகனத்திற்கொரு ஒழுங்கை ஒதுக்க முடியும்?

*உங்கள் கேள்விகளை*
**551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
என்கிற தபால் முகவரிக்கு
அல்லது
**shemman.redsoil@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்.

# அரச சார்பற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணி கு.குருபரன் தலைமை வழிகாட்டலில் யாழ்ப்பாணத்தில் செயற்படும் நிறுவனம் அடையாளம். தமிழ்ச் சூழலில் அரசியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதில் இந்த நிறுவனம் முனைப்புக் காட்டி வருகின்றது. இதற்கான நிதி வழங்கல், இதன் நோக்கம், இப்போது அது மேற்கொண்டு வரும் திட்டங்கள் என்பன தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அடையாளம் தொடர்பில் தான் அதிகம் நெருக்குவாரங்களை எதிர்கொண்டு வருகின்றார் என்பதைச் சில மாதங்களுக்கு முன்னரே குருபரன் சில ஊடகப் பேட்டிகளில் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் இப்போது அந்த நிறுவனம் தீவிர கண்காணிப்பு வளையத்திற் குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு கொழும்பில் நீண்ட காலமாகச் செயற்பட்டுவரும் ஓர் அமைப்பு. பாக்கியசோதி சரவணமுத்து தலைமையில் செயற்படும் இந்த நிறுவனத்தின் நிதி வளங்கள் மீது இப்போது முக்கியமாகக் குறி வைக்கப்பட்டிருக்கின்றது. எங்கிருந்து நிதி வருகின்றது? நிதிக் கொடையாளர்கள் யார்? என்பன துருவித்துருவி விசாரிக்கப்படுகின்றன.

விசாரணைகளை நடத்தும் அதிகாரிகள் இந்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கும் அறிவுரை ஒன்றே ஒன்றுதான். தொண்டுப் பணியாற்ற வேண்டுமானால் உதவிப் பொருள்கள் வழங்குவதில் கவனம் செலுத்துங்கள், அரசியலில் ஈடுபாடு காட்டாதீர்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்குத் தவறி, அதிலிருந்து வெளியேறியிருக்கும் கொழும்பு மீது கண்டனங்கள், அதிருப்திகள் அதிகரித்துவரும் நிலையில் உள்ளூரில் அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிலும் குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களில் அக்கறையுடன் செயற்படும் நிறுவனங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

# திலீபன் மறுப்பு: அகிம்சையின் எதிர்ப்பா?

பிரேம்

நீண்ட காலத்திற்குப் பின்னர் கடந்த வருடம் ஒருவித அரசியல் எழுச்சியோடு நடந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்துறை முன்னாள் பொறுப்பாளர் திலீபனின் நினைவேந்தல் நிகழ்விற்கு இந்த வருடம் நீதிமன்றம் தடை விதித்துவிட்டது. இதுவொரு சட்டப்படியான நடவடிக்கை என்றாலும்கூட கொழும்பில் மைய ஆட்சியில் நடந்த அரசியல் மாற்றத்தின் விளைவே இது என்பது வெளிப்படையானது.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தடை உத்தரவு கேட்டு காவல்துறையினர் முன்வைத்த அறிக்கையிலேயே இதுவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. தற்போதைய ஆட்சியாளர்கள் முன்னைய ஆட்சியாளர்களைப் போல் அல்லாது தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பொன்றின் உறுப்பினர்களை நினைவு கூருவதற்கு அனுமதிக்காது என்று நீதிமன்றத்தில் காவல்துறையினர் தெரிவித்திருந்தனர்.

பொதுத் தேர்தலுக்கு முன்பாக, கடந்த கார்த்திகை (நவம்பர்) மாதம் 27ஆம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாள் நிகழ்வுகளை துயிலுமில்லங்களில் நடத்துவதைக் கண்டுகொள்ளாமல் அனுமதித்த அதே ஆட்சியாளர்கள்தான் இப்போது புலிகளின் உறுப்பினர் என்பதால் திலீபனின் நினைவேந்தலை நடத்த அனுமதிக்கமாட்டார்கள் என்று காவல்துறையினர் நீதிமன்றத்திடம் கூறுகின்றனர்.

இதன்படி புரிந்துகொள்ளப்படவேண்டியது என்னவென்றால், இந்த விவகாரம் வெறுமனே சட்ட ஏற்பாடுகளின்படியாக அன்றி அரசியல் ரீதியாகவே அணுகப்படுகின்றது என்பதே. அப்படி அரசியல் ரீதியாக இந்த விவகாரம் அணுகப்படும்போது அது மற்றொரு கேள்வியையும் கனதியாக எழுப்புகின்றது.



திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர். அவர் மாவீரர் ஆனதன் பின்னர் அவரது சேவைக்கேற்ப அவருக்குப் புலிகள் லெப்டினன்ட் கேணல் பதவி வழங்கினார்கள். புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளராக அவர் பதவி வகித்திருக்கிறார். இவை எவற்றையும் யாரும் மறுக்க முடியாது.

ஆனால், வன்முறையை தீவிரவாதத்தை தமது போராட்ட வழிமுறையாக முற்றிலும் வரிந்துகொண்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து அதற்கு முற்றிலும் மாறுபட்ட அகிம்சையைத் தனது போராட்ட ஆயுதமாகத் தேர்ந்தெடுத்தவர் திலீபன். ஆயுதங்களையும் குண்டுகளையும் தாக்குதல்களையும் அவற்றால் ஏற்படும் உயிர்ச் சாவுகள் ஊடான வெற்றிகளையும் கடைசி வரைக்கும் நம்பிச் செயற்பட்ட ஒரு இயக்கத்தில் இருந்து அவை எல்லாவற்றையும் புறந்தள்ளி காந்திய வழியில் தன்னுயிரை உருக்கி அகிம்சையை போராட்ட ஆயுதமாகத் தேர்ந்தெடுத்தவர் திலீபன்.

அப்படிப்பட்ட திலீபனின் நினைவு தினத்தை நடத்தத் தடைவிதிப்பதென்பது அகிம்சையைப் புறக்கணிப்பதாகாதா? வன்முறையைத் தவிர்த்து அறவழியில் போராடவேண்டும் என்கிற சிந்தனையை மறுதலிப்பதாகாதா? தமிழர்கள் அறவழி தவிர்த்து வன்முறை வழிகளிலேயே போராடவேண்டும் என்பதே கொழும்பு மைய ராஜபக்ச ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பா?

உண்மையில் வன்முறைக்கு எதிரான பரந்துபட்ட நடவடிக்கையாக திலீபனின் நினைவேந்தல்களை ஆட்சியாளர்கள் ஊக்குவித்திருக்க வேண்டும். தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் மீண்டும் ஒரு வன்முறைச் சிந்தனை வேரூன்றி விடாமலிருக்கும் கருவியாக திலீபன் முன்னிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இங்கு மாவீரர் தினங்களுக்கு அனுமதியும் திலீபன் நினைவு தினத்திற்கு மறுப்புமாக கொழும்பு ஆட்சியாளர்கள் தமிழர்களுக்குச் சொல்லும் செய்தி மீண்டும் வன்முறைதான் உங்களுக்கு இருக்கும் ஒரே தெரிவு என்பதா?

## தளும்பும் நீயும் நானும்

ஓ....பிரளயா
கடந்துபோன இரும்புத்தேரின் பின்னால் எழுந்த
புழுதி விலக்கியபடி
நீ பிறந்தாய்
நான் இறந்தேன்

அம்மாவின் இடையில் பாவாடைநாடா பதிந்த தழும்புபோல
உனக்கும் தோளில் தழும்பிருக்கும் என்பது என் நம்பிக்கை
ஒரு குழந்தைபோல அணைத்துக்கொண்டிருந்தாய் அதை நீ.

ஓவ்வாமல் கிடந்தது உன் கையில் அது.
சில வேளை சினங்கொள்ளுமோ என்னவோ
கத்தரித்தபோது கத்தரிக்கோல் கவலை கொண்டிருக்கும்
நீ பெருமிதப்பட்டுக்கொண்டிருக்கும்போதே.
காலடியில் கூந்தல் நெளிந்திருக்கும்
ஆச்சியின் அரப்பெண்ணையை ஞாபகப்படுத்தியபடி.
முள்ளைத்தேடி ஓர் ஆண் பட்டாம்பூச்சி
சிறகுதறிப் பூட்டிக்கொண்டது
உதிர்ந்ததில் புழுதியோடு வண்ணங்களும் வழிந்தன
ஒரு நொடியில் கடந்துவிட்டாய்
வீதியில் இன்றும் புன்னகை ஒட்டிக்கிடக்கிறது
பத்தாகி இருக்குமா ஆண்டு
இருக்கட்டும்
இன்னும் பழுதின்றிக் கிடக்கிறது அந்தப் பார்வை
வயிற்றுப் பிள்ளைக்காரியின் வாய்க்கச்சல் போல
துப்பத்துப்ப ஊறிக்கொள்கிறாய் நீ
சம்மனசிடம் இரவல்வாங்கிய வெள்ளைத்துண்டுடன்
மரியாள் போல உன்னைக் கண்டதாய் சொன்னான் அவன்
வேறொன்றும் சொன்னான் அதை மறந்துவிட்டேன்
இன்று தார்ச்சாலை கடக்கையில்
புழுதி
இல்லை இல்லை புகை விலக்கியபடி
ஒரு சிறுமி கத்தரித்த கேசத்துடன்
அதன் தோளிலும் தளும்பிருக்கலாம் நம்புகிறேன்
அம்மாவின் பாவாடை நாடாவும் சிறுமியின் புத்தகப்பையும்
- இருக்கிறது
உன்னுடைய தளும்புதான் தொலைந்துவிட்டது
உன்னைப்போலவே
ஏன் என்னையும் போலத்தான்

- சி.ப.வேந்தன்

## கொரோனா வாழ்க்கை!

உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் குறித்து லெபனான் நாட்டில் உள்ள பெய்ரூட் அமெரிக்க பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி மேற்கொண்டனர்.

அந்த ஆராய்ச்சியின் முடிவில், கொரோனா தொடர்ந்து உலகத்தில் இருக்கும் என்றும், HERD IMMUNITY எனப்படும் கூட்டமான எதிர்ப்பு சக்தியை மனிதர்கள் அடைகிற வரை ஆண்டுதோறும் பாதிப்பு ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மக்கள் கொரோனாவுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தும் விஞ்ஞானிகள் தற்போது எப்படி இருக்கிறோமோ, அதேபோல் இனிவரும் காலங்களில் இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

கொரோனா வைரஸ்கள் மிதமான வெப்பப் பகுதிகளில் குளிர்காலத்தில் உச்சம் பெறும், காற்றிலும், காற்றின் பரப்புகளிலும் வைரஸ் உயிர் வாழும் எனவும் ஆய்வு முடிவுகளில் கூறப்பட்டுள்ளது.

மேலும், கூட்டாக நோய் எதிர்ப்பு சக்தியை இயற்கையான தொற்றுகளின் மூலமாகவோ அல்லது தடுப்பூசிகள் மூலமாகவோ அடைந்துவிட்டால், கொரோனா வைரஸ் பரவல் விகிதம் கணிசமாகக் குறையும் எனவும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.



# எப்போது தீரும் இந்தக் கழிவுகள் பிரச்சினை?

● குமரன்

போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எதிர்கொள்ளும் மிகப் பெரும் பிரச்சினை திண்மக் கழிவகற்றல். போர் காலத்தோடு ஒப்பிடுகையில் அதற்குப் பின்னரான காலத்தில் தமிழர்கள் நுகர்ந்து தள்ளியளவிற்கு அதனால் வந்த கழிவுகளை முகாமைப்படுத்தக் கற்றுக்கொள்ளவில்லை. அதாவது, போரால் 30 வருடங்களாக இழந்திருந்த தமது நுகர்வுத் தரத்தை உலகத் தரத்தோடு உயர்த்துவதில் அவர்கள் காட்டிய தீவிரம் கழிவுகளை முகாமைப்படுத்துவதையும் உலகத் தரத்திற்கு வைத்திருக்க வேண்டும் என்பதில் இருக்கவில்லை. இதன் விளைவுகளாகத் திண்மக் கழிவகற்றல், குறிப்பாக ஆபத்தான மருத்துவக் கழிவகற்றல் பெரும் பிரச்சினையாகி இருக்கின்றது.

பண்ணையில் தொடங்கி, தெல்லிப்பழைக்குச் சென்று, தற்போது யாழ். நகரத்துக்கு அண்மையிலேயே வந்து நிற்கிறது இந்த பொருத்தமற்ற முறையிலான மருத்துவக்கழிவுகள் அகற்றப்படும் செயற்பாடு.


கடந்த வாரம் யாழ்ப்பாணம் செம்மணியில் அமைந்திருக்கும் சிந்துபாத்தி இந்து மயானத்திற்கு அருகில் விசித்திரமாக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குரிய மருத்துவக் கழிவுகளை அந்த மயானத்தில் புதைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை எதிர்த்து அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். சில மணி நேரத்தில் எல்லாமும் முடிந்து அவர்கள் போய்விட்டார்கள்.

ஆனால், எப்படித் தொடங்கியது இந்தப் பிரச்சினை? மருத்துவக் கழிவகற்றல் செயன்முறை யாழ்ப்பாணத்தில் இப்போது எப்படியிருக்கின்றது என்று செம்மண் பத்திரிகைக்காகத் தேடத் தொடங்கினேன்.




2018ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரியற் கழிவுகள் உரிய முறையில் சுத்திகரிக்கப்படாமல் பண்ணைப்பகுதியை அண்டிய குடாக்கடலில் சேர்கப்படுகின்றன என்ற வாதம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வொன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த விடயம் யாழ் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி அவர்களின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

உடனடியாக அது பற்றி ஆராய்ந்து குறித்த கழிவுகள் குடாக்கடலில் உரிய முறையில் சுத்திகரிகரிக்கப்படாமல் சேர்க்கப்படுகின்றன என்பது பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்டது. கடல்வாழ் உயிரினங்கள் உட்பட கடற்தொழிலாளர்களையும் குறித்த பொருத்தமற்ற கழிவகற்றும் பொறிமுறை பாதிக்கும் எனத்



தெரிவிக்கப்பட்டதுடன், தனியார் நிறுவனம் ஒன்றிடம் வழங்கப்பட்டிருந்த இந்தக் கழிவகற்றல் செயற்பாட்டை அந்த நிறுவனம் முறையாகச் செய்யவில்லை என்கிற குற்றச்சாட்டுடன் அந்த விவகாரம் முடித்து வைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பிரச்சினை முடிந்து அடுத்த வருடம் யாழ். பண்ணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வளாகத்தில் அமைந்துள்ள கிராமம் ஒன்றில் குழி ஒன்று அமைக்கப்பட்டு அதனுள் மருத்துவக் கழிவுகள் இடப்பட்டு எரியூட்டப்பட்டன. இது தொடர்பில் அந்தப் பகுதி வாழ் மக்கள் முறையிட்டதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளின் போது எண்ணுக்கணக்கற்ற மருந்துப் போத்தல்கள் எரியூட்டப்பட்டும், சில அரைகுறையாக எரிந்த நிலையிலும், மேலும் சில மூடிகள் திறக்கப்படாத நிலையில் எரிந்தும் கிடக்கக் கண்டெடுக்கப்பட்டன. உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தரக் கோரி செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு பதில் வழங்குமாறு தெரிவித்து பிரதம செயலாளர் அ.பத்திநாதன் உரிய மாகாண சுகாதார அதிகாரிகளை அறிவுறுத்தியிருந்தார். அந்தப் பிரச்சினையும் வழக்கம் போலவே விசாரணை, அறிக்கை, கிடப்பில் போடுதல், கண்டுகொள்ளப்படாமல் விடுதல் ஆகிய படிமுறைகளின்படி முடிவுக்கு வந்தது. அவை மீண்டும் நிகழவில்லை என்பதே ஆறுதலளிக்கக்கூடிய நன்மை

இதற்கு பின்னர் அவதானிக்கப்பட்டு பேசுபொருளாகிய அடுத்த பிரச்சினை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவக் கழிவுகளை எரியூட்டும் தொகுதியில் நிலவுகின்ற பிரச்சினை, புற்று நோய் மருத்துவக்கழிவுகளை உரிய முறையில் எரியூட்டி அழிப்பதற்கு தெல்லிப்பழை, பருத்தித்துறை, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் எரியூட்டும் தொகுதிகள் அமைக்கப்பட்டன. இவற்றுள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட தொகுதி உரிய முறையில் அமைக்கப்படவில்லை என்றும், இந்த எரியூட்டும் தொகுதியில் யாழ்ப்பாணத்தில் உள்ள பல தனியார் வைத்தியசாலைகளின் கழிவுகளும் எரிக்கப்பட்டன என்றும் இந்த நிலையத்தில் எரியூட்டப்பட முடியாத ஆபத்தான கழிவுகள் அனுராதபுரத்தில் இருந்து எடுத்து வரப்பட்டு எரிக்கப்படுகின்றன என்றும் கண்டனங்கள் எழுந்தன.

தெல்லிப்பழையில் உரிய முறையில் அமைக்கப்படவேண்டிய தொகுதியின் உயரம் **80-90.** அந்த தொகுதி **1200-1500** செல்சியஸ் வெப்பத்தை வெளியிடவேண்டும் என்பது நியமம். ஆனால் தெல்லிப்பழையில் இருக்கும் தொகுதி, **30-40** அடி உயரமாக இருப்பதுடன் **900** செல்சியஸ் வெப்பத்தை வெளியிடுவதுடனான தொகுதியாகவே அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மருத்துவக் கழிவுகளை எரிக்கும்போது சுற்றியுள்ள பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்களும் எழுப்பப்பட்டன.

வலி வடக்கு பிரதேச சபையில் இந்தத் தொகுதியை அகற்றும்படி கேட்டு **2019, 2020**ஆம் ஆண்டுகளில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும் குறித்த தொகுதி இன்னும் அகற்றப்படாமல் செயற்பட்டு வருகின்றது. இப்படி ஆபத்தான மருத்துவக் கழிவகற்றல் பிரச்சினைக்குரியதாக இருக்கும் நிலையில் கடந்த வாரம் நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட செம்மணி சிந்துபாத்தி மயானத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்ட நான்கு டிப்பர்கள் அடங்கிய மருத்துவக் கழிவுகள் (பாவிக்கப்பட்ட மருந்துகள், மருந்துக் கழிவுகள், வெற்று மருந்துப் போத்தல்கள், பாவிக்கப்பட்ட ஊசிக் கழிவுகள்) பக்கோ மூலம் குழிகள் தோண்டிப் புதைக்கப்பட இருந்த நிலையில் தடுக்கப்பட்டது

ஆக, தொடர்சியாக யாழ். குடாநாட்டின் முக்கிய பகுதிகளில் இந்த முறையற்ற விதத்தில் இடம்பெறுகின்ற மருத்துவக் கழிவகற்றல் செயற்பாடுகளை ஏன் அந்த துறைசார்ந்தவர்கள் கண்டுகொள்ளவில்லை? அரசினால் இவற்றை உரிய முறையில் அகற்றுவதற்கென ஒதுக்கப்படுகின்ற பணம் எங்கு செல்கின்றது?

மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்குப் போதிய வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லாத நிலையில் முடிந்தவரையில் பாதுகாப்பாக



அவற்றை அகற்றுவதற்கே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்கின்றன சுகாதாரத்துறை வட்டாரம்.

“தெல்லிப்பழையில் உள்ள எரியூட்டும் தொகுதியை தனியான இடத்திற்க்கு கொண்டு

(20ஆம் பக்கம் பார்க்க)



தவம் மயூ

# சீறிப் பாய்ந்தன காளைகள்...!



> காசு, பணத்தை எதிர்பார்த்து நாங்கள் மாட்டைப் போட்டிக்குக் கொண்டரவில்லை. இஞ்சை வந்துபோறது மட்டுமில்ல, மாடுகள் வளர்க்கிறதே பெருஞ் செலவு. சவாரியில்லாத காலங்களிலை அதுகளைப் பிள்ளையளைவிட அக்கறையெடுத்துப் பார்க்கவேணும்

வாலை முறுக்கியபடி புழுதிப் புயலைக் கிழித்துக்கொண்டு விரைந்த காளைகள் முடிவிடத்தை நோக்கிப் பாய்ந்தோடின. சவாரிக்கெனத் தயாரிக்கப்படுகின்ற அந்த வண்டில்களைத் தூசு போல இழுத்துக்கொண்டோடின காளைகள். அவற்றின் வேகத்தில் காளைகளுக்குப் பின்னால் வண்டில்கள் பஞ்சாய்ப் பறந்தன. வண்டிலைப் பற்றிப் பிடித்தபடி காளைகளை ஊக்குவித்த காளைக் காரர்களின் விரட்டல் சத்தம் அவர்தம் காளைகளுக்கு மேலும் உற்சாகத்தைப் பெருக்கியது. அந்தச் சவாரித் திடல் புழுதி மயமானது. பார்வையாளர்களின் கூக்குரல்களால் அதிர்ந்தது.

வேலணை - புளியங்கூடல் சாவரித்திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்த விறுவிறுப்பான சவாரிப் போட்டி இப்படியாகத்தான் களைகட்டியிருந்தது. காளைகளின் வேகமும் சவாரிக்காரர்களின் அதட்டல்களும் பார்வையாளர்களின் கூக்குரல்களுமாக நிறைந்திருந்த அந்தச் சவாரித் திடலில் குவிந்துவிட்ட சாவரிக் காளைகளின் அணிவகுப்பும் பிரமிப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.


மன்னார், வவுனியா மாவட்டங்கள் என யாழ்ப்பாணம் தாண்டிய தொலை தூரங்களில் இருந்தும் வந்து இந்தச் சவாரியில் கலந்துகொண்ட காளைகள் ஏராளம். புளியங்கூடல் மகாமாரி சன சமூக நிலையமும் மகாமாரி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய இந்தப் பெரிய சாவாரிப் போட்டியால் அவ்விரு அமைப்புகளுக்கும் வருமானங்கள் கிட்டுகின்றனவா? என்றும் தூர தேசங்களில் இருந்து வந்து இந்தப் போட்டிகளில் பங்கேற்ற காளைக்காரர்கள் என்ன எதிர்பார்ப்புகளுடன் வந்து இந்தச் சவாரிகளில் கலந்துகொண்டார்கள்? என்றும் தேடிப்பார்த்தால் விடை புதியதொரு பதிலைத் தந்தது.

பெரும் செலவில் இந்தச் சாவரித் திடலை அமைத்து, வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 84 காளைச் சோடிகளை வருவித்து, போட்டிகளை ஒழுங்கமைத்திருந்த தரப்பினர், தாம் இந்தப் போட்டிகளைக் கடந்த சில வருடங்களாக முன்னெடுத்து வருகிறோம் என்றும், இதற்குத் தமது ஊரவர்களும் புலம் பெயர்ந்து வசிக்கின்ற தமது ஊரவர்களில் பலரும் ஊக்கம் தருகிறார்கள் என்றும் எவ்வித வருமானத்தையும் எதிர்பாராமல் தங்களால் பெரும் செலவில் செய்யப்படுகின்ற சவாரிப் போட்டி இது என்றும் குறிப்பிட்டனர்.



தமது பாரம்பரியத்தைப் போணுவதிலுள்ள பிடிப்பும், விருப்பும் காரணமாகவே இந்தச் சவாரிப் போட்டிகளைத் தாமும் தொடர்கிறோம் என்றனர்.

இந்தச் சவாரிப் போட்டிக்குப் பல்வேறு இடங்களில் இருந்தும் பெரும் சிரமப்பட்டுத் தொலை தூரங்களில் இருந்து வந்திருந்த காளைகளின் சொந்தக்காரர்களை அணுகி இந்தச் சவாரித் திடல் மூலம் தாங்கள் காணும் இலாபம் என்ன என்று கோட்டபோது, இதில் இலாபம் ஒன்றும் எங்களுக்கில்லை என்று கூறியவர்கள், காளைகள் மற்றும் வண்டில் களைக் கொண்டுவந்து சேர்ப்பதற்குப் பெரும் செலவாகிவிடுகிறது. அதுபோகச் சவாரிக்கெனத் தாங்கள் வளர்க்கின்ற காளைகளுக்கான உணவுகள், பராமரிப்புகள், அதற்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படுகின்ற வண்டில்கள்



எனத் தமது பக்கமுள்ள பணச் செலவுகளைக் கடகடவென்று அடுக்கினர். இப்படியிருக்க இந்தப் போட்டிகள் எங்கெல்லாம் அறிவிக்கப்படுகின்றனவோ, எங்கேல்லாம் நடக்கின்றனவோ அங்கெல்லாம் தேடிச் சென்று தாங்கள் அவற்றில் கலந்து கொள்கிறார்கள் என்றும் அதில் சிலர் பெருமைப் பட்டனர்.

"காசு, பணத்தை எதிர்பார்த்து நாங்கள் மாட்டைப் போட்டிக்குக் கொண்டரவில்லை. இஞ்சை வந்துபோறது மட்டுமில்ல, மாடுகள் வளர்க்கிறதே பெருஞ் செலவு. சவாரியில்லாத காலங்களிலை அதுகளைப் பிள்ளையளைவிட அக்கறையெடுத்துப் பார்க்கவேணும், அதுக்கு இதுக்கு எண்டு செலவுகள்தான் நிறைய. ஆனாலும் நான் வளத்த மாடு ஓடுறதப் பாக்கேக்குள்ள அதெல்லாம் மறந்து போயிடும். 'ஓடி வெண்டுவிட்டால் அதாலை வாற சந்தோசம்தான் என்னப் போல காளைக்காரர்களுக்குப் பெரிசாய் இருக்கும். மற்றும்படி போட்டியில மாட்டுக்குக் கிடைக்கிற அந்தப் பரிசும் எனக்குப் பெரிசுதான். அது என்ர காளையள் வெண்ட பரிசெல்லோ...."

அந்தச் சவாரித் திடலின் அமளி துமளிகளுக்கு மத்தியிலும், இந்தச் சவாரிப் போட்டியில் தனது காளைகள் மகுடம் சூடிவிட்ட பெருமிதத்தில் கதைத்துக் கொண்டிருந்த சங்குவேலியைச் சேர்ந்த கேமச்சந்திரனின் பெயர் பரிசிலைப் பெற வரும்படி ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டதும் மேடை நோக்கி விரைந்தார் அவர்.

இவ்வாறாக எவ்வித வருமானமோ, இலாப நோக்கமோ இல்லாமல் தமது பாரம்பரியத்தைப் போணுவதற்காகவும் அதைத் தொடர்ந்து கடைப் பிடிப்பதற்காகவும் அதை மறக்காமல் இருப்பதற்காகவும் மாத்திரம் இந்த அமைப்புகளும், இதில் இருக்கின்ற ஒரு வகை ஈடுபாடு காரணமாகக் காளை வளர்ப்புக்காரர்களும் இந்தச் சவாரித்திடலைக் கிட்டத்தட்ட மூன்றரை மணித்தியாலங்கள் வரையில் பெரியதொரு திரையரங்குபோல மாற்றி ஆயிரக்கணக்காண பார்வையாளர்களை அங்கே குவியச் செய்திருந்தனர். தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று மாட்டு வண்டிச் சவாரி என்பதை மறுபடியும் இவர்கள் ஞாபகப்படுத்தினர்.

வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு தென்னிந்தியாவில் எப்படிப் பிரபலமோ அதைப்போலவே ஈழத்தில் மாட்டுவண்டிச்சவாரியும் பிரபலம்.

நிலமை இவ்வாறிருக்க, நாட்டில் அமைந்துள்ள புதிய அரசின் அறிவிப்பொன்றும் சிலாகிக்கப் பட்டுவருகிறது. மாடறுப்புக்குத் தடை என்கிற அந்த அறிவிப்புப் பெரியதொரு பிரச்சினையாக உருவெடுத்தாலும் சிங்கள ஆட்சியாளர்களால் முஸ்லிம்கள் நோக்கி வீசப்பட்டுள்ள கணையாகவே அது பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்த அறிவிப்பு வெளியான கையோடு கிளிநொச்சியில் நடந்த சவாரி தொடர்பில் தென்னிலங்கை ஆங்கில ஊடகமான டெல்லி மிரரில் இத்தகைய போட்டிகளும் பசு வதையல்லவோ என்கிற கோணத்தில் விமர்சிக்கப்பட்டிருந்தது. மாடறுப்பு என்பது காளைகளுடன் தொடர்பு பட்டும், காளைகளே சவாரியின் கதாநாயகர்கள் என்றும் இருக்க இது முஸ்லிம்களுடன் மாத்திரம் நின்றுவிடப் போவதில்லை, அவர்களைத் தாண்டி தமிழர்களின் அடிமடியிலும் இந்த அறிவிப்புக் கைவைக்கும் என்றே தெரிகின்றது. ■



அகீல்

# 20 வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் பூர்த்தியடைவது எப்போதோ?


## அஷ்ரப்புக்கு நன்றிக்கடனா இது?

முஸ்லிம்களுக்கு அரசியல் முகவரி பெற்றுத் தந்தவரும் பெரும் பன்மை முஸ்லிம்களால் பெருந் தலைவர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவருமான முஸ்லிம் காங்கிரஸின் நிறுவுநர் எம்.எச்.எம்.அஷ்ரப் அகாலச் சாவடைந்து 20 வருடங்களாகிவிட்டன. கடந்த 16ஆம் திகதி புதன்கிழமை அன்னாரது நினைவு தினம். இந்தத் தினம் பெரும்பாலான முஸ்லிம்களுக்கு வலி தரும் நாள்.

இந்தத் தினத்தில் நாடு முழுவதும், குறிப்பாக கிழக்கில் அஷ்ரப்பின் நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. “தலைவர் தினம்” என்கிற அடைமொழியோடு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் பல்வேறு இடங்களிலும் உணர்வுபூர்வமாக நிகழ்வுகளை நடத்தினர்.

முஸ்லிம் அரசியல் களத்தில் அஷ்ரப் என்கிற நாமம் தவிர்க்க முடியாத ஆளுமை. தனித்துவமான அதிகாரத்தை அந்தப் பெயர் கொண்டிருக்கிறது. பொதுத் தேர்தல் முடிந்த கையோடு கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கட்சியின் தற்போதைய தலைவர் ரவூப் கக்கீம் கிழக்கில் அஷ்ரப்பின் ஜனாசா நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் துஆ பிரார்த்தனை செய்தார் என்பதே அதற்கான சிறந்த உதாரணம்.





### அஷ்ரபின் நாமம்

நாம் அஷ்ரப்பின் பண்ணையில் வளர்ந்தவர்கள், அஷ்ரப்பால் புடம்போடப்பட்டவர்கள். அஷ்ரப் வழியில் செல்பவர்கள் என்றெல்லாம் மக்கள் மத்தியில் மார் தட்டிக்கொள்ளும் முஸ்லிம் அரசியல்வாதிகள் தேர்தல் களத்தில் வாக்கு வேட்டையில் இதனை உரத்துக் கூறுவதும் வழக்கமாகும். அதாவது, அஷ்ரப்பின் இறப்பின் பின்னர் அவரது வாழ்வியல் தடயங்களை வைத்து இவர்கள் அரசியல் நடத்துகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

அதிகாரங்களைத் தேடிக்கொள்வதிலும், பொய் வாக்குறுதிகள் வழங்குவதிலும் அடிக்கல் நடுவதிலுமே இத்தகைய முஸ்லிம் அரசியல்வாதிகள் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்கிற விமர்சனமும் மக்களிடம் உண்டு.

### 20 வருடங்கள்

இத்தகைய விமர்சனத்திற்குக் கட்டியம் கூறுவது போன்று கடந்த 20 வருடங்களுக்கு முன்பாக அஷ்ரப்பினால் அடிக்கல் நாட்டப்பட்ட பொதுமக்களுக்கான கட்டடம் ஒன்று இதுவரையில் முழுமைப்படுத்தப்படாமல் இருப்பதைக் குறிப்பிடலாம். ஆம்! கிழக்கின் நிந்தவூர்ப் பிரதேசத்தில் 20 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் முழுமையடையாது அவல நிலையில் காட்சியளிக்கும் அஷ்ரப்பின் ஞாபகார்த்த வரவேற்பு (கலாசார) மண்டபமே அது.

இன்று சீர்கேடுகளுக்கான களமாக மாறி விட்டதாகக் கூறப்படும் இந்த அரைகுறைக் கட்டடம் அஷ்ரப்பினால் அடிக் கல் நாட்டப்பட்டு அரைவாசி வரைக்கும் கட்டப்பட்டதாகும். நிந்தவூர் மீது தனி அன்பு கொண்டு செயற்பட்ட அஷ்ரப், ஊரின் பொது நோக்கு மண்டபத் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு இந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

1996ஆம் ஆண்டு அவரால் இந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதிபர் சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் தலைவர் அஷ்ரப் மறைவையடுத்து இந்தக் கட்டடத்திற்கு அஷ்ரப் ஞாபகார்த்த வரவேற்பு மண்டபம் என்று பெயரும் அறிவிக்கப்பட்டது.

### அரைகுறை

தொடக்கத்தில் 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தக் கட்டடத்திற்கான வேலைகள் தொடங்கின. மூன்று தளங்களைக் கொண்டதாக இந்தக் கட்டடத்தை நிறுவி அதன் மூன்றாவது தளத்தில் மறைந்த தலைவர் அஷ்ரப்பினதும் அந்தப் பகுதி முஸ்லிம்களினதும் வாழ்வியல் தொடர்பான ஆவணக் காப்பகம் ஒன்றை அமைப்பது என்றும் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் துன்பியல் நிகழ்வாக அஷ்ரப்பின் மறைவிறகுப் பின்னர் 2002 முதல் 2015 வரையான காலப் பகுதியில் இந்தக் கட்டடப் பணிகள் எவையும் நடைபெறவேயில்லை. ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹசனலி இந்தக் கட்டடம் தொடர்பில் கொண்டிருந்த பெரும் அக்கறை காரணமாக அரசிடமிருந்து பெற்றுக்கொண்ட இரண்டரைக் கோடி ரூபா பணத்தில் மீண்டும் கட்டடப் பணிகள் தொடங்கித் துளிர்விட்டன.

இதன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய தலைவர் ரவூப் க்கீம் அமைச்சராக இருந்த காலத்தில் இந்தக் கட்டடப் பணிகளுக்கென நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருந்தார். ஆனால், உண்மையில் அவர் அஷ்ரப் மீது அக்கறை கொண்டவராக இருந்திருப்பாரானால் மொத்தக் கட்டடப் பணிகளும் முழுமை பெறுமளவிற்கு நிதி ஒதுக்கீட்டை வழங்கியிருக்கலாம் என்று வருத்தப்படுவோரும் இருக்கவே செய்கின்றனர்.

எது எப்படியோ அந்தக் கட்டடம் கடந்த 20 வருடங்களாக முழுமை பெறாமலேயே கிடந்து சீரழிகின்றது. அஷ்ரப் துதிபாடும் அரசியல் தலைமைகள் இன்னுஃம் எவ்வளவு காலத்திற்கு இதனைக் கண்டும் காணாதது போன்று இருக்கப் போகிறார்கள்?

“போராளிகளே புறப்படுங்கள்!” எனும் அஷ்ரப்பின் கம்பீரக் குரல் எங்கிருந்தோ கேட்கிறது!

> சீர்கேடுகளுக்கானகளமாக மாறி விட்டதாகக் கூறப்படும் இந்த அரைகுறைக் கட்டடம் அஷ்ரப்பினால் அடிக்கல் நாட்டப்பட்டு அரைவாசி வரைக்கும் கட்டப்பட்ட தாகும். நிந்தவூர் மீது தனி அன்பு கொண்டு செயற்பட்ட அஷ்ரப், ஊரின் பொது நோக்கு மண்டபத் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு இந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

# களை கட்டுமா ஐ.பி.எல். போட்டிகள்?

■ சி.விமலன்

2020 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டிகள் இன்று (19.09.2020) ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆரம்பமாகின்றன. கடந்த மார்ச் மாதம் இந்தியாவில் நடைபெறவிருந்த இந்தப் போட்டிகள் கொரோனா தாக்கத்தினால் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் இவ்வருடம் அவுஸ்ரேலியாவில் நடைபெறவிருந்த உலகக் கிண்ண 20/20 போட்டிகள் நிறுத்தப்பட்டதனால் அந்தக் காலப் பகுதியில் ஐ.பி.எல். போட்டிகளை நடத்துவதற்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவு செய்தது. இதையடுத்தே ஐக்கிய அரபு அமீரகத்தின் சார்ஜா, துபாய், அபுதாபி ஆகிய மூன்று மைதானங்களில் போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

## கொரோனா சிக்கல்

கொரோனா தாக்கம், அனுசரணையில் இருந்து வீவோ நிறுவனம் விலகியது போன்ற காரணங்களால் ஐ.பி.எல். தொடர் இம்முறை நடைபெறுமா என்ற சந்தேகம் ஆரம்பத்தில் ஏற்பட்டது. ஆனாலும் குறுகிய காலத்தில் ட்ரீம் 11 நிறுவனத்தின் அனுசரணை கிடைத்ததாலும் இந்த ஒப்பந்தக் கை மாற்றம் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு 220 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத்தியது. இந்தப் பண இழப்பு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஒரு பொருட்டல்ல என்றாலும் போட்டியை ஒளிபரப்பும் உரிமை பெற்ற ஸ்ரார் தொலைக்காட்சி குழுமத்தின் பொருளாதார இழப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டி இருந்ததனால் ஐ.பி.எல். தொடரை எப்படியாவது நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல்களுக்கு இடையிலும் தற்போது பல்வேறு விளையாட்டுகளும் சர்வதேச ரீதியில் மீள ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கிரிக்கெட்டும் அதற்கு விதிவிலக்கல்ல எனும் வகையில் சில சர்வதேச கிரிக்கெட் தொடர்களும் அண்மையில் நடைபெற்று முடிந்திருக்கின்றன. எனவே வணிகமயமாகி விட்ட கிரிக்கெட்டில் ஐ.பி.எல். போன்ற ஒரு தொடர் நடந்தே தீரும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனாலும் கடந்த காலங்களில் நடைபெற்ற திருவிழா கொண்டாட்டத்தைப் போன்றல்லாமல் இம்முறை வெறும் போட்டிகளாக மட்டுமே நடத்தத் தீர்மானிக்கப்பட்டமைதான் ஒரேயொரு வித்தியாசம். எனவே வீரர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டாலும் எவ்வளவு தூரம் அது பொருத்தப்பாடு உடையது என்பதுதான் சந்தேகத்திற்குரியது.

## உளவியல் பிரச்சினை

அந்த வகையில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வீரர்கள் 'உயிர்ப் பாதுகாப்பு வளையம்' என்ற பெயரில் அனுமதிக்கப்பட்ட ஹோட்டல்கள் மற்றும் பயிற்சி பெறும் மைதானங்கள் ஆகிய இடங்களுக்கு மட்டுமே செல்ல முடியும் என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. உண்மையில் வீரர்கள் உடற் தகுதியோடு மனதளவிலும் மகிழ்ச்சியாக இருந்தாலே போட்டிகளில் சிறப்பாக விளையாட முடியும். தற்போது சர்வதேச கிரிக்கெட் தொடர்கள் சில நடைபெற்று முடிந்தாலும் அவை ஐ.பி.எல். போன்று சுமார் இரண்டு மாதங்கள் கொண்ட தொடராக அமையவில்லை. அத்தோடு ஐ.பி.எல். தொடரில் விளையாடுவதற்காக சுமார் ஒரு மாத காலத்திற்கு முன்னமே வீரர்கள் தமது தனிமைப்படுத்தலை தொடங்கிய நிலையில் அவர்களது உளவியல் நெருக்கடிகளையும் புறந்தள்ள முடியாது. கடந்த வருடம் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட இலங்கை அணி வீரர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக ஹோட்டல்களில் முடக்கப்பட்டமை குறித்து வெளியிட்ட அதிருப்தியோடு ஒப்பிட்டால் ஐ.பி.எல். போட்டிகளுக்காக வீரர்கள் மேற்கொண்டு வரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் கொடுமையானவை. இந்த விடயத்தில் வீரர்களுக்கு மனக் கசப்புகள் இருந்தாலும் ஓரிருவரைத் தவிர ஏனையவர்கள் அணி நிர்வாகத்தோடு முரண்பட்டு பொருளாதார நலனையும் மீறி வெளியேற முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டமை துயரமே.



## அச்சுறுத்தல்

தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னமே சென்னை அணியைச் சேர்ந்த 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகி இருந்தது. இக்கட்டுரை எழுதும் பொழுது டெல்லி கப்பிரல் அணியின் துணை பிசியோதெரபிஸ்டுக்கும் தொற்று உறுதியாகி உள்ளது. எனவே எந்தவேளையில்யாருக்குத் தொற்று ஏற்படுமோ என்ற அச்ச உணர்வில் இருக்கும் வீரர்களால் போட்டிகளில் முழுக் கவனத்தையும் செலுத்த முடியுமா?

**'உயிர்ப் பாதுகாப்பு வளையம்' என்ற பெயரில் அனுமதிக்கப்பட்ட ஹோட்டல்கள் மற்றும் பயிற்சி பெறும் மைதானங்கள் ஆகிய இடங்களுக்கு மட்டுமே செல்ல முடியும் என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. உண்மையில் வீரர்கள் உடற் தகுதியோடு மனதளவிலும் மகிழ்ச்சியாக இருந்தாலே போட்டிகளில் சிறப்பாக விளையாட முடியும்.**

இது ஒவ்வொரு அணியும் திட்டமிட்டுச் செயற்படுவதில் சங்கடங்களை ஏற்படுத்தலாம். ஒரு வீரருக்கு கொரோனா ஏற்பட்டால் அவருக்கு ஈடான இன்னொரு வீரரை உடனடியாக ஒப்பந்தம் செய்வது எல்லா அணிகளுக்கும் இலகுவாக இருக்கப் போவதில்லை. அதேசமயம் வீரர்களின் நலன் கருதி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கொரோனா பரிசோதனைகளுக்காக இந்திய மதிப்பில் 10 கோடி நிதி ஒதுக்கியமை பாராட்டுக்குரியதே.

இன்னொரு பிரச்சினை இம்முறை ஐ.பி.எல். போட்டிகளுக்கான ஏலம் கடந்த டிசெம்பரில் நடைபெற்றது. அப்போது அனைத்து அணிகளும் இந்திய ஆடுகளங்களை மனதில் கொண்டே வீரர்களைத் தெரிவு செய்திருந்தன. ஆனால் இம்முறை போட்டிகள் நடைபெறும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு இந்த வீரர்கள் எவ்வளவு தூரம் பொருத்தமானவர்கள் என்பது சந்தேகமே. உதாரணமாக இந்திய ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாகவே அமைவதுண்டு. அதிலும் குறிப்பாக சென்னை ஆடுகளம் சுழலுக்குச் சிறப்பாக ஒத்துழைக்கும் என்ற காரணத்தினாலேயே நடந்த ஏலத்தில் பியூஸ் சவ்லாவை சென்னை 6.75 கோடிக்கு வாங்கியிருந்தது. ஐக்கிய அரபு அமீரக ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்றாலும் இந்திய ஆடுகளங்கள் அளவுக்கு இருக்குமா என்பதை போட்டியின் பொழுதே உணரமுடியும். இதனை பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணியின் பயிற்சியாளரான மைக் ஹெஸன் "ஆடுகளத்தில் வெடிப்புகள் அதிகமாக இருக்கும் பொழுதே அது சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக மாறும்" எனக் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பின்னணியிலேயே வேகப் பந்து வீச்சாளரான கேன் றிச்சர்ட்ஸனுக்குப் பதிலாக சுழற் பந்துவீச்சாளரான அடம் சம்பாவை அவர்கள் ஒப்பந்தம் செய்தமையை நோக்க வேண்டியுள்ளது.

அதேவேளை லசித் மலிங்க இம்முறை தொடரில் பங்கேற்காது விலகியதால் அவருக்குப் பதிலாக ஆஸ்திரேலியாவின் ஜேம்ஸ் பற்றின்ஸன் ஒப்பந்தம் செய்யப்பட்ட பொழுது "ஐக்கிய அரபு அமீரகத்தின் சூழலுக்கு பற்றின்ஸன் பொருத்தமானவராக இருப்பார்' என மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளரான ஆகாஸ் அம்பானி தெரிவித்த கருத்து ஐக்கிய அரபு அமீரக ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கும் ஒத்துழைக்கும் என்றே தோன்றுகிறது. இந்த மைதானங்கள் தொடர்பாக மைக் ஹெஸன் இன்னொரு தகவலையும் பகிர்ந்துள்ளார். "அபுதாபி மற்றும் துபாய் மைதானங்களின் பவுண்டரி எல்லைகள் பெரிதாக இருப்பதனால் ஒரு அணி 150 - 160 வரையான ஓட்டங்களைக் குவித்தால் சிறப்பாக இருக்கும். பெங்களூரு சின்னசுவாமி மைதானத்தை போன்று சிறிய மைதானங்கள் அல்ல இவை என்பதால் டெத் ஓவர்களில் இங்கு பந்து வீசுவது முற்றிலும் வேறுபட்டது" எனக் கூறியுள்ளார்.

## நேர மாற்றம்

அதேவேளை கெட்டதிலும் ஒரு நல்லது நடக்கும் என்பதைப் போல ஐக்கிய அரபு அமீரக மைதானத்தில் போட்டிகள் நடப்பது ரசிகர்களுக்கு ஒரு நன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. இதுவரை காலமும் ஐ.பி.எல். தொடரின் இரவுப் போட்டிகள் 8 மணிக்கே நடைபெற்று வந்தன. இதனால் நள்ளிரவைத் தாண்டிப் போட்டி முடிவதனால் போட்டி நேரத்தை இரவு 7.30 மணிக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை வருடந்தோறும் முன்வைக்கப்பட்டாலும் அணி உரிமையாளர்கள் அதற்குச் செவி சாய்ப்பதில்லை. ஆனால் இம்முறை போட்டிகள் இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை சற்று ஆறுதலான விடயம்.

அதேவேளை ஐ.பி.எல். போட்டிகள் என்றாலே மைதானத்தில் ரசிகர்களின் உற்சாகம் கரைபுரண்டோடும். இந்நிலையில் ரசிகர்கள் எவருமின்றி விளையாடுவது வீரர்களுக்கு குறிப்பாக இந்திய வீரர்களுக்குப் புதிய அனுபவமாக இருக்கும். ஏனென்றால் இந்தக் கொரோனா காலத்திலும் அவ்வாறு ஒரு தொடரிலாவது விளையாடிய அனுபவம் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் மற்றும் ஆஸ்திலிய வீரர்களுக்கும் நடைபெற்று முடிந்த கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றிய வீரர்களுக்கும் உண்டு. ஆனால் ஐ.பி.எல். தொடரில் அதிகமாகப் பங்கேற்கும் இந்திய வீரர்களுக்கு அந்த அனுபவம் இதுவரை கிட்டவில்லை. ஆனாலும் ரசிகர்கள் இல்லாதது இளம் வீரர்களுக்கு நெருக்கடியைக் குறைக்கும் எனவும் கருதப்படுகின்றது. ஏற்கனவே ஐ.பி.எல். போட்டிகளை தொலைக்காட்சியில் பார்வையிடும் ரசிகர்களின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்து சாதனை படைத்து வரும் நிலையில் தற்போது ரசிகர்கள் எவரும் மைதானத்திற்கு அனுமதிக்கப்படாததோடு கொரோனாவின் தாக்கமும் நீடித்து வருவதால் இம்முறை அந்தச் சாதனை இன்னமும் அதிகரிக்குமென நம்பலாம்.

## எண்ணற்ற மின்னும் நட்சத்திரங்கள்

இரவானதும் வானத்தில் ஏராளம் நட்சத்திரங்கள் ஜொலிக்கின்றன. அந்த நட்சத்திரங்களை எப்போதாவது எண்ணி முடிந்திருக்கிறீர்களா? பல நாள்கள் வரை எண்ணினாலும் முடியாத காரியமாகவே அது உங்களுக்கு இருக்கும். இவ்வாறிருக்க, வானொலித் தொலைநோக்கியைப் பயன்படுத்தி சுமார் 10.3 மில்லியன் கணக்கிலான நட்சத்திரங்களை “ஸ்கான்” (பரிசோதனை) செய்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள முர்ச்சீசன் வைட்ஃபீல்ட் அரே என்கிற தொலைநோக்கியைப் பயன்படுத்தி இந்த நட்சத்திரங்களை அவர்கள் பரிசோதனைக்குட்படுத்தியிருக்கிறார்கள். எதற்காக இவ்வாறு ஏராளமான நட்சத்திரங்களை அவர்கள் ஸ்கான் செய்தார்கள் என்று தேடிப்பார்த்தால், எமது சூரியக் குடும்பத்துக்கு அப்பாற்பட்டு எங்காவது உயிரினச் சூழல் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்காகத் தான் அவர்கள் இந்த மில்லியன் கணக்கான நட்சத்திரங்களை ஸ்கான் செய்துள்ளனர் என்று தெரிய வந்தது. அதாவது இந்த நட்சத்திரங்களில் எதிலாவது வேற்றுக் கிரகவாசிகளின் நடமாட்டம் தெரிகிறதா? உயிரினங்கள் எவையாவது உசலாடுகின்றனவா? என்பதைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சியின் ஒரு படியாகவே இந்த நட்சத்திரங்கள் பரிசோதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், “இந்த நட்சத்திரங்களில் எதையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படியிருக்க, 10.3 மில்லியன் நட்சத்திரங்களையே நாம் ஆராய்ந்துள்ளோம். சுமார் 100 பில்லியன் நட்சத்திரங்கள் (பால்வெளி விண்மீன் மண்டலத்தில்) உள்ளன. நாங்கள் ஆராய்ந்தது அதில் 0.001சதவீதம் மட்டுமே. இது சிறந்த மதிப்பீடு அல்ல,” என்று ட்ரெம்ப்ளே கூறினார். ஆஸ்திரேலியாவின் தேசிய அறிவியல் நிறுவனமான கொமன் வெல்த் அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி அமைப்பின் (சி.எஸ்.ஐ.ஆர்.ஓ) வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் வானியற்பியல் விஞ்ஞானிதான் இந்தச் செனோவா ட்ரெம்ப்ளே.



# எங்கே போகிறோம்? 10

சில புத்தகங்களைக் கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாது. ஒரே மூச்சில் வாசிக்க வேண்டும் போல இருக்கும்.

நூலின் உணர்வுகளோடு பயணிக்கும் அனுபவம் எங்களில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அதுவே வாழ்க்கைப் பயணத்தில் பல சவால்களைச் சமாளிக்கவும் உதவுகிறது. சந்திக்கும் மனிதர்களின் போக்குகளை வெற்றிகரமாகக் கையாள உதவுகிறது.

ஒருவரிடம் ஒரு பத்திரிகையைக் கொடுத்து அதில் எந்த ரகமான செய்திகளை அவர் முந்திக் கொண்டு வாசிக்கிறார், எதைக் கருத்தில் எடுக்கிறார் என்று ஆராய்ந்தால் அவருடைய குணாதிசயங்களை அறியக் கூடியதாக இருக்கும். ஆனால் காலா காலமாகப் பத்திரிகையே வாசிக்காமல் பலர் இருக்கிறார்கள். அவர்களை எந்த ரகத்தில் அடுக்குவதோ?

அதேபோல ஒருவர் வாசிக்கத் தெரிவுசெய்யும் புத்தகங்கள் அவரது மனநிலையைக் காட்டக் கூடும்.

வாசிப்பு நேரம் நிஜ உலக பிரச்சினைகளில் இருந்து மனதுக்கு சற்றே ஓய்வை, விடுதலையைத் தருகிறது. எனவே மன அழுத்தம் கணிசமாகக் குறைகிறது.

உலகின் சிகரங்களைத் தொட்ட சாதனையாளர்கள் அனைவரும் வாசிப்பையே பிரதான ஆயுதமாக, பொழுது போக்காகக் கொண்டவர்கள்.

பலர் கூடிப் பேசுகின்றவேளைகளில் அது வெறும் வீண் பேச்சாக, ஊர்வம்பாக அமையாது, அன்றைய பத்திரிகைச் செய்திகள், மற்றும் வாசித்த, கேட்டறிந்த உருப்படியான விடயங்களைப் பற்றியதாக அமைந்தால் அந்தச் சந்திப்பு ஒரு வரமே. ஆனால் துரதிஷ்டவசமாக இன்று சந்திப்பு என்பது ஒன்றுகூடலாக, களியாட்டம் மற்றும் போதை நோக்கமாக அமைந்துவிடுகிறது. இளைஞர்களின் சிந்தனை அந்தக் கோணத்தில் பயணிக்கிறது.

ஆக்க சிந்தனை உள்ளவர்களுக்கு நேரம் போதவில்லை. யாரிடமாவது கடன் வாங்க முடியாதா என்கின்ற ஏக்கம் அவர்களிடம்.

வீண் பொழுது போக்குபவர்களைக் கண்டால் எரிச்சல் வருகிறது. நேரம் போகவில்லை என்று கவலைப்படுபவர்கள் இருக்கிறார்கள். அதை நிறுத்தி வைக்க முடியாது என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் மட்டுமல்ல உனது வாழ்க்கையும்தான்.

நீங்கள் காத்திருந்தால் நேரம் அசைவதில்லை. பிந்திவிட்டால் அது வேகமெடுக்கும். சோக வேளையிலே நேரம் உயிரை வாங்கும். சந்தோஷம் என்றால் அது விரைந்து மறைந்துவிடும்.

வலியோடு வாழுகையில் நேரம் நீளும். இப்படிப் பல பரிணாமங்களை எடுத்து ஆளுக்கு ஆள் கண்ணாமூச்சி காட்டுவது அது.

அனிதா எப்பொழுதும் பறந்து கொண்டே இருப்பாள். எதையுமே 100% திருத்தமாகச் செய்ய வேண்டும் என்பது அவளது எதிர்பார்ப்பு. அலுவலகத்திலும் வீட்டிலும் அவளது நிம்மதியைக் கெடுக்கும் உணர்வு இது. இது பல அசௌகரியங்களை, நிம்மதி இழப்புகளைத் தருவதுண்டு. இந்த அவளது எதிர்பார்ப்பு சரியானதா தவறானதா?

கணக்கு என்று எடுத்துக் கொண்டால் அது நூற்றுக்கு நூறு சரியாகத்தான் இருக்க வேண்டும். அதே விதியை வீட்டை சுத்தம் செய்யும் வேளை எடுத்துக் கொண்டால் சிக்கல் தான்.

உதாரணமாக ஒரு மோட்டார் சைக்கிளை துடைக்கும் வேலையைத் தொண்ணூறு வீதம் சுத்தமாகச் செய்ய அரைமணி நேரம் போதுமானது என்றால் அதையே நூறு வீதம் திருத்தமாகச் செய்யப் பல மணித்தியாலங்கள் தேவைப்படலாம். இதையே தினமும் ஒவ்வொரு முறையும் வெளியே போய் வந்தவுடன் திரும்பத் திரும்பச் செய்பவர்கள் அந்த நேரத்தில் உருப்படியான வேறு ஒரு வேலையைப் பார்ப்பது உசிதமானது.

இப்படிப்பட்டவர்கள் தமது வேலையிலும்சரி உதவிக்கு வருபவர்களின் செயற்பாடுகளிலும் சரி திருப்தி காண்பது இல்லை. இந்த இயல்பே அனிதாவின் வாழ்க்கையில் எதிரி ஆகின்றது. அவளைக் கண்டு அலுவலகப் பணியாளர்களும்சரி வீட்டில் கணவர் பிள்ளைகளும் சரி ஓட்டம் எடுக்கும் நிலமையே தென்படுகிறது.



எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும் தொடர்

அவள் எங்கே சென்றாலும் கண்களில் படுவதெல்லாம் ஒழுங்கீனங்களும் குப்பைகளுமே. வாழ்க்கையில் கண்முன்னால் உள்ள நேர்த்தியான பல விடயங்களை அவள் ரசிக்கத் தவறிவிடுகிறாள். பலருடைய ஆக்கபூர்வமான முயற்சிகளை அங்கீகரிக்க அவளது இந்த இயல்பு தவறிவிடுகிறது.



ஒரு பத்திரிகையை வாசிக்கவோ, ஒரு ஐந்து நிமிடம் ஓய்வு எடுத்துக் கொள்ளவோ, ஒரு விருந்தாளியுடன் சில நிமிடங்கள் பொறுமையாகப் பேசிக்கொள்ளவோ அவளுக்கு அவகாசம் கிடைப்பதில்லை. தானும் மகிழ்ச்சியுடன் இருந்து மற்றவர்களையும் மகிழ்விக்க ஏனோ அவளால் இயலவில்லை. இதுவே பலரது வாழ்க்கையாக ஆயுள் முழுவதும் அமைந்து விடுகிறது.

வாழ்க்கை ஒரு வரம். அதனை ஆனந்தமாக அனுபவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நேரம் ஒரு வரம். அதனைப் பயனுள்ள வழிகளில் வீணடிக்க வேண்டும். விட்டால் அது தானாகவே வீணாகிவிடும். உறக்கம் ஒரு வரம். அதனை எல்லோரும் நிம்மதியாகக் கடப்பதில்லை. எல்லோருக்கும் அது அமைதி தருவதில்லை. மனதினை ஒருமுகப்படுத்தி நிம்மதியாக உறங்கினாலேயே மறுநாள் நேரத்தை வினைத்திறனுடன் பயனுள்ளதாக அமைக்க முடியும்.

உங்களுடைய நேரத்தை மற்றவர்கள் வீணடிக்க இடம் கொடுக்காதீர்கள். நீங்களும் மற்றவர்களினது நேரத்தை வீணடிக்க வேண்டாம். தொலைபேசியில் அழைப்பு எடுத்து ஆயிரம் நிமிடங்கள் இலவசம் என்று அதிகம் தொணதொணப்பவர்களுக்குத் தெரிவதில்லை அந்த ஆயிரம் நிமிடங்கள் எவ்வளவு பெறுமதியானவை என்பது. அதில் ஒரு செக்கன் கூட வீணடிக்காமல் பேசி முடித்து விடுகிறார்கள்.

அதாவது இலவசம் என்பதற்காக தமதும் இன்னொருவரினதும் நேரத்தை வீணடிப்பது நியாயமாகாது.

கூட்டங்கள் குறித்த நேரத்திற்கு ஆரம்பிக்கப்படுதல் இல்லை. இதில் ஒருவரது தாமதம் பலரது பொன்னான நேரத்தை வீணடிக்க வல்லது. அங்கு பேசப்படும் அல்லது கலந்துரையாடப்படும் விடயங்கள் உருப்படியானவையாக இல்லாதபோதும் பலரது உருப்படியான நேரம் காவு கொள்ளப்படுகிறது. ஒருவர் தான் பேச மேலதிகமாக ஒரு நிமிடம் கேட்கிறார் என்றால் அவர் மண்டபத்தில் இருக்கும் ஆயிரம் பேரினது ஆயிரம் நிமிடங்கள் பற்றிய பெறுமதியைக் கருத்தில் எடுத்தாக வேண்டும்.

நாங்கள் பழக்கவழக்கங்களில் சில சமயங்களில் மிகவும் தரம் தாழ்ந்து போகிறோம். எமது வீட்டுக் குப்பையை அடுத்தவர் தலையில் கட்டி அடித்தால் சரி என்கின்ற மனப்பாங்கு மோசமாக வளர்ந்து வருகிறது. தான் பாவித்த பஞ்சுப் பட்டியை, தனது குழந்தையின் கழிவுப் பொதியை சந்தி சிரிக்க, நாய்கள் இழுத்து விளையாட வீசிவிட்டு போகின்ற மனநிலை எவ்வளவு கீழானது. இவையெல்லாம் அடுத்தவர் கண்களில் பட நாணுகின்ற பண்பாடு எங்களுடையது. சந்தியிலும் அடுத்தவர் அயலவர் வளவுகளிலும் குடும்பக் கழிவுகளே சேரும்போது, வெற்றுப் போத்தல்கள், பியர் கான்கள் குவிவது பற்றிய கவலைகள் அர்த்தம் அற்றவை ஆகி விடுகின்றன.

இன்று மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்கும் பண்பாடு அருகி வருகிறது. வகுப்பில் நியாயம் கேட்கும் ஆசிரியருக்கு வழியிலோ அவரது வீட்டிலோ வைத்துப் பாடம் புகட்டும் அளவிற்கு நிலமை மோசமடைந்து வருகிறது. பாடசாலை முடிந்து சைக்கிளில் அல்லது ஸ்கூட்டியில் வீடு திரும்பும் ஆசிரியையை தள்ளி விழுத்தி சங்கிலி அறுக்கும் அளவிற்கு துணிச்சல் இளைஞர்களுக்கு எங்கிருந்து வந்தது?

# ஆறாவது குண்டு

நெடுங்கதை
அத்தியாயம்
09

கலியுக பித்தன்

கறுத்த ஜக்கெட்டுடன் நின்றுகொண்டிருந்த ரஸ்விகாவைக் கண்டதும் பேரதிர்ச்சியில் உறைந்து போய் நின்றான் ராகுல். உள்ளே வா என்று சொல்ல அவனால் முடியவில்லை. ஒரு கொலைக் குற்றவாளியை எப்படி ஆதரிப்பது? வெளியே போ என்றும் சொல்ல முடியவில்லை. உயிர் காதலியை எப்படி துரத்துவது? தொடர்ந்தும் அமைதியாகவே நின்று யோசித்து கொண்டிருந்தான்.

நீண்ட நாளைக்கு பின் சந்திக்கும் காதலியை கட்டியணைத்து காதல் மொழி பேசவா இல்லை கொலைக் குற்றவாளியை விசாரிப்பதை போல் அவளைக் குறுக்கு விசாரணை செய்யவா என்று ராகுல் குழம்பிக் கொண்டிருக்க, ராகுலின் மார்பில் கைவைத்து அறைக்குள்ளே அவனை தள்ளி விட்டு கதவை தாழிட்டுக் கொண்டாள் ரஸ்விகா.

“நீ எதுக்கு இஞ்ச வந்த?” சீறிச் சினத்து கொண்டே கேட்டான்.

“நான் உங்க கிட்ட வராம வேற எங்க போறதாம்” குறும்பாய் சொல்லி கொண்டே ப்ரிஜை திறந்து, தண்ணீரை எடுத்து குடித்தாள்.

“கோர்ட்டுக்கு போ... ஜெயிலுக்கு போ... தூக்கு மேடைக்கு போ.... இல்லை எண்டா அடுத்த கொலை பண்ண எங்கையாவது போ....” எடுத்து எறிவதை போல் வார்த்தைகளை விட்டெறிந்தான். எறியப்பட்ட வார்த்தைகள் அவள் இதயத்தை நேரடியாக பதம் பார்த்து கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்தது. ராகுலிடம் இருந்து அந்த வார்த்தைகளை அவள் எதிர்பார்த்து இருக்கவில்லை. ராகுல் இப்படிப் பேசுவான் என்று நினைத்திருந்தால் அங்கே அவள் வந்திருக்கவே மாட்டாள்.

வார்த்தைகளைக் கடுமையாகப் பயன்படுத்திப் பேசி இருந்தாலும் அவளுடைய கண்களில் கண்ணீரைக் கண்டதும் துடித்து விட்டான். தன்னைச் சாந்தப்படுத்தி கொண்டு,

“சரி சொல்லு! என்ன விஷயம்? ஏதோ சாதிக்கிறன் எண்டு சொல்லி வெளிக்கிட்டு வந்தாய், இப்போ என்னாச்சு?” தாழ்ந்த தொனியில் கேட்டான்.

அவள் அழுகையை இன்னும் நிறுத்தவில்லை. ராகுல் அவள் அருகில் சென்று அவளுடைய நாடியை பிடித்து முகத்தை நிமிர்த்தி, நெற்றியில் முத்தமிட்டான். அந்த ஒரு முத்தம் அவளை முற்று முழுதாக சமாதானப்படுத்தி இருக்க வேண்டும். அவள் முகத்தில் மெதுவான சிறு புன்னகை தவழ்ந்தது. ராகுலை இறுக்கி அணைத்துக் கொண்டாள் ரஸ்விகா. கோபத்தில் விட்டெறியும் வார்த்தைகள், கொட்டும் கண்ணீர் துளிகளில் கரைந்து போவது காதலின் தன்மை அல்லவா.

பத்து நிமிட ஆறுதலுக்கும், அரவணைப்பிற்கும் பின் அவன் அணைப்பில் இருந்து விலகி கண்களை துடைத்து கொண்டு ராகுலையே பார்த்து கொண்டு நின்றாள் ரஸ்விகா. ராகுலின் கோபங்கள் காணாமல் போய் காதல் கண்களில் அலைமோதிக்கொண்டு இருந்தது.

“உனக்கு என்னாச்சு? உன்னை பற்றி நான் கேள்வி பட்டதெல்லாம் உண்மையா?” மனதில் கொட்டிக் கிடந்த சுமையை இறக்கி வைப்பதற்காக இந்தக் கேள்விகளை ரஸ்விகாவிடம் கேட்டான் ராகுல்.

“இதோ பார் ராகுல், நீ என்னைப் பற்றி என்ன கேள்விப்பட்டாய் என்று எனக்குத் தெரியாது. முதலில் எனக்கு நடந்ததை நான் சொல்ல அனுமதி கொடு” அவளும் தன்னிடம் இருந்த சுமையை இறக்கி வைக்கவே போராடிக் கொண்டிருந்தாள்.

‘சரி சொல்லு’ மனதுக்குள் விரக்தி இருந்தாலும்,



அதை வெளிக்காட்டாமல் சொல்ல, ரஸ்விகா தனக்கு நடந்த சம்பவங்களைச் சொல்லத் தொடங்கினாள்.

◻ ◻ ◻

தன்னுடைய ஒபிஸில் சிகரெட்டை புகைத்து கொண்டு தனியாக எதைப் பற்றியோ சிந்தனையில் ஆழ்ந்து கொண்டிருந்தான் கவிந்த். இந்த கேஸுக்காக தன்னுயிரையே விட்ட சந்துருவின் நினைவுகள் அவனைப் புரட்டி எடுத்தன. அவன் இறப்புக்குத் தானும் ஒரு பங்காளி என்ற நினைப்பு அவனைக் குற்ற உணர்ச்சியில் கூனி குறுக வைத்தது.

“நாம நல்லா இருக்கிறதுக்காக அடுத்தவனை படுகுழியில தள்ளிவிடுறது மனித இயல்பு தானே.. நானும் அதைத் தானே செய்தேன்” என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தான். நல்ல நண்பனாக, சகோதரனாக, கடமையுணர்ச்சி உள்ள ஒரு காவலனாக இருந்த சந்துருவுக்குத்தான் இழைத்த துரோகம் மன்னிப்பே இல்லாதது என்று அவன் மனச்சாட்சி அவனை உறுத்திக் கொண்டிருந்தது.

“அவனை யார் தேவையில்லாத விடயங்களைப் பார்க்கச் சொன்னது? நான் சொல்வதைத் தானே அவன் செய்திருக்க வேண்டும். பெரிய ஆளாட்டம் தானாக அந்த விசயங்களில இறங்கினது பிழைதானே... அதனால தானே அவனுக்கு இந்த நிலைமை ... என்னில எந்த தப்பும் இல்லையே...” மீண்டும் மீண்டும் தான் செய்ததை நியாயப்படுத்தும் நோக்குடனும், தன்னைச் சமாதானப் படுத்தும் முனைப்புடனும் ஏதேதோ யோசித்து புலம்பிக்கொண்டிருந்தான்.

என்னதான் அவனுடைய காவல் மூளை பலவாறாக யோசித்தாலும், அவனுடைய மனச்சாட்சி அவன் செய்த துரோகத்தை நியாயப்படுத்தவோ, அவன் தன்னைச் சமாதானம் செய்து கொள்ளவோ அனுமதிக்கவேயில்லை. இந்தக் குற்ற உணர்வுகள் அவனை வழக்கத்திற்கு மாறாக அதிக சிகரெட்டுக்களை வேகமாகப் பற்ற வைத்து புகைத்துத் தள்ளச் செய்து கொண்டிருந்தது.


இப்போது அவனது சிந்தனை எல்லாம் ரஸ்விகா மீது குவியத் தொடங்கிற்று. “அவள் எல்லா உண்மைகளையும் யாரிடமாவது சொல்லிவிட்டால் என் நிலைமை என்னவாகும்” நினைக்கும் போதே அவனுக்குள் காட்டுத்தீ ஒன்று கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. எப்படியாவது அவளை அதற்கு முதல் தீர்த்துக் கட்ட வேண்டும். இல்லையேல் குற்றவாளி கூண்டுக்குள் ஏற்றித் தண்டனை பெற்றுக் கொடுத்திட வேண்டும் என்று அவன் மூளை கங்கணம் கட்டிக்கொண்டது.

(வளரும்)

## மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்

1




சரியான விடையைக் கண்டு பிடியுங்கள்?



கதிரேசன் காத்தவராயன்

# இது அறியாமையோ? முட்டாள்த்தளமோ??

குடிதண்ணி முடிஞ்சுது. அள்ளிக்கொண்டு வாங்கோ எண்டு எத்தினை தரம் கத்திப்போட்டன். நீங்களெண்டா...! பேப்பருக்கு எழுதிக்கிழிச்சது காணும். போய்த்தண்ணி கொண்டாங்கோ... அப்பதான் தேத்தண்ணி... எங்கட தண்ணியிலை போட்டால் மாடுங்குடியாது..." எண்டு மனிசி போட்ட சத்தத்திலை ஒண்டு மட்டும் வடிவாய் விளங்கிச்சுது. மாடுங்குடியாது எண்டதிலை வாற மாடு நானாத்தானிருக்கும் எண்டதுதான் அது. சுரியப்பா வாறன் எண்டபடி எங்கட தண்ணிக் கஸ்டத்துக்காக ஒரு நாளும் ஒரு குடுக்கல் வாங்கலும் இல்லாத சாமியைத் திட்டினபடி கோயிலடிக்குப் போனன். அங்க ராசமணியர் பெரியதொரு மஞ்கள் கானுக்கு தண்ணி நிறைச்சுக்கொண்டிருந்தார்.

"ஏன்னப்பா ராசமணி! உனக்கும் தண்ணிக் கஸ்ரமோ?" எண்டு கேட்டன். "ஓ...ஓ... கதிரேசண்ணை அதை ஏன் கேக்கிறியள்? தேவையில்லாத வேலையொண்டைப்பாத்து இப்ப படுகிறன்பாடு... நல்லாக்கிடந்த கிணத்துத் தண்ணி மோட்டருக்கு படக்கெண்டு வத்துது எண்டுபோட்டு கிணத்துக்குள்ள குழாயடிச்சன்.... அது பிழைச்சுப்போச்சுது... கிரிமலைக் கடல் தண்ணி திறம் எண்டிறமாதிரி ஆகிப்போச்சுது... அப்பிடியொரு உப்பு. அடைக்கலாமெண்டிறாங்கள்! அதையுமொருக்காச் செய்து பாப்பம். அதுமட்டும் காலமை பின்னேரம் இதொரு வேலைதான்" ராசமணி தன்ரை கதையை கேள்விக்கிடமில்லாமலே முழுதுமாய் சொல்லி பெருமூச்சோடைதான் நிப்பாட்டினார்.

இந்தக் கதை நடந்துகொண்டிருக்கேக்குள்ள அங்க வந்த சின்னத்துரையர் "ஓ... ஓ... ஓமோம்... குழாய்க் கிணறடிச்சு உங்க வயலுக்குள்ள வெங்காயத்துக்கு இறைச்சவை கொஞ்சப் பேருக்கு வெங்காயம் எரிஞ்சல்லே போச்சுது... முதலிலை நல்லக்கிடந்த தண்ணி திடீரெண்டு உப்பாகிப் போச்சுதாம்... கேள்விப்படயில்லையோ?" எண்டு கேட்டார்.

இப்ப கதைக்கிறது என்ரை முறையல்லோ? அறிஞ்சு வைச்சிருக்கிற விசயங்களை அவிட்டுவிடத்தொடங்கினன். 'இஞ்சார்... உதுகள் இப்பதான் விளங்குதோ? இல்லாட்டி தண்ணியில்லை எண்ட வெப்பியாரமோ? குழாய்கிணறு நிலத்தடித் தண்ணிக்கு ஆபத்தானதெண்டு தானே தடை செய்திருந்தவங்கள். முந்தின எங்கடையாக்களும் தடைதானே செய்து வைச்சிருந்தவங்கள். இப்ப கண்ட பாட்டிலை போட்டியிலை நடக்குது. நாலடிச்சா ஒண்டு பிறீ.... மூண்ட டிச்சா ஒண்டு பிறீ எண்ட கணக்கிலையல்லே போகுது. ஒண்டு மட்டும் உண்மை கடல் கீழ்ப்பக்கத்தாலை ஊருக்குள்ள நல்லாய் வந்திட்டுது.

எங்கடை நல்ல தண்ணி வளம் எண்டிறது நிலத்துக்குக் கீழையாய் இருக்கிற தேங்கின தண்ணிதான். புதிசாய் ஒண்டும் ஊறி வாறேல்லை எண்டதை முதலிலை நாங்கள் விளங்கிக் கொள்ளவேணும் கண்டியளோ. முந்தி எங்கடை பழைய ஆக்கள் மழைகாலங்களிலை குளம்



கேணி துரவு, ஏன் முந்தி கிணறுகளிலை கட்டும் நிலமட்டத்திலைதானே, அதுகளுக்குள்ளால எல்லாம் நிலத்துக்குள்ள விட்டுவைச்ச தண்ணி தான் அது."

"இப்ப சீமெந்து வாய்க்காலை கோடிக்கணக்கிலை செலவழிச்சுக் கட்டி அதிலையும் மோசடியளைச் செய்து பெய்யிற மழைத்தண்ணி முழுதையும் கடலுக்கல்லே விடுகிறம்! அதோடை வயல் வரம்புகளும் பெலப்பாயில்லை. வயலுகளுக்குள்ளயும் தண்ணி தங்கிறேல்லையே?" எண்டு சின்னத்துரை என்ரை கருத்தை வழிமொழியிற மாதிரிச் சொன்னார்.

"வயலுகளெல்லாம் குடிமனைகளாயல்லே ஆகிப்போச்சுது? வெள்ளமெண்டால் குடியிருக்கிறதெல்லே பிரச்சனையாகிப் போகுதெண்டு ஒரு பக்கத்தாலை வெளிக்கிடுகினம்?" எண்டார் ராசமணியர். "அது சரி உங்கயொரு நிறுவனக்காறர் இலவசமாயில்லே குடும்பத்துக்கொரு குழாய்க்கிணறு அடிச்சு மோட்டரும் போட்டக் குடுக்கினமாம்... அந்த நிறுவனத்திலை உள்ள ஒராள் பெருமையடிச்சுக்கொண்டு திரியிறார், அவற்றை வியாக்கியானம் என்ன வெண்டால் சனம் தண்ணியில்லாததால கன கன தூரங்களுக்குப் போய் குடிதண்ணியெடுக்கக் கஸ்ரப்படுகுதுகள்... அதுகளுக்கு தாங்கள் செய்தது சாதாரண உதவியோ? எண்டது தான்."

"அதுக்கு உதுதான் வழியாமோ? ஏன் குடும்பத்துக்கு ஒரு குழாய்க்கிணறு எண்டதை பத்துக் குடும்பத்துக்கு ஒரு கிணறு வெட்டிராங்கிலை தண்ணியடிச்சு பங்கிட்டுக் குடுக்கலாமில்லோ எண்டு கேளாதையன்" எண்டு ராசமணியைக் குறுக்க மறிச்சுக் கேட்டன் நான்.

"உதவியெண்டிறது உடனடித் தீர்வெண்டு வெளிக்கிடுகிறதில்லை. நல்ல தண்ணியாய் தொடக்கத்திலை இருந்த கிணறுகளும் சரி குழாய்க் கிணறுகளும் சரி மாறுதுகள் எண்ட நிலையிலை உந்த நிறுவனக் கிணறுகள் மாறாதெண்டு என்ன நிச்சியம்? அதோடை அதுகளாலை இழுக்கிற இழுவையிலை இருக்கிற நல்ல தண்ணிக் கிணறுகளுமல்லே உப்பாகிப் போகப் போகுதுகள்? மொக்கனுகள்... குளம் வெட்டித் தண்ணியைச் சேர்க்கிற வழியளைப் பாப்பாரில்லை... சும்மா விலாசமடிச்சுக் கொண்டு திரியுறாங்கள்... காசை வைச்சு நீண்ட நோக்கத்திலை எதையாவது யோசிக் கத்தெரியாமல்.....!

"அண்ணை அறியாமலுக்குச் செய்யிறாங்களோ இல்லாட்டி மூளையில்லாமலுக்குச் செய்யிறாங்களோ?" எண்டார் ராசமணியர்.

"தெரியேல்லை ராசமணி.. நீயொருக்கால் அவங்களிட்டையே கேள்... இப்ப வீட்டிலை பிரச்சினையாகப்போகுது. நான் போறன்" எண்டு சொல்லிக்கொண்டே வந்திட்டன். ■

> "'இப்ப சீமெந்து வாய்க்காலை கோடிக்கணக் கிலை சிலவழிச்சுக் கட்டி அதிலையும் மோசடியளைச் செய்து பெய்யிற மழைத்தண்ணி முழுதையும் கடலுக்கல்லே விடுகிறம்!
> 'வயலுகளெல்லாம் குடிமனைகளாயல்லே ஆகிப்போச்சுது? வெள்ளமெண்டால் குடியிருக்கிறதெல்லே பிரச்சனையாகிப் போகுதெண்டு ஒரு பக்கத்தாலை வெளிக்கிடுகினம்?' "

## கனவுகளைக் கடந்து ...

மனக்கனவுகளைக் கடந்து -உன்
மனக் கதவுகளை திறந்திடு ...
வானுயர்ந்த மாளிகைக் கனவுகளை தகர்த்தெறி ,
உயரே பறந்த கல்பனா சவ்லாவாய் வாழ்ந்திடு ...
காண்போரை கவரும் அழகுக் கனவுகளை தகர்த்தெறி ,
செவிவழி கேட்போரும் வியக்கும் மேரி கியூரியாய் வாழ்ந்திடு ...
அன்பிற்காய் ஏங்கும் காதல்க் கனவுகளை தகர்த்தெறி ,
அனைவரும் போற்றும் அன்னை தெரேசாவாய் வாழ்ந்திடு ...
போகும் பாதை முழுதும் தொடரும் துன்பக் கனவுகளை தகர்த்தெறி ;
நெஞ்சம் முழுதும் உறுதி கொண்ட அஞ்செலா மேர்க்கலாய் வாழ்ந்திடு ...
கனவுகளைக் கடந்தும் வாழ்வதற்கு ,
கடமைகளுடன் பிணைந்த வாழ்க்கை காத்திருக்கையில் ...
காணும் கனவுகளும் கொஞ்சம் சாதனைகள் புரியட்டுமே ..
கண்களால் சிறைப்படுத்த காத்திருக்கிறது வானம் ...
கால்களால் அளந்திடத்தானே விரிந்திருக்கிறது பூமி ...
வீண் கனவுகளைக் கடந்து வா ...
வானம் வசப்படட்டும் உன் கைகளில் தோழா ....

மாதவி. உமாசுதசர்மா

## வங்கி ஊழியருக்கு முளைத்தது வால்...!



மனோஜ் லியோனல் ஜாசன் - ஷ்யாம் சுந்தர் ஆகிய இரண்டு புதிய முகங்கள் இயக்குநர்களாக அறிமுகமாகும் படம் குதிரை வால். இயக்குநர் பா.இரஞ்சித் இந்தப் படத்தைத் தனது நீலம் புரொடக் ஷன்ஸ் மூலம் வெளியிடுகிறார். மெட்ராஸ் படப் புகழ் கலையரசன், 'காலா' படம் மூலம் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமான அஞ்சலி பாட்டீல் ஆகியோர் இதில் இணைந்து நடித்திருக்கிறார்கள். இந்தப் படத்தை, விக்னேஷ் சுந்தரேசன் தயாரித் திருக்கிறார். இப்படியிருக்க, கதாநாயகனின் நிழல் சுவரில் விழும்போது, அவருக்கு வால் ஒன்று இருப்பது போன்ற காட்சியைச் சித்திரிக்கின்ற வகையில் இந்தப் படத்தின் முதல் தோற்றம் வெளியாகிப் பேசு பொருளாகியிருக்கிறது. படத்தின் கதாநாயகன் ஒரு வங்கி ஊழியர். தனித்து வாழ்பவர். புலன்களை அடக்கிக்கொண்டு வாழப் பழகியிருக்கும் ஒரு முதலாளித்துவ சமூகத்தில், கடிகார முள்களுடன் ஓடிப் பழக்கப்பட்ட இளைஞன். அவர் தனக்கொரு வால் முளைத்திருப்பதாக எண்ணிக்கொள்கிறார். அது உளவியல் சிக்கலா அல்லது அரசியல் சிக்கலா என்பதே கதை என்றிருக்கிறார் இதன் இயக்குநர்களில் ஒருவர்.

லயன் காமிக்ஸ் முத்து காமிக்ஸ்
Lion Comics & Muthu Comics

உங்கள் மனங்கவர்ந்த
காமிக்ஸ் புத்தகங்கள்!
இலங்கையிலும்
விற்பனையாகின்றன!




யாழ்ப்பாணத்தில்
பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்

கொழும்பில்
பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி,
பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944

https://www.facebook.com/tamilcomics/

லயன், முத்து காமிக்ஸ் குழும வெளியீடுகளை அனுமதியின்றி அச்சுவடிவிலோ மின்னிதழ் வடிவிலோ விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் காப்புரிமச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்! – வெளியீட்டாளர்




| Sizes (in Inches) | M | L | XL |
|---|---|---|---|
| Chest | 20 | 21 | 22 |
| Height | 27 | 28 | 29 |

https://www.facebook.com/UniqueteesSriLanka

Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)
விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)

# காதல் போல் இல்லை சாதனை!

அவன் செல்போனில் கவிதை முளைத்தது
கண்களால் அதில் விழுந்தாள் அந்தப் பட்டாம்பூச்சி
    நீ புன்னகைத்தாய்
    பூக்களாகின இலைகள்!
அடிக்கடி கவிதை அனுப்புறானே... யாரவன்?
அந்தத் தாரகை மலர் கோபம் கசிந்தாள்
    மிக அழகான விச மலர்
    உன் கண்கள்தான்!
    நெப்போலியன்கூட
    தோற்றுப்போவான் அதனிடம்!
டிலீட் பண்ணாமல் அவனுடைய
வரிகளை அவள் வைத்திருந்தாள்
செல்போன் மீண்டும் கவிதை கொண்டு வந்தது
    பூமிக்கு பூங்காக்கள் தேவையில்லை
    நீ மட்டும் போதும்!
''யாரிவன்?''
பேருந்துக்காக அந்த ரோஜாப் பூ பூத்துநின்ற விநாடியில்
அவன் அவளில் வடிந்துபோனான்
பேருந்து வந்தது... நின்றது....
அந்த விண் மீன் தோட்டத்தையும் கொண்டு சென்றது
அந்த நறு மணத் தென்றலுக்கு ஆசனம்
வழங்கினான் அவன்
''தைங்ஸ்''
அந்தத் தேவதைப் பூவின் வார்த்தைகளால் அவனுக்குள்
பில்லியன் தொன் நறுமணம் உண்டானது
கொடுத்தான் பைலோடு சேர்ந்து இதயத்தையும்
இப்படி அடிக்கடி...
விழிகளால் விழுந்து.... வார்த்தைகளால் நுழைந்து....
மனங்களால் மலர்ந்து அவனுக்குள் காதல் வளர்ந்தது
''சாதிப்பவர்களை எனக்குப் பிடிக்கும்''
அந்த மயில் அழகி மனசு காட்டினாள்
    ''சாதனை செய் என்றாய்
    உன்னை காதலிப்பதைவிடவா?''
    என் உயிரில் விளைந்து.... என் குருதியில் கலந்து....
    என் உணர்வில் வளர்ந்திருப்பது நீதான்!
    சுவாசிக்க மிகச் சிரமமாக இருக்கிறது
    உன்னைப் பார்க்காத நேரங்களில்!
    காதல் விதையல்ல முளைப்பதற்கு...
    காதல் புதையல்ல அகழ்ந்து எடுப்பதற்கு...
    காதல் சதையுமல்ல தொட்டுணர்வதற்கு....
    காதல் உயிருக்குள் உயிர் பெய்யும் மழை!
    பூவைக்கூட நான் முத்தமிடுவதில்லை
    அது உனக்கானது என்பதால்!
    தென்றல் என்னில் பட்டதும் அது உடைந்து போகிறது
    மொட்டு மலர்கள் என்னைக் கண்டதும் அவிழ்ந்து விடுகின்றன
    நீ எனக்குள் நுழைந்திருப்பதால்...!
    எனக்குள் மலர்களை விடவும் வாசம்
    உன்னை நினைக்கத் தொடங்கியதிலிருந்து!
    மின் மினிக்குள் வசிக்க... பனித்துளிக்குள் உறங்க...
    பட்டாம்பூச்சிகளோடு பறக்க...
    எனக்குள் விருப்பங்கள் பூத்தாலும் மிக... மிக... மிக...
    விருப்பமானவள் நீ மட்டும்தான்!
    சாஜகான்கூட மிகச் சிறந்த சாதனையாளன்
    காதலுக்காக மாளிகை கட்டியதால்
    உன் பெயர் சொன்னேன் பூவிடம்
    உன் கூந்தல் கேட்டது அது!
    மொழி உயிருக்குள் இருந்து வடிகிறபோது
    கவிதையாகிவிடுகிறது
    காதல் துயருக்குள் விழுகிறபோதும் கவிதையாகிறது
    கண்ணே உன்னை எழுதிய காகிதமும்
    ரோஜாவாகி விடுகிறதே!
    இப்படி.... இப்படி....
    என் உயிரைக் காகிதத்தில் விதைக்க... விதைக்க...
    என் உணர்வுகளை எழுது கோல் உளி கொண்டு செதுக்க...
    வாழ்கிறேன் நான் நீ...
    தவறவிட்ட உன் கைக்குட்டைகளோடு!
எனத் தன்னைக் காகிதத்தில் புதைத்தான் அவன்
அன்று
மாலைப் பொழுதில் அந்த மலர்த் தேனி அவனைத் தேடி வந்தாள்
அவன் கண்கள் தித்தித்தன
மனசுக்குள் லட்சம் நிலாக்கள் உதித்தன
''என் பேத் டே வாழ்த்தைப் பாருங்க!'' அவன் சொன்னான்
    நட்சத்திர ஒளி கறந்து பூக்கள் நறுமணம் பிழிந்து
    ஒரு சொல் செய்தேன் வாழ்கக காதலி என்று!
    இப்படிக்கு உன் காதலன்''
தீப் பிடித்தது அவன் கண்களில் மட்டுமல்ல
அவன் உயிரிலுந்தான்

- ராஜகவி ராகில்.



# தகிக்கும் கோளில் தெரியும் உயிர்!

■ பி.ஆனந்த்

இந்தப் பேரண்டத்தில் எண்ணுக்கணக்கற்ற நட்சத்திரங்கள் அல்லது சூரியன்கள் உள்ளன. அவற்றில் பலவற்றுக்குச் சுற்றிவரும் கோள்களும் உள்ளன என்பதை அறிவியல் உறுதிப்படுத்தியிருக்கிறது. அப்படியிருக்கும்போது பூமியைத் தவிர்த்து வேறு பல கிரகங்களிலும் உயிர்கள் இருக்கக்கூடும் என்கிற எதிர்ப்பார்ப்பு மனிதர்களிடம் நிறையவே உண்டு.

''இவ்வளவு பெரிய பேரண்டத்தில் `பூமியில் மட்டும்தான் உயிர்கள் இருக்கின்றன' என்ற கூற்றுக்கு வாய்ப்பே இல்லை!'' என்கிற அறிவியல் முடிவின்படி இந்தப் பேரண்டத்தில் எங்காவது உயிர்கள் இருக்கின்றனவா என்கிற ஆய்வுகள் பல காலமாக நடக்கின்றன.

நமது சூரிய மண்டலத்திற்குள் பூமிக்கு அடுத்தபடியாக உயிர்கள் வாழக்கூடிய கிரகம் என்று செவ்வாயைக் கணித்து, அங்கு தண்ணீர் இருக்கிறதா அதனடிப்படையில் அங்கு ஏதாவது உயிரினங்கள் இருக்கின்றனவா என்பது தொடர்பான ஆய்வுகளில் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா உட்பட பல நாடுகளும் ஈடுபட்டு வருகின்றன.

வேற்றுக் கிரங்களில் இருக்கும் மனிதர்களிடம் இருந்து எங்காவது எப்படியாவது செய்திகள் பூமியை எட்டக்கூடும் என்கிற எதிர்ப்பார்ப்பில், அத்தகைய செய்திகளைப் பெறுவதற்கான வானலை உள்வாங்கிகள் (ரிசீவர்கள்)கூட ஆங்காங்கே பொருத்தப்பட்டிருக்கின்றன.

இப்படி மனிதர்கள் அண்டம் முழுவதும் வேறு உயிரினங்களைத் தேட, உயிர்கள் வாழ்வதற்கே சாத்தியமில்லை என்று மனிதர்கள் புறக்கணித்த ஒரு கோளில் அதற்கான வாய்ப்புக்கள் இருக்கக்கூடும் என்று ஆய்வாளர்களால் திடுதிப்பென அறிவிக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது

நமது சூரிய மண்டலத்தில் புதனுக்கும் பூமிக்கும் நடுவில் இருக்கும் கோளான வெள்ளியில் உயிரினங்கள் இருக்கலாம் என்பதற்கான அறிகுறிகளைக் கண்டறிந்திருப்பதாக அறிவியலாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். நச்சு வாயுக்கள் நிறைந்த வெள்ளியின் வளிமண்டலத்தில் உயிர்கள் இருப்பதற்கான முதல் அறிகுறி இது என்கிறார்கள் அவர்கள்.

இந்த அறிகுறியை வைத்துக்கொண்டு வெள்ளியில் உயிர்கள் இருக்கின்றன என்கிற முடிந்த முடிவுக்கு வந்துவிட முடியாது. ஆனால், சூரியனுக்கு மிக அருகில் இரண்டாவது கோளாகச் சுற்றிவரும் வெள்ளியில் வெப்பநிலை உயிர்கள் வாழ முடியாதளவுக்கு அதிகம் என்கிற கணிப்பீட்டை இந்தப் புதிய கண்டுபிடிப்பு உடைக்கின்றது.

> பொஸ்பெய்ன் வாயு இருப்பதான இந்தப் புதிய கண்டுபிடிப்பு நேரடியாக வெள்ளியில் உயிர்கள் இருப்பதை உறுதிப்படுத்தவில்லை என்றாலும், இது ஒரு முக்கிய கேள்வியை ஆராய்ச்சியாளர்கள் இடையே எழுப்பியிருக்கிறது.

சில நூறு டிகிரியில் தகிக்கும் வெப்பம், நச்சு வாயுக்கள், கந்தக அமிலம் (**sulfuric acid**) நிறைந்த மேகங்கள் என உயிர்கள் வாழ வாய்ப்பே இல்லாத கிரகமாகவே வெள்ளி நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்தது. மற்ற கிரகங்களில் இருக்கும் உயிர்களைத் தேடும் முயற்சியில் தீவிரமாக இருக்கும் ஆராய்ச்சியாளர்கள் பூமிக்கு பின்னிருக்கும் செவ்வாய் மற்றும் அதன் நிலவுகளில் உயிர்களைத் தேடி வந்தபோதும் பூமிக்கு முன்னிருக்கும் வெள்ளியில் ஒரு போதும் அதனைத் தேடியதில்லை.

இப்போதும் யாரும் நேரடியாக வெள்ளியில் நுண்ணுயிரிகள் இருப்பதைக் கண்டறியவோ அவற்றை இங்கிருந்து படமெடுக்கவோ இல்லை. ஆனால், சக்திவாய்ந்த தொலைநோக்கிகள் மூலம் பொஸ்பெய்ன் (**Phosphine**) என்னும் வேதியல் வாயு வெள்ளியின் வளிமண்டலத்தில் இருப்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இங்கிலாந்தின் கார்ஃடிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜேன் க்ரீவ்ஸ் மற்றும் குழுவினர் இந்தக் கண்டுபிடிப்பை வைத்துத்தான் வெள்ளியில் உயிர்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கிறதென நேற்று ஒரு குட்டி ஆய்வறிக்கை மூலம் தெரிவித்திருக்கின்றனர்.

'இதை வைத்து உயிர்கள் இருக்கிறதெனச் சொல்வதை எங்களால் முழுவதுமாக ஏற்று;க கொள்ள முடியவில்லை என்றாலும், இந்தக் கண்டுபிடிப்புக்கு வேறு எந்த விளக்கங்களும் தற்போது இல்லை!' என்கிறார் அவர். அமெரிக்காவின் நோர்த் கரோலினா பல்கலைக் கழகத்தின் அறிஞர் அவர்.

ஆனால், இவர்களின் இந்த தர்க்க நியாயக் கோட்பாடுகளின்படியான வெள்ளியில் உயிரினம் என்பதை ஏற்க மறுக்கும் அறிஞர்களும் இருக்கவே செய்கிறார்கள். இந்த வாயு வெள்ளியின் இன்னும் பெரிதும் அறியப்படாத புவியியல் அமைப்பின் எதோ ஒரு விசித்திர தன்மையின் காரணமாக உருவாகியிருக்கலாம் என்கிறார்கள் அவர்கள்.



ஒரு வாயு இருப்பதாலேயே ஒரு கோளில் உயிரினங்கள் இருந்துவிடமுடியுமா என்றுதானே நினைக்கிறீர்கள்! பொஸ்பெய்ன்னுக்கும் உயிர்களுக்கும் என்ன தொடர்பு?

இந்த வாயு, வாழும் உயிர்கள் இல்லாமல் இயற்கையாக உருவாகச் சாத்தியக்கூறுகளே இல்லை என்கிறார்கள் அறிவியலாளர்கள். அதனால் வெள்ளியில் நிச்சயம் எதோ ஒரு வடிவில் நுண்ணுயிர்களாவது வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என இந்த ஆய்வு மூலம் நிரூபிக்க முயற்சிக்கிறார்கள்.

பூமியில் பொஸ்பேய்னை (**Phosphine**) மனிதர்கள் உள்ளிட்ட பாலூட்டிகளின் குடல்களில் பார்க்கலாம், பென்குயின் மற்றும் சில உயிரினங்களின் கழிவுகளிலும் பார்க்கலாம், குடற்புழுக்களில் பார்க்கலாம். காற்றில் உயிர் வாயு (ஒக்சிசன்) குறைவாக இருக்கும் பகுதிகளில் வாழும் உயிரினங்களிடத்தில் இதை அதிக அளவில் பார்க்க முடியும். இது நச்சுத் தன்மை உடைய வாயுதான். இதைத் தொழிற்சாலைகளில்கூட உருவாக்கிவிட முடியும். ஆனால் உயிர்கள் இன்றி அதுவாக உருவாகாது. இந்த ஒரு தர்க்க நியாயத்தை வைத்துத் தான் போல் பிரியன் என்கிற கோள் அறிவியல் அறிஞர் வெள்ளியில் உயிர்கள் இருக்கும் என்று நிரூபிக்க முயற்சிக்கிறார்.

வெள்ளியில் இருக்கும் தட்பவெப்ப சூழலில் அதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு, அதுவும் இந்த அளவு அதிகமாக பொஸ்பெய்ன் (**Phosphine**) இருக்கிறதென்றால் அது உயிர்களின் வேலையாகவே இருக்கக்கூடும் என்கின்றார் இந்த வாயுவை வெள்ளியில் கண்டுபிடித்தவரான ஜோன் க்ரீவ்ஸ்.

வெள்ளியில் இந்த வாயு உருவாக வேறு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன என அனைத்து கோணத்திலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்கிறார். 'நாங்கள் தவறவிட்ட விஷயங்கள் ஏதேனும் இருந்தால் தெரிவியுங்கள். அதை ஊக்குவிப்பதற்கே எங்கள் ஆராய்ச்சியை மொத்தமாகப் பொதுவெளியில் வெளியிட்டி ருக்கிறோம்' எனத் தெரிவித்திருக்கிறது அவரது குழு.

முதலில் ஹவாயில் இருக்கும் ஜேம்ஸ் கிளெர்க் மேக்ஸ்வெல் தொலைநோக்கி வழியாகவே வெள்ளியில் பொஸ்பெய்ன் (**Phosphine**) இருப்பதைக் கண்டுபிடித்தது இவரது குழு. சிலியில் இருக்கும் ஏஎல்எம்ஏ (**ALMA**) வானொலித் தொலைநோக்கி மூலம் இதை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

வெள்ளியின் நில மட்டத்தில் இருந்து **50-60** கிலோமீற்றர் உயரத்தில் இந்த பொஸ்பேய்ன் (**Phosphine**) வாயுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இன்னும் சில ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இந்தக் குழுவினர் திட்டமிட்டிருந்த போதும் கொரோனா சூழல் தடங்கலாக அமைந்திருக்கிறது.

பொஸ்பெய்ன் வாயு இருப்பதான இந்தப் புதிய கண்டுபிடிப்பு நேரடியாக வெள்ளியில் உயிர்கள் இருப்பதை உறுதிப்படுத்தவில்லை என்றாலும், இது ஒரு முக்கிய கேள்வியை

(20ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பாடியும் யாழ்ப்பாணக் கலாசார மண்டபமும்



கமலநாதன்

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். சுன்னாகம் தெற்கு சபாபதிப் பிள்ளை நலன்புரி முகாம் மற்றும் மயிலிட்டி வடக்குக் கிராமக் கோட்டுப் பகுதி ஆகியவற்றில் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற வீடுகள் குறித்தும், பொம்மைவெளி - வசந்தபுரம் பகுதியில் கடந்த அரசால் தொடங்கப்பட்ட வீடுகளுக்கு மிகுதி நிதி வழங்கிப் முழுமை செய்வது தொடர்பிலும் அவர் ஆராய்ந்தார்.

பொம்மைவெளி மக்கள் தமக்கும் வீடுகள் கேட்டு நடத்திய கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஒரு சிறுவன் "மகிந்த மாமா எங்களுக்கும் வீடு கட்டித்தர மாட்டீர்களா?" என்று எழுதிய பதாகையைப் பிடித்தபடி இருந்ததைப் பார்த்த தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச உடனடியாக இந்திக்க அனுருத்தவை இது தொடர்பாக ஆராய்வதற்காக அனுப்பி வைத்தார் என்கிற அடைமொழியின் கீழ் அமைச்சரின் வருகை என்ற இந்த நாடகம் நடத்தப்பட்டது.

அதன் பின்னர் 'இந்திய அரசால் பெருந் தொகை நிதிச் செலவில் அமைக்கப்பட்டு யாழ்ப்பாணம் மாநகரசபையின் வெள்ளையானையாகக் காத்திருக்கிறது என்று விமர்சிக்கப்படும் யாழ்ப்பாணக் கலாசார மண்டபத்தையும் அமைச்சர் பார்வையிட்டதுடன் அந்தக் கலாசார மண்டபத்தைப் பராமரிப்பது, எதிர்காலத்தில் அந்த மண்டபத்தை எந்தெந்தத் தேவைகளுக்கெல்லாம் பயன்படுத்துவது போன்ற பல விடயங்களையும் அவர் ஆராய்ந்தார். வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் இது தொடர்பான கூட்டம் நடந்தது. இந்தக் கலந்துரையாடலில் ராஜாங்க அமைச்சர், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் சங்கர் பாலச்சந்தர், 2014ஆம் ஆண்டில் இந்த மண்டபத்தை அமைப் பதற்கான ஒப்பந்தத்தை தொடங்கிய அப்போதைய பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்சவுடன் இணைந்து இந்திய அரசுடனான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட திட்டப் பணிப்பாளர் எந்திரி எஸ்.கே.லியனகே, யாழ்ப்பாண மாநகர சபை நகரபிதா ஆர்னோல்ட், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோரும், துறைசார் அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

### கைவிரித்தது மாநகர சபை

கட்டுமான வேலைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் கையளிக்கப்படுவதற்குத் தயாராக உள்ளது யாழ்ப்பாணக் கலாசார மண்டபம். ஆனால் இந்த மண்டபத்தைப் பராமரிப்பதற்கு மாதம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 40 லட்சம் ரூபாய் தேவை என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. அவ்வளவு பெரிய தொகையை யாழ்ப்பாணம் மாநகர சபையால் செலவிட முடியாது என்பதே களநிலை. அதேநேரம் அந்தக் கட்டடத் தொகுதியை கொழும்பு மைய அரசிடம் கையளிப்பதற்கும் அது தயாரில்லை.

கொழும்பின் சிறப்புக் கவனிப்பு அல்லது இந்தியாவின் துணையுடன் அதனைத் தானே நிர்வகிக்க வேண்டும் என்றுதான் மாநகர சபை ஆசைப்படுகின்றது. இது விடயம் தொடர்பாக அண்மையில் கொழும்பு சென்ற முதல்வர் ஆர்னோல்ட் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவைச் சந்திக்க முயன்று முடியாமல்போன நிலையில் அவரது தனிப்பட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்துத் திரும்பியிருந்தார். யாழ்ப்பாணத்தில் ஆளுநர் தலைமையில் இது தொடர்பில் ஒரு கூட்டம் நடத்தலாம் என்று அவருக்கு வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில்தான் அமைச்சர் இந்திக்க தலைமையில் இந்த விவகாரம் யாழ்ப்பாணத்தில் ஆளுநர் அலுவலகத்தில் ஆராயப்பட்டது. மேற்படிக் கலாசார மண்டபத்தைப் பராமரிக்கும் பொறுப்பு யாழ்ப்பாண மாநகர சபையிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்ற நிலையில், அதைப் பயன்படுத்துவதற்கான வர்த்தகத் திட்டம், பராமரிப்புப் பொறிமுறை என்பன பற்றி மாநகர முதல்வரிடம் அமைச்சர் வினவினார். ஆனால் அத்தகைய எந்தத் திட்டமும் இல்லாமல் கூட்டத்திற்கு வந்திருந்த ஆர்னோல்ட் கையை விரித்தார்.






இந்தக் கலந்துரையாடல் பற்றி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அதற்கான திட்டம் எதையும் மாநகரசபை இதுவரை தயாரித்திருக்கவில்லை என்பது அப்போது தெரியவந்தது.

இந்தக் கலாசார மண்டபத்தைப் பராமரிப்பதற்கு 20 ஊழியர்கள் புதிதாக நியமிக்கப்பட வேண்டும் எனவும், மேற்படி மண்டபத்தை அமைப்பதற்கு ஏற்கனவே செலவிடப்பட்டிருக்கும் மின்சாரக் கட்டணத்தைக்கூடச் செலுத்தும் நிலையில் மாநகர சபை இல்லை எனவும் மாநகர முதல்வர் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

பதினொரு மாடிகளைக் கொண்ட கலாசார மையம் ஒன்றையும் அதைச் சுற்றிய அழகான கட்டுமாணங்களையும் நிறுவித் தந்தமைக்கு இந்திய அரசுக்கு நன்றி கூறிக் கொள்வதுடன் இது ஒரு விலை மதிக்க முடியாத சொத்து என்பதை விட இந்தியா - இலங்கை நாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வு, ஒற்றுமை, கலாசாரப் பரிமாற்றம் போன்றவற்றின் அடையாளமாகவும் அமைந்துள்ளது" எனக் கூறினார் அமைச்சர்.

### பல திட்டங்களை வகுக்க முடியும்

விரைவில் திறக்கப்படவுள்ள இந்தக் கலாசார மண்டபத்தில் கலாசாரப் பிண்ணியைக் கொண்ட பல விடயங்களை உருவாக்குவதன் மூலமும் அது சார்ந்த பொழுது போக்கு விடயங்கள், பாரம்பரிய உணவுகளைத் தயாரிக்கக் கூடிய உணவகங்கள், பதினொராவது மாடியிலிருந்து யாழ் நகரின் அழகை இரசித்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை யாழ்ப்பாண மாநகர சபை உருவாக்கும் பட்சத்திலும் இந்த மண்டபத்தைப் பராமரிப்பது ஒரு பிரச்சினையாக இருக்கப் போவதில்லை. என்றபோதும் அதற்கான திட்டங்கள் எவையும் யாழ். மாநகர சபையால் அந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்படவில்லை.

"இந்தக் கலாசார மண்டபத்தைப் பராமரிப்பதற்கான ஒரு குழுவை அமைத்துப் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம் (சீன அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்டது) மற்றும் ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை (ஜப்பான் அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்டது) போன்றன நிர்வகிக்கப்படுவதுபோல இதனையும் நிர்வகிக்க முடியும்." என்று ராஜாங்க அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

### ஆளுநரின் கருத்து

இதுவிடயத்தில் கருத்துத் தெரிவித்த வட மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ், "கொழும்பிலுள்ள உலக வர்த்தக மையம் ஆரம்பிக்கப்பட்டபோது அது நஷ்டத்திலேயே இயங்கியது. பின்னர் அந்தக் கட்டடத்தில் ஏற்படுத்தப்பட்ட வசதி - வாய்ப்புகள், அதன் பயன்பாடுகள் பற்றிப்

(20 ஆம் பக்கம் பார்க்க)

**கலாசார மண்டபத்தைப் பராமரிக்கும் பொறுப்பு யாழ்ப்பாண மாநகர சபையிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்ற நிலையில், அதைப் பயன்படுத்துவதற்கான வர்த்தகத் திட்டம், பராமரிப்புப் பொறிமுறை என்பன பற்றி மாநகர முதல்வரிடம் அமைச்சர் வினவினார். ஆனால் அத்தகைய எந்தத் திட்டமும் இல்லாமல் கூட்டத்திற்கு வந்திருந்த முதல்வர் கையை விரித்தார்.**




கே.நாதன், மட்டக்களப்பு.

# அதே பேய் இது...?

4 கதை

எனக்கு அப்போது 17 வயது. காத்தான்குடியில் கொங்கிறீட் குழைக்கும் வேலைக்குச் சென்றுவிட்டு அதிகாலை 4.30 மணியிருக்கும் எனது வீட்டை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தேன். முதன்மை வீதியிலிருந்து இறங்கி எனது வீடு நோக்கிய ஒழுங்கைக்குள் நுழைந்து நடந்துகொண்டிருக்கும்போது அந்த ஒழுங்கையின் மறு முனையில் - எனக்கு எதிரில் ஒருவர் என்னை நோக்கி வந்துகொண்டிருப்பதை அவதானித்தேன். இந்த நேரத்தில் யாராக இருக்கும் என்ற சிந்தனையிருந்தாலும் தூக்கக் கலக்கத்தில் நான் நடந்துகொண்டிருந்தேன். அவரும் வந்து கொண்டிருந்தார்.

நான் எனது வீட்டுப் படலையைத் திறப்பதற்கு முன்னர், எதிரில் வந்தவர் எங்கள் படலைக்கு முன்னதாகவுள்ள படலைக்கு அருகில் நிற்பதைக் கண்டேன். அந்த வீட்டில் ஓர் அம்மா தூக்குப் போட்டுச் செத்திருந்ததால் அந்த வீடு யாரும் வாழாத வெறும் வீடாக நீண்டகாலமாக இருந்து வருகிறது என்று எனது அம்மா அடிக்கடி சொல்லுவா. அந்த வீட்டுக்குள் கொள்ளி (விறகு) முறித்துச் சத்தம் கேட்கும், ஆள் நடமாடுவது போல, மூச்சு விடுவது போல எல்லாம் ஆள் அரவம் இருக்கும் என்றும் சொல்லுவார். ஆனால் அப்படி எதையும் நான் கேட்டதில்லை.

நான் படலையைத் திறப்பதற்குத் தயாராக நின்றபோது அந்த உருவத்தைத் தெளிவாகக் காணமுடிந்தது. அதன் கண்கள் சிவப்பாக இருந்தன. தலை உருண்டையாக அல்லாமல் கூராகவும் மெலிதாகவும் இருந்தது. கால்கள் ஒல்லியாக இருந்தன. நான் படலையைத் திறந்து வீட்டின் உள்ளே போகும்வரை அந்த உருவமும் என்னைப் பார்த்துக் கெண்டு நின்றதைக் கவனித்தேன். தவிர அது என்னை நோக்கி வரவில்லை. இப்போது மெல்லப் பயம் எழுந்தது. நான் படலையைச் சாத்திவிட்டு உள்ளே போய்விட்டேன்.

பல வருடங்கள் கழிந்தன. அப்போது நான் வாகரையில் இருந்தேன். ஒருநாள் இருள் சூழ் நேரத்தில் சைக்கிளில் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். சைக்கிளுக்கு முன்னால் குறுக்காக ஓர் உருவம் செல்வதைக் கண்டேன். அந்த உருவம் வீதியைக் கடந்த இடத்தில் சைக்கிளை நிறுத்திக் குறுக்காகப் போனது யார் என்று பார்த்தேன். வீதிக்கு அருகிலிருந்த பற்றைக் குள்ளிருந்து ஓர் உருவம் எழுந்தது. அது நான் பதினேழு வயதில் ஆரையம்பதியில் அதிகாலையில் கண்ட உருவத்தை ஒத்ததாக இருந்தது. அப்போது எனக்கு 38வயது. நான் பயப்படவில்லை. அந்த உருவம் ஒளித்திருந்து எழும்பிய பற்றையைப் பார்க்கலாம் என்று மறுநாள் காலையில் போனேன். அந்த உருவம் ஒளிந்திருந்த இடத்தில் எந்தப் பற்றையையும் காணவில்லை. அந்த இடம் வெட்டையாக இருந்தது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சில ஆவிகள் கண்ணில் பட்டாலும் அவற்றுக்கு மற்றவர்களைத் தாக்கும் வல்லமை இருப்பதில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த இரு தடவைகளும் நான் கண்ட உருவங்கள் பேய் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இருக்கவில்லை.



KUDIL PRODUCT
ECO-FRIENDLY

கமுகு மடல் தட்டுக்கள் விற்பனைக்கு

12" - Rs.360 - 12 தட்டுக்கள்
10" - Rs.300 - 12 தட்டுக்கள்
08" - Rs.240 - 12 தட்டுக்கள்
06" - Rs.192 - 12 தட்டுக்கள்

மேலும் தொடர்புகளுக்கு
No. 74/1, A35, Visvamadu.
kudilproduct@gmail.com
+94 71 7777 559



# சிவப்பு அரிசிப் புட்டு!



நெல்லை அவித்து உடைத்தால் அது குத்தரிசி. நெல்லை நேரடியாக உடைத்தெடுத்தால் அது சிவப்பு அரிசி. அதைச் சிறிதளவில் தீட்டி எடுத்தால் தீட்டல் என்றும், நெல்லை உடைத்து அரிசியை அப்படியே எடுத்தால் உடையல் என்றும் சொல்கிறோம். இந்தச் சிவப்பு அரிசி ஊட்டம் நிறைந்த உணவாகும். இவ்வகை அரிசிகளைத் தாண்டி வெள்ளை நிற அரிசிகளுக்கே இன்றைக்கு முக்கியத்துவம் அதிகரித்து விட்டாலும் எமது முன்னோர்கள் சிவப்பு அரிசிச் சோற்றைத் தமது அன்றாட உணவாக்கி வந்தனர். அந்த அரிசியில் படிந்துள்ள தவிட்டை நீக்காமல் அப்படியே உண்டனர். இன்றைக்கு அந்த நிலமை தலைகீழாகிவிட்டாலும் சிற்சில இடங்களில் சிவப்பு அரிசியைச் சோறாக்கியும், கஞ்சி தயாரித்தும் அருந்தும் ஒரு தொகையினர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனாலும் முன்னைய காலங்களை விடவும் இந்தச் சிவப்பு அரிசிப் பயன்பாடு அருகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இப்படியிருக்கச் சிவப்பு அரிசியில் பிட்டுத் தயாரிப்பது எப்படி என்று இம்முறை பார்ப்போம். நாம் பிட்டு அவிக்கும்போது கோதுமை மாவுடன் சிறிதளவு சிவப்பு அரிசி மாக் கலப்பதே வழமை. ஆனால் இந்தப் பிட்டு சிவப்பு அரிசியில் மாத்திரம் தயாரிப்பது.

### தேவையான பொருள்கள்

சிவப்பு அரிசி - 2 கப், தூளாக்கப்பட்ட சர்க்கரை அல்லது பனைவெல்லம் - தேவையான அளவு, துருவப்பட்ட ஒரு தேங்காய், வாழைப்பழம் தேவையான அளவு, உப்பு தேவையான அளவு.

எப்படிச் செய்வது?

சிவப்பு அரிசியைத் தண்ணீரில் இரண்டு மணி நேரம் ஊறவைத்து எடுத்துப் பின்னர் அதை உலர்த்தி மாப் பதத்திற்கு அரைக்கவும். அந்த மாவை இலேசாக வறுத்து, உப்பு, தண்ணீர் ஆகியன சேர்த்து, சிறிது ஈரப்பதத்தோடு பிட்டுப்போல பிசையவும். பின்னர் அதைப் பிட்டுக்குழாயில் முதலில் சிறிது தேங்காய்த் துருவல், பின்பு சிறிது பிட்டு மாவு, என்று ஒவ்வொன்றாக மாறி மாறிச் சேர்த்து நிரப்பி ஆவியில் 15 நிமிடங்கள் வேகவைத்து எடுக்கவும். இறக்கிய சூட்டோடு அதன் மீது சர்க்கரை தூவி, வாழைப் பழத்துடன் பரிமாறவும்.

# 'ஹல்க்' கிண்டல்...!

2011ஆம் ஆண்டு வெளியான 'கப்டன் அமெரிக்கா' 'த பர்ஸ்ட் அவெஞ்சர்' படத்தின் மூலம் மார்வெல் சினிமா உலகில் அறிமுகமானவர் க்றிஸ் எவான்ஸ். கடந்த ஆண்டு வெளியாகிப் பெரும் வெற்றியைப் பெற்ற 'அவெஞ்சர்ஸ் எண்ட் கேம்' படத்தோடு மார்வெல் படங்களிலிருந்து தான் ஓய்வு பெறுவதாக அறிவித்தார் அவர். அதன்பிறகு கடந்த ஆண்டு 'நைவ்ஸ் அவுட்' என்ற படத்திலும் நடித்திருந்தார். இந்த நிலையில் கீச்சகப் பக்கத்தில் அவருடைய பெயர் திடீரெனப் பிரபலம் ஆகிக் கொண்டிருந்தது. அதற்கு முந்தைய தினம் அவர் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது நண்பர்களோடு நடத்திய ஒரு நேரலையின்போது அவருடைய கைபேசியில் ஓர் ஆபாச ஒளிப்படம் இருந்துள்ளது. இதைக் கண்டுவிட்ட சிலர் அதை சமூக வலைதளங்களில் பரப்பியுள்ளனர். பரப்பிய சிறிது நேரத்தில் அந்த நேரலை வீடியோவை க்றிஸ் எவான்ஸ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்திலிருந்து நீக்கினார். ஆனால் சில மணி நேரங்களிலேயே அது குறித்த பதிவுகள் சமூக வலைதளங்களை ஆக்கிரமித்தன. பலரும் க்றிஸ் எவான்ஸைக் கிண்டலடித்தும், பலர் அவரை ஆதரித்தும் பதிவிட்டதால் அவரது பெயர் உலக அளவில் ட்ரெண்டிங்கில் இடம்பெற்றது. இந்தச் சூழலில் மார்வெல் படங்களில் க்றிஸ் எவான்ஸ் உடன் இணைந்து 'ஹல்க்' கதாபாத்திரத்தில் நடித்த மார்க் ருஃப்பலோ க்றிஸ், எவான்ஸுக்கு தன்னுடைய ஆதரவைத் தெரிவித்தார்.

"நண்பா...! அமெரிக்க அதிபர் ட்ரம்பே எந்தவிதச் சங்கடமும் இன்றித் தனது அலுவலகத்தில் அமர்ந்திருக்கும்போது, நீங்கள் சங்கடப் படுவதற்கு இதில் எதுவுமே இல்லை". என்று ட்ரம்ப்பை நைசாகக் கடித்தார் ஹல்க்.







# அருந்தப்பு ஜக்கிஜான்!

'வேன்கார்ட்' என்கிற படத்தின் படப்பிடிப்பின்போது பெரும் விபத்தில் மாட்டிக் கொண்டுள்ளார் ஜக்கிஜான். இந்தப் படப்பிடிப் பின்போது ஏற்பட்ட ஒரு விபத்தில் நீரில் மூழ்கிய ஜாக்கிஜானைப் படக்குழுவினர் மீட்டுள்ளனர். ஸ்டான்லி டாங் என்பவர் இயக்கிய இந்தப் படத்தின் படப்பிடிப்புப் பணிகள் கொரோனாவால் இடை நிறுத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது மீண்டும் சீனாவில் தொடங்கி நடைபெற்று வந்தன.


இந்தப் படத்தில் ஜாக்கி ஜான் மற்றும் நடிகை மியா முகி இருவரும் தண்ணீரில் வேகமாகப் பயணம் செய்ய உதவும் 'ஜெட்-ஸ்கி' வாகனத்தில் பயணிப்பது போல வரும் காட்சியைப் படமாக்க முற்பட்ட போது, எதிர்பாராத விதமாக ஜாக்கி ஜான் மற்றும் மியா முகி சென்ற 'ஜெட்-ஸ்கி' ஒரு சிறிய பாறையில் மோதி விபத்துக்குள்ளாகி விட்டது. இதனால் இருவரும் தண்ணீரில் மூழ்கித் திணறியுள்ளனர். விழுந்த சில நொடிகளிலேயே மியா முகி நீரிலிருந்து வெளியே வந்திருந்தாலும் ஜாக்கி ஜான் வந்திருக்கவில்லை. இதனால் பதறிப்போன படக்குழுவினர் உடனடியாகத் தண்ணீரில் இறங்கி அவரைத் தேடியுள்ளனர். பாறையின் அடியில் சிக்கிக்கொண்ட ஜாக்கி ஜானால் வெளியே வரமுடியவில்லை. சிறிது நேரம் வரை அவர் தண்ணீருக்குள் மூழ்கிக் கிடந்துள்ளார். பின்னரே ஜாக்கி ஜானைப் படக்குழுவினர் மீட்டனர்.

# அகிலத் தொடைத் தமிழ்த் தேசியமும் தெமஸ்சினாக்களும் (மச்சான்மார்களும்)

■ வி.அருணாசலம்

பாடசாலை மாணவர்களின் கணித பாடத்தில் அகிலத் தொடை என்று ஒரு பகுதி உண்டு. உதாரணமாக மீன் மட்டும் சாப்பிடுவோர் 7 பேர், மரக்கறியும் மீனும் சாப்பிடுவோர் 4 பேர், மரக்கறி, மீன், மாட்டிறைச்சி சாப்பிடுவோர் 6 பேர் போன்ற விவரணம் வழங்கப்பட்டு அது குறித்து வட்ட வரைபுகள் மூலம் கணக்குப் போடுதலும் அதிலிருந்து சில விடைகளைக் கண்டறிதலும் கற்பிக்கப்படும்.

இத்தகு கணக்கொன்றில் போடக்கூடிய தரவுகளுடன் தமிழ் அரசியல்வாதிகளின் தமிழ்த் தேசியமும் அமைந்து விட்டது. அபிவிருத்தி வேண்டாம் உரிமையே முதன்மையானது என்று ஒரு சாராரும். அபிவிருத்தியும் வேண்டும் உரிமையும் வேண்டும் என்று ஒரு சாராரும், விடுதலைப் புலிகளை மட்டும் ஆதரிப்போர் என்று ஒரு சாராரும் புலிகளையும் இந்தியாவையும் ஆதரிப்போர் என்று ஒரு சாராரும், புலிகளையும் அரசையும் ஆதரிப்போர், புலிகளையும் புலம்பெயர் தமிழரையும் ஆதரிப்போர் என்று மற்றொரு சாராருமாகத் தமிழ்த் தேசியம் மிகவும் குழப்பகரமான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. அதேவேளை வட மாகாணத்தின் முன்னாள் முதல்வர் விக்கினேஸ்வரன் - வாதசுதேவ நாணயக்கார கூட்டும் எதிர்காலத்தில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்ற கோணத்தில் சிங்கள ஊடகங்கள் அவர்களைத் தெமஸ்சினாக்கள் என்று விழித்து வருகின்றன.






### தனியுரிமைச் சிதைவு

2010 தொடக்கம் 2020 வரையான பத்து வருட காலத்தில் தமிழ்த் தேசியம், தமிழர் உரிமைகளைப் பற்றி யார் பேசுவதாக இருந்தாலும் தம்முடன் பேச வேண்டும் என இந்த விடயத்தில் தனியுரிமையை வைத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2020 தேர்தலுடன் தனது முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. தமிழ்த் தேசியம் பற்றிய கூட்டமைப்பின் எண்ணக்கரு, நாடாளுமன்றில் அதை இடித்துரைப்பது, சிங்கள ஆட்சியாளருக்கு எதிராகக் குரல் கொடுப்பது, புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்தியது என எல்லாமே இப்போது பலரது கைக்கும் மாறிவிட்டன. 2009இல் போர் முடிவுக்கு வந்த பத்து வருடங்களில் தமிழருக்கிருந்த ஏகப் பிரதிநிதித்துவமும் இல்லாது போய்விட்டது.

இலங்கை அரசியலில் வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிராகவும் தமிழருக்கு எதிராகவும் அதிகம் துவேச நிலைப்பாட்டை எடுத்தவர்கள் ஜேவிபியினர். அந்தக் கட்சியிலிருந்து விமல் வீரவன்சவைப் பிரித்து எடுத்த மகிந்த அணி முழு அளவிலான துவேசத்தில் இறங்கிப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததும் பின் நாள்களில் சிங்கள மக்கள் மத்தியில் ஜே.வி.பி. எடுபடவில்லை. இதே போன்றதொரு நிலையே தற்போது தமிழ்ப் பிரதிநிதிகள் மத்தியிலும் காணப்படுகின்றது.

தமிழ்த் தேசிய விடயத்தில் தனியுரிமை பெற்றிருந்த சிறிதரன் போன்றவர்களின் பேச்சுகளுக்கு அப்பால் சென்று தமிழ் மொழியே இலங்கையின் முதல் மொழி, தமிழர்களே இலங்கையின் பூர்வீக மக்கள், இராணுவத்தின் கொடுமைகளைத் தாங்க முடியாத நிலையிலேயே புலிகள் தற்கொலைக் குண்டுதாரிகளாகினர் போன்ற கருத்துகளைக் கொழும்பு 7இல் பிறந்து வளர்ந்த விக்கினேஸ்வரன் பறைசாற்றத் தொடங்கிவிட்டார். இதனால், இந்த எடுப்பில் ஆங்கிலத்தில் பேச முடியாத சிறிதரன் போன்றவர்கள் அடிபட்டுப் போனார்கள். கடந்த வார காலம் முழுதும் விக்கினேஸ்வரனே சிங்கள ஊடகங்களில் நாயகத்தனம் புரிந்தார். சுமந்திரன் மீது மக்கள் கொண்டுள்ள எதிர்ப்பில் நன்கு பாடம் கற்றுவிட்ட அவர் இதில் தன்னை முழுதுமாகக் களமிறக்கியுள்ளார். அவர் புலிகளை மனப்பூர்வமாக ஆதரிக்கவில்லை என்றாலும் அவர்களை வைத்து அரசியல் செய்வது எப்படி என்பதை இப்போது கற்றுக்கொண்டுவிட்டார்.



தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்ற விக்கினேஸ்வரனின் கருத்து உண்மையாக இருந்தாலும், வடக்குக் கிழக்கில் முதலாம் வகுப்புக்குச் சேர்வதற்கு மாணவர்கள் இல்லாத காரணத்தால் பல பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன என்பதையும் அறிந்திருக்க வேண்டிய அவசியம் அவருக்கும் உண்டு.

### வரலாறு முக்கியம்!

அமெரிக்காவின் பூர்வீகக் குடிகள் செவ்விந்தியர்கள். ஆஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள் அபோஜினிஸ்கள். இந்தியாவின் பூர்வீகக் குடிகள் திராவிடர்கள் ஆகியோருக்கு இன்று என்ன நடந்தது என்ற முன்னுதாரணத்தை விக்கினேஸ்வரன் கருத்தில் எடுத்தார் போன்று தெரியவில்லை. இன்றும் கூட வடக்குக் கிழக்கில் மண்ணின் மைந்தர்கள் என்று பெருமைப்படக்கூடிய மக்கள் ஏழைகளே. 30 வருட போர்க் காலத்தில் சகல இயக்கங்களுக்கும் போராளிகளை வழங்கியதாலும் படுகொலைகளாலும் இடப்பெயர்வுகளாலும் சொத்தழிவுகளாலும் நொந்து நொடிந்துபோய் இந்த மக்கள் வாழ்கின்றனர். இந்த நலிந்து போன பெரும்பான்மைத் தமிழ் மக்கள் விக்கினேஸ்வரனின் அரசியல் கண்ணில் ஒரு போதும் படப்போவதில்லை. மாகாணசபைத் தேர்தலில் ஒரு லட்சத்துக்கு மேல் விருப்பு வாக்குகளைப் பெற்ற அவரால் நாடாளுமன்றத் தேர்தலில் 21 ஆயிரம் விருப்பு வாக்குகளை மாத்திரமே பெற முடிந்திருக்கிறது. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மூடி மறைக்கப்பட்டு பூர்வீகம் பற்றிய பிரச்சினைகளாக அவரால் புது மெருகூட்டுவது மக்களை இன்னும் அந்நியப்படுத்தும்.

தற்போது நாடாளுமன்றில் சிறிதரன் பேசுவதும் தமிழ்த் தேசியம்தான். சாணக்கியன் பேசுவதும் தமிழ்த் தேசியம்தான். கஜேந்திரகுமார், கஜேந்திரன் ஆகியோர் பேசுவதும்கூடத் தமிழ்த் தேசியமே. விக்கினேஸ்வரன் பேசுவதும் அதைத்தான். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட புளொட், ரெலோவைச் சேர்ந்தவர்கள் பேசுவதும் தமிழ்த் தேசியமே. இதில் எது தமிழ்த் தேசியம் என்று இப்போது தமிழருக்கே குழப்பம் உண்டாகிவிட்டது. இப்படியிருக்க எது சரியான தமிழ்த் தேசியம் என்று சிங்களவர்களால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?

அகிலத் தொடைக் கணக்கில் மையத்தில் வருகின்ற விடயம் தமிழ்த்தேசியம் என வைத்துக் கொண்டால் இவர்கள் பேசும் தமிழ்த் தேசியம் ஏதோ ஒரு புள்ளியில் தொட்டுச் செல்லுமே தவிர அது தமிழ் மக்கள் அனைவரும் இணைத்த அல்லது ஒற்றுமைப்பட்ட தமிழ்த் தேசியமாக இருக்கப் போவதில்லை. தமிழருக்கிடையில் இதுவரை நிலவியிருந்த முரண்பாடுகள் இன்றைய நிலையில் தமிழ்த் தேசியத்துக்கும் ஏற்பட்டுவிட்டது. ■

“ கடந்த வார காலம் முழுதும் விக்கினேஸ்வரனே சிங்கள ஊடகங்களில் நாயகத்தனம் புரிந்தார். சுமந்திரன் மீது மக்கள் கொண்டுள்ள எதிர்ப்பில் நன்கு பாடம் கற்றுவிட்ட அவர் இதில் தன்னை முழுதுமாகக் களமிறக்கியுள்ளார். ”

# கானலாகும்

சிறு கதை

யோ.யோண்சன் ராஜ்குமார்

'தக்கிட கிடதக தக்கிட கிடதக...'என்ற நடன ஆசிரியை நளாயினியின் குரல் நடன 'தட்டுக்களி'யின் ஒலியோடு சேர்ந்து காற்றில் எழுகிறது. சிறிதும் பெரிதுமாய் பதினைந்து மாணவிகள் பரத நடன பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றனர். நளாயினியின் வீட்டிலேயே அமைத்த வகுப்பறையில் இருந்துதான் அந்த ஒலி வந்து கொண்டிருந்தது.

"என்ன ஆடுறீங்கள்! வைஷ்ணவியைப் பார்த்து ஆடுங்க பாப்பம்!"

'மூண்டாம் காலம் சரியான கஸ்டமாக இருக்குது மிஸ்'. அது மற்றொரு மாணவியின் குரல்.

'வைஷ்ணவிக்கு ஏலு மெண்டால் ஏன் மற்றாக்களுக்கு ஏலாது?'.

நளாயினினின் மனதில் நீங்காத இடத்தினைப் பிடித்தவள் வைஷ்ணவி. அவளது அபிமானத்துக்கு காரணமான மூன்று விடயங்கள் அவளிடம் இருந்தன. அவளிடம் காணப்பட்ட குருபக்தி, நடனத்தில் இருந்த அதீத பிடிப்பு, எதையும் உடனுக்குடன் செய்யும் ஆற்றல், அதனைவிட ஒரு நடன மாதுவுக்கு இருக்கக் கூடிய அனைத்து அங்க அழகும் அவளிடம் இருந்தன. அவளுக்குள்ள ஒரே ஒரு குறை வறுமை. அதனால் நளாயினிக்கு அவளிடம் அதீத பிரியம். அவளை தனது மாணவப் பரம்பரையாக ஆக்கவேண்டும் என்பதில் அவளது கவனம் அதிகமாக இருந்தது. உயர் தரத்தில் நடனத்தினை ஒரு பாடமாக பயின்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுக்காகக் காத்திருக்கும் அவளை எப்படியும் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பவேண்டும் என்பதும், அவளுக்கு அரங்கேற்றம் செய்து பார்க்க வேண்டும் என்பதும் நளாயினிக்கு பெருங்கனவாக இருந்தது. தான் இல்லாதுவிடின் தனது வகுப்பினைக்கூட வைஷ்ணவியைக் கொண்டுதான் எடுக்கச் செய்வாள்.

மற்றைய மாணவிகளைக் கடிந்துகொள்ளும் போது வைஷ்ணவியை உதாரணங் காட்டக் கூடிய அளவுக்கு அவள் நடனத்தில் மிகச் சிறப்பான நேர்த்தியான நடன சுத்தத்தினைக் கொண்டவளாக இருந்தாள். அதனை ஏனைய மாணவிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தனர்.

'பிள்ளைகள் நடனத்தை கஸ்டமாக நினைக்கக்கூடாது. நடனம் ஒரு தெய்வீகக்கலை, ஆர்வமும் விருப்பமும் மனதில இருக்க வேணும். நடராஜப்பெருமானை நினைச்சுக்கொண்டு ஆடேக்க அதில வாற பக்தியும், உடம்பில ஏற்படுகிற தெம்பும் எவ்வளவு நேரத்துக்கும் ஆட வைக்கும். நான் வைஷ்ணவியை நெடுக பாராட்டுறன் எண்டு மற்ற ஆக்கள் குறைவிளங்க கூடாது நான் முந்தி எப்படி இருந்தனானோ அதே ஆர்வம் அவளிட்டையும் இருக்குது'

அவள் கொடுத்த அறிவுரைகளை கேட்டுக் கொண்டிருந்த மாணவி அனந்திகா 'ஓம் மிஸ் வைஷ்ணவி ஆடுகிறதைப் பார்த்தால் சரியாக நீங்கள் ஆடுகிற மாதிரித்தான் இருக்கும்..' என்றாள். அது நளாயினின் மகிழ்வினை இரட்டிப் பாய் ஆக்கியது. 'நீங்களும் மனம் வைச்சால் அவளைப் போல நிச்சயமாக ஆடலாம்.' என்று கூறியவள் வரவிருக்கும் நாட்டிய மயில் நடனப் போட்டியைப் பற்றிக் கூறி அதில விரும்புகிற மாணவிகள் பங்குகொள்ளலாம் என்கிற விடயத்தினையும் எடுத்துக்கூறினாள்.

அதற்கு நிறைய பயிற்சி வேண்டும் என்று கூறிய போதும் பல மாணவர்கள் தங்கள் பெயர்களை கொடுப்பதில் முன்னின்றார்கள். ஆனால் அவள் எதிர்பார்த்த வைஷ்ணவி எதனையும் கூறவில்லை. எல்லா மாணவர்களும் சென்றபின் தயங்கியபடி வந்தவளை 'நீர் ஏன் உம்மட பேரைப் போடவில்லை' எனக் கேட்டபோது கண்கள் பனிக்க

'உடுப்பு, சலங்கை எல்லாத்துக்கும் வாடகை கனகாசு வரும் ரீச்சர். வீட்டில விடமாட்டினம்'

'அதுகாக போடாமல் விடபோறீரோ? அதெல்லாம் நான் தருவன் நீர் போடும். உமக்கு தில்லானா ஒண்டு பழக்கப்போறன்' என்று நளாயினி கூறியதும் 'சரி ரீச்சர்' என உற்சாகத்தோடு ஓடி மறைந்தாள். அவளது ஒவ்வொரு நடபடிக்கைகளிலும் "அவள்தான் தனது சீடத்துவம்" என்ற எண்ணமே நளாயினியில் மேலோங்கி இருந்தது.

'என்னப்பா இன்னும் வகுப்பு முடியயில்லையே' கணவர் பிரசாத்தின் குரல் அழைத்தது. அவளது கணவன் பிரசாத். நளாயினிக்கு வந்து வாய்த்த புரிந்துணர்வுள்ள கணவன். அரசார்பற்ற நிறுவன மொன்றில் வேலை செய்யும் அவன், அவளது நடன முயற்சிக்குத் தனது ஆதரவினை என்றும் வழங்குவான். அவள் வகுப்பு எடுக்கும் போது அவர்களது சின்ன மகளுக்கு அவன்தான் காவல். அவள் வந்ததும்; ஒப்படைத்துவிட்டு தனது வேலைக்கு கிளம்பிவிட்டான்.

அவன் செல்லவும், நளாயினியின் தோழி பாமினி உள்ளே வரவும் சரியாக இருந்தது. அவள் சங்கீத ஆசிரியை. இருவரும் இணைந்துதான் கலை அரங்கேற்றங்களைச் செய்வார்கள்.

'என்ன நளாயினி பள்ளிக்கூடத்தில உழைக்கிறது காணாதெண்டு வீட்டிலையும் ஓய்வில்லாமல் ரியூசன்...ம் உழைப்புத்தானே!'

'உழைப்பா? போடி இந்தப் பிள்ளைகள் தாற காசு எனக்கு என்னத்துக்கு காணும் என்ர இட்சியத்தை

நீ அவமதிக்கிறாய்' என்று நளாயினி கண்டிக்க,



'அடி உன்னைப் பற்றி எனக்கு தெரியாதே! சும்மா சீண்டல்தான்'என்று கதையை தொடர்ந்தவளிடம் தனது மாணவர்கள் புராணம் பாடத் தொடங்கினாள் நளாயினி. வைஷ்ணவியைப் பற்றி அடிக்கடி கூறினாள். அவள் தனது இலட்சிய உருவாக்கம் எண்டதில கவனமாக இருந்தாள். வரப்போகின்ற நாட்டிய மயில் போட்டிக்கு வைஷ்ணவிக்கு தில்லாலானா பழக்கப் போவதைனையும் பெருமையாக கூறினாள்.

தொடர்ந்தது நாட்டிய மயில் போட்டிக்கான ஒத்திகை அவளது வீட்டில் தினமும் கேட்டது. தாளஸ்வரங்களும் தட்டுக்களியின் ஓசையும் அந்தச் சுற்றாடலிலேயே ஒரு கலைச் சூழலைக் கட்டியம் கூறின. அயலவர்கள் எல்லோருக்கும் அந்த ஓசை பழகிப்போனதொன்று. நடனத்தினை தனது இலட்சிமாகக்கொள்ளும் நளாயினி பற்றி பெற்றோரும் அவளில் நிறைந்த அபிமானத்தினைக் கொண்டிருப்பர். பிள்ளைகளுக்கு நடனத்தினை மட்டுமன்றி ஒழுக்கத்தினையும் பழக்க வழக்கங்களையும் ஊட்டுவதிலும் கவனமாக இருக்கும் அவளது பண்பை அனைவரும் புரிந்து கொண்டிருந்தனர்.

ஒரு நிகழ்ச்சி என்று வந்துவிட்டால் நளா யினி தனது முழுக் கவனத்தினையும் அதில் வைத்து அதிலேயே தன்னைக் கரைத்து விடுவாள். சாப்பாடு முதலாக கடையிலேயே வாங்கும் நிலைமை ஏற்படும். அதற்கெல்லாம் பிரசாத் பழக்கபட்டு விட்டான். அவள் சொல்லாமலே அவன் அனைத்தையும் தயார்ப்படுத்தி விடுவான். போட்டிக்காக நளாயினி சில நாட்களாக தன்னை மறந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். குறிப்பாக வைஷ்ணவியின் தில்லானாவில் அவள் கூடிய கவனம் செலுத்தினாள். தனக்கு திருப்பதி வரும் வரையில் ஓயமாட்டாள். திரும்பவும் திரும்பவும் பொறுமையுடன் பயிற்றுவாள்.

அவர்கள் எதிர்பார்த்த நாட்டிய மயில் போட்டியும் வந்தது. ஒரு வார காலமாக வீடு முழுவதும் அல்லோல கல்லோலம் தான். சிதறிக்கிடக்கும் நடன உடைகள், ஒப்பனைப் பொருட்கள், சலங்கைகள் என வீடே அரங்க ஒப்பனை அறையாக தாறு மாறாகக் கிடந்தது. நளாயினி எதனையும் கவனியாது வாசலைப் பார்த்தபடி நின்றிருந்தாள். தனது பிள்ளைகளின் விளை பயனை அறியும் அங்கலாய்ப்பு அவளுக்கு..

'என்ன நாட்டிய சந்நதமெல்லாம் முடிஞ்சுதா. நாங்கள் கொஞ்சம் எங்கட வீட்டு வேலைகள் செய்யலாமோ'என்று பிரசாத் கேட்ட போதுதான் எத்தனையோ வேலைகள் கடனாகக் கிடந்தது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

'கொஞ்சம் பொறுங்கப்பா போட்டி இப்ப முடிஞ்சிருக்கும் பிள்ளைகள் வரட்டும்' அவளது அங்கலாய்ப்புகள் எல்லாம் வைஷ்ணவியையே சுற்றிக்கொண்டிருந்தன. அவள் கற்றுக் கொடுத்த தில்லானா உருப்படி சாதாரணமானதல்ல அதனை ஏற்கக்கூடிய பயிற்சியும் முயற்சியும் வைஷ்ணவியிடம் இருந்தது. அது நிச்சயமாக வெல்லும் என்ற நம்பிக்கை அவளிடம் இருந்தது. அப்போதுதான் மாணவர்களது ஆராவார ஓசை கதவடியில் கேட்கத் தொடங்கியது.

துள்ளிக் குதித்தபடி மாணவிகள் ஓடிவந்தனர் 'மிஸ் வைஸ்ணவிதான் முதலாம் இடம். துளசி செக்கண்ட்' வேறு எதுவும் நளாயினிக்கு கேட்கவே இல்லை. ஓடிவந்த வைஷ்ணவி காலில் பணிந்து தனது விருதுக் கேடயத்தினை நளாயினியிடம் கொடுத்தபோது கண்ணீர் மல்க அவளை கட்டி அணைத்தாள். 'நீங்கள் சொல்லு வீங்களே மிஸ்.

எல்லா மாணவர்களும் சென்றபின் தயங்கியபடி வந்தவளை 'நீர் ஏன் உம்மட பேரைப் போடவில்லை' எனக் கேட்டபோது கண்கள் பனிக்க 'உடுப்பு, சலங்கை எல்லாத்துக்கும் வாடகை கனகாசு வரும் ரீச்சர். வீட்டில விடமாட்டினம்'

'அதுகாக போடாமல் விடபோறீரோ? அதெல்லாம் நான் தருவன் நீர் போடும். உமக்கு தில்லானா ஒண்டு பழக்கப்போறன்' என்று நளாயினி கூறியதும் 'சரி ரீச்சர்' என உற்சாகத்தோடு ஓடி மறைந்தாள்.

# கனவுகள்

புக்தியாக ஆடினால் உடம்பில இருக்கிற சக்தியெல்லாம் போனாலும் ஐம்பூதங்களின்ர சக்தி உடம்பில வந்து செயல் புரியுமெண்டு அதை நான் இண்டைக்கு உனர்ந்தனான் மிஸ். ஆட ஆட காத்தில மிதந்த மாதிரி இருந்தது. பிரதம விருந்தினர் பேசேக்க தான் இப்படியான தில்லானாவைப் பார்க்க இல்லை எண்டு சொன்னவர்.' அது துளசினி.

எல்லா மாணவர்களும் குதூகலத்துடன் நின்றார்கள். அவர்களுக்கு நளாயினியின் மேல் இருந்த பக்தியும் மரியாதையும் வேறு எந்த ஆசிரியரிலும் ஏற்பட்டதில்லை. தனது சொந்தப் பிள்ளைகளைப் போல் அவர்களைப் பார்க்கின்ற அனுபவத்தினை அவள் தனது குருவிடமிருந்து பெற்றிருந்தாள். தான் கற்றதை தனது மாணவருக்கு கொடுக்க வேண்டுமென்பதில் எப்போதும் முழுமூச்சாக இயங்குவாள்.

உழுது விவசாயம் செய்த விவசாயி நெற்கதிரில் மகிழும் மகிழ்ச்சியை ஒரு கலை உருவாக்கத்திலும் தரிசிக்க முடியும் அன்றைய வெற்றி அவளது முயற்சியின் விளைபயன். நளாயினியின் ஆனந்தக் கூத்தினை யன்னலால் பார்த்தபடி நின்ற பிரசாத்திற்கும் மிகப்பெரிய மனநிறைவு. 'நடனம் தெய்வீகக்கலை. அதோட அது எங்கட பண்பாடு. அடையாளம் அதை விருப்பத்தோட செய்ய வேணும்.' என்று தனது உபதேசத்தினை மாணவர்களுக்கு கையளித்து அனுப்பிவிட்டு வைஷ்ணவியை மட்டும் அழைத்த நளாயினி;

'நான் உனக்கு அரங்கேற்றம் செய்து பாரக்கப் போறன்.

'ஐயோ மிஸ்.' என்று அதிர்ச்சியடைந்தவளைப் பார்த்து,

'உனக்கு கஸ்டமெண்டு எனக்குத்தெரியும். எல்லாச் செலவையும் நான் பொறுப்பன். நீ ஒத்துழைச்சால்போதும். ஏனெண்டால் நடனம் உன்ர ரெத்தத்தில கிடக்கு. எல்லாருக்கும் இது வராது. உன்னை நான் உயர்த்தி வைக்காட்டில் அது எனக்குப் பாவம். அரங்கேற்றம் செய்தால் உனக்கு கம்பசுக்கும் புள்ளிகூடும். நீ அம்மாவை வந்து பார்க்க சொல்லு.' மிகுந்த ஆனந்தத்தோடு வைஷ்ணவி பறந்தாள்.



'என்ன அப்ப தொடர்ந்து கடைச் சாப்பாடு தானா'

'இல்லை அப்பா அவளிட்ட இருக்கிற தெய்வீகம் உங்களுக்குத் தெரியாது.'

'எனக்கு தெரியாது தான் சரி. செலவெல்லாம் நீர் பொறுக்கிற தெண்டு சொன்னீர்' அதுக்குத் தானே நீங்கள் இருக்கிறியள் என்று நாணத்துடன் நகர்ந்த நளாயினியை புன்சிரிப்புடன் நோக்கியவாறு நின்ற பிரசாத்திற்கு வழிதேடும் சிந்தனை ஓடிக்கொண்டு இருந்தது.

நளாயினி 10 வருடத்திற்கு மேல் ஆசிரியையாக இருந்தாலும் இதுவரை ஐந்து மாணவர்களை அரங்கேற்றி வைத்தாலும் இந்தளவு உற்சாகத்தோடு என்றும் நின்றதில்லை. அதிலிருந்தே பிரசாத்திற்குப் புரிந்துவிட்டது. வைஸ்ணவியிடம் ஒரு இயற்கையான கொடை இருப்பதனை நளாயினி கண்டு பிடித்துவிட்டாள். இனி எது சொன்னாலும் அவள் தனது இலட்சியத்தில் இருந்து பின்வாங்க மாட்டாள்.

பிரசாத்திற்கு அவளிடம் பிடித்த குணம் அது தான். அவள் அரங்கில் ஆடியதை இரசித்தனை விட அவள் மேடையில் இருந்து ஜதியை உச்சரித்துக் கொண்டு ஒரு கெம்பீரத்துடன் நட்டுவாங்கம் செய்யும் அழகே அவனைக் கவர்ந்தது. மிகப்பெரிய வீராங்கனையாக அவருக்கு அவள் தெரிவாள்.

ஒரு தடவை நளாயினி அரகேற்ற ஒத்திகைகளில் தீவிரமாக இருந்தபோது பிரசாத் சுடுநீர் போத்தலில் தேநீர் கொண்டு வந்து கொடுத்ததனைப் பார்த்த சங்கீத வித்துவான் ஒருவர் 'நல்ல கோளையா ஒருத்தரைத்தான் தேடிப்பிடிச்சிருக்கிறீர்ஏ' என நக்கலாக பேசியபோது சிங்கமாக மாறிய நளாயினி 'அவரைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? நான் படைக்கிறதுக்கு காரணமே அந்த மனுசன் தான். அவர் எனக்கு புருசனாக வராட்டி நான் எப்பேயோ நடனத்துறையில இருந்து காணாமல் போயிருப்பன். உங்களைப் போல புரிந்துணர்வில்லாதவர்களோட நான் நிகழ்ச்சி செய்யமாட்டன்...' எண்டு ஒரு போடு போட்டதும் எல்லோரும் அதிர்ந்து போயினர். தவறிற்கு வருந்தினர்.

அதற்குப்பிறகு அவளில் இருந்த மதிப்பு பிரசாத்திற்கு இன்னமும் அதிகரித்தது. அதுமட்டுமன்றி அவளுக்கு எத்தனையோ வெளிநாட்டுத் திருமணவாய்ப்புக்கள் வந்தும் தனது நடன முயற்சிக்கு ஆதரவு தரக்கூடிய கணவனுக்காகவே அவள் எல்லாவற்றையும் நிராகரித்திருந்தாள். திருமணத்திற்குப் பின் காணாமல்போன எத்தனையோ பெண் கலைஞர்களை அவள் வாழ்விலே கண்டவள். அதனால் பிரசாத்தில் அவளுக்கு எப்போதுமே பேரபிமானம் காணப்படும்.

நளாயினி தொலைபேசியில் அவளது நண்பிக்கு பாமினிக்கு போட்டி முடிவுகளைக் கூறி குதூகலித்துக்கொண்டிருந்தாள். நளாயினியின் பிரச்சினையை பிரசாத் தன்னுடையதாகவே கொள்ளத்தெடங்குவது வழக்கம். இப்போது வைஸ்ணவியின் அரங்கேற்றத்திற்கு எந்த வழியில் உதவிகளைத் திரட்டலாம். என்ற சிந்தனை பிரசாத்திடம் ஓடிக்கொண்டிருந்தது.

அவனது முயற்சியில் வெற்றியின் நம்பிக்கை கிடைக்கத்தொடங்கி இருந்தது. பிரபல ஹொட்டேல் ஒன்றின் முதலாளி நிதி அனுசரணை செய்ய முன்வந்திருந்தார்;, கலாசார நிறுவனம் ஒன்று இலவசமாக மண்டபத்தினை தருவதற்கும் ஒப்புதல் வழங்கி இருந்தது. உற்சாகமாக வந்த பிரசாத் 'நளாயினி நீர் உம்மட அரங்கேற்ற வேலைகளை தொடங்கலாம். அரைவாசி வேலை சரி' என்று உற்சாகமாகக் கூவினான். ஆனால், பிரசாத் அதிர்ந்து போகும் அளவுக்கு நளாயினியின் முகம் வாடி இருந்தது. அப்படி ஒரு தோற்றத்தினை திருமணமாகிய இத்தனை நாட்களில் பிரசாத் அவளிடம் காணவில்லை. இவனைக் கண்டதும் ஓடிச்சென்று அவனின் தோளில் சாய்ந்து ஓ என்று அலறி அழத் தொடங்கினாள்.

பிரசாத் வருவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்புதான் நளாயினி வழமையான நடன வகுப்பினை எடுப்பதற்கு சென்றிருந்தாள். அங்கு எப்போதும் முதல் மாணவியாக இருக்கும் வைஸ்ணவியைக் காண முடியவில்லை. மாணவர்களும் அமைதியாக இருந்தார்கள்.

'எங்க இண்டைக்கு வைஷ்ணவியைக் காண இல்ல..'

'ரீச்சர்! இனி வைஸ்ணவி டான்சுக்கு வரமாட்டாவாம்..'

பெரும் அதிர்ச்சியுடன்; 'ஏன்' என்றுகேட்டவளுக்கு 'நீ சொல்லு... நீ சொல்லு' என்று மாணவர்கள் சங்கடபட அனந்திகா மட்டும் முன்வந்து,

'ரீச்சர் வைஸ்ணவிக்கு அவாட அப்பா வெளிநாட்டில இருக்கிற ஒராளுக்கு புறப் போஸ் பண்ணி இருக்கிறாராம்'

"அவருக்கென விசரே" என்று அவள் சொல்லவும் வைஷ்ணவி அழுதபடி தாயுடன் வரவும் சரியாக இருந்தது.

'ரீச்சர் என்னை டான்ஸ படிக்க வேணாமெண்டு மறிக்கினம் ரீச்சர், இவைக்கு சொல்லுங்க ரீச்சர்..' என்று அழுதபடி வந்தவளை ஆசுவா சப்படுத்திக் கொண்டு ஏனைய பிள்ளைகளை அன்று வகுப்பில்லை என்று அனுப்பி விட்டு அந்த தாயுடன் கதைக்க முற்பட்டபோது,

'ரீச்சர் நீங்கள் என்ர மகளில எடுக்கிற அக்கறைக்கு நன்றி சொல்லவேணும். அரங்கேற்றம் செய்யப் போறதெண்டு சொன்னீங்களாம் ரீச்சர்! சந்தோசம். ஆனால் அவளுக்கு இப்ப ஒரு வெளிநாட்டு சம்மந்தம் வந்திருக்குது'

'உங்களுக்கென்ன விசரா? அவள் படிக்கிற பிள்ளை. இப்ப றிசல்ட் வரப்போகுது. அவள் கம்பசுக்குப் போகவேணும். படிச்சு பெரிய ஆளா வருவாள்.' அவளது எந்த கதையையும் செவி மடுக்காது 'டான்ஸ ஆடினால் போதுமா ரீச்சர்? டான்ஸ் சோறு போடுமா? நாங்கள் கஸ்டப்பட்டனாங்கள். இவள் மூத்தவள். இவளுக்கு பிறகு மூண்டு பேர் இருக்கினம். இவளை ஒரு நல்ல இடத்தில இறக்கி வெளிநாட்டுக்கு அனுப்பினால் மற்றப் பிள்ளைகளுக்கும் அவள் உதவுவாள்'

'ஐயோ அம்மா அவளுக்கு நடனம் கொடை. அதை கெடுத்துப் போடாதேங்கோ அவளுக்கு இப்ப என்ன வயது?' என்று நளாயினி புத்திசொல்லத் தொடங்கவும், இது தொடர்ந்தால் தனது மகளை மேலும் குழப்பிப்போடுவாள் என்று நினைத்த தாயார் திடீரென நளாயினியின் காலில் விழுந்து பெடியன் நல்ல பெடியன் என்றும் சீதனமில்லாமல் வெளிநாட்டுக்கு கொண்டுபோகிறான் குழப்பிப் போடாதீங்கோ என்று கெஞ்சவும் நளாயினி உணர்வற்றுப் போனாள்.

வைஷ்ணவி கெஞ்சக் கெஞ்ச அவள் மகளை இழுத்துக்கொண்டு சென்றாள். அவளது கதறலும் தனது லட்சியத்தின் சிதைவும் ஒன்றாய் தலையில் சம்மட்டி கொண்டடிக்க நளாயினி; சிலைபோல் ஆனாள்.

பிரசாத்தினை கண்டதும் ஓவென்று அழுதபடி அவன் நெஞ்சில் சாய்ந்தவளை எப்படி ஆறுதல் படுத்துவதென முடியாமல். 'சரி சரி! அவள் வெளிநாட்டில ஆடுவாள் விடு. எங்கட பிள்ளை வளரட்டும். அவளுக்கு அரங்கேற்றம் செய்வம்." என்று அவளைத் தேற்ற முனைந்து தோற்றுப் போனான். "டான்சுக்கு அப்படிக் கொடை எல்லாருக்கும் வராது அப்பா.. இந்த தாய் தகப்பனுக்கு அறிவு கெட்டுப் போய்ச்சுதா? ஏன் அதுகளுக்கு விளங்குதில்லை"

தனது ஒப்பாரியை நிறுத்தாது தனது சினேகிதி பாமினிக்கும் போன் எடுத்து தனது மன உணர்வைக் கொட்டி அழதுகொண்டிருந்தாள். அவள் பழக்கிய தில்லானாவைப் பார்த்த வெளிநாட்டு மாப்பிள்ளை தான் அவளைப் பெண் கேட்ட கதையை பாமினி கூறிபோது அவளுடைய கவலை ரெட்டிப்பானது.

ஓவென்று அழத்தொடங்கிய நளாயினியை எப்படியாவது ஆசுவாசப்படுத்த வேண்டுமென்று நினைத்த பிரசாத், நளாயினியின் மனதை மாற்றுவதற்காக மகளுக்கு நேசறியில் நிகழ்வொன்றிற்கு ஏதோ சட்டை எடுக்கவேணுமென்ற காரணத்தினைக் கூறி ரவுண் பக்கம் அழைத்துச் சென்றான்.

'வைஷ்ணவி பாவம்! அவளுக்கு விருப்பமில்லாத வேலையை செய்யிறாங்களே! என்று புலம்பியபடியே வந்த நளாயினியை தேற்றிய பிரசாத்தினாலும் தாங்கமுடியவில்லை. திருமணம் ஆகி ஐந்து வருடங்கள் தாண்டியும் இப்படி நளாயினி அழுததை அவன் பார்த்ததில்லை. அந்தளவுக்கு அவள் நடனக் கலையை நேசிப்பதனை அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

கடைத்தெருவிலும் நளாயினி ஒரு சிலைபோல தான் நடந்துவந்தாள். புடைவைக் கடையொன்றினுள் செல்ல எத்தனித்த பிரசாத்திற்கு அங்கு கண்ட காட்சி தூக்கி வாரிப்போட்டது. வைஸ்ணவி தனது தாய், மற்றும் சம்மந்தியுடன் நின்று அதிக விலை கூடிய சாறிகளை பார்வையிட்டுக்கொண்டிருந்தாள்.

அந்தக் காட்சியை நளாயினி காணக் கூடாது என்று கருதிய பிரசாத் அவளை வேகமாக வேறு கடைஒன்றுக்கு அழைத்துக்கொண்டு நடந்தான். விந்தை உலகின் யதார்த்தம் அனுக்குப் புரிந்தது ஆனால் நளாயினியை தேற்றுவது அவளவு சுலபமாக இராது என்பதை மட்டும் அவன் உணர்வான்.

(யாவும் கற்பனை)

# எப்போது தீரும்....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்லவேண்டியது கட்டாயமானது, எனினும் அதனை மீளமைக்க அதிகளவு செலவு ஏற்படும். அத்துடன் சனநடமாட்டமற்ற தனியான இடத்தினை தெரிவு செய்வதிலும் பிரச்சினை உள்ளது. விரைவில் அதற்கான மாற்று ஏற்பாடு மேற்கொள்ளப்படும் என நம்புகின்றோம், செம்மணி சிந்துபாத்தி மயான பிரச்சினை பெரிதும் பேசப்பட்டது, உண்மையில் அங்கு கொண்டுவரப்பட்ட வெற்றுப் போத்தல்களால் சூழலுக்கோ மக்களுக்கோ எவ்வித பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்பில்லை. மீள்சுழற்சிக்கு அனுப்பினால் அவை தேவையற்ற விதத்தில் போலித்தயாரிப்புக்களுக்குப் பயன்படுத்தப்படலாம் என்பதால் அந்தப் போத்தல்களை அழித்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டது" என்கிறார் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா.

தெல்லிப்பழை எரியூட்டல் தொகுதியும்கூட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கட்டுப்பாட்டிலேயே இயக்கப்பட்டு வருகின்றது.

"இந்தப் பிரச்சினை (செம்மணி விவகாரம்) வழக்குவரை சென்று பூதாகரமாக வேண்டிய தேவை இல்லை. பிரதேச சபைகள் மற்றும் மாநகர சபை போன்றவற்றின் கழி வகற் றல் முகாமைத்துவம் உரியவாறு இடம் பெற்று அவர்களே இவ்வாறான கழிவுகளைப் பொறுப்பேற்றால் இத்தகைய பிரச்சினைகள் ஏற்பட வாய்புகள் இல்லை..." என்கிறார் மருத்துவர் யமுனாநந்தா.

"தெல்லிப்பழை வைத்தியசாலைச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவக் கழிவுகளை எரியூட்டும் தொகுதி உரிய முறையில் அமைக்கப்படவில்லை என்பது உண்மைதான், தனியார் நிறுவனம் ஒன்றிடம் இந்தச் செயற்பாடு கையளிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் வெளியேறும் நச்சு வாயுக்கள் சுற்றியிருக்கும் மக்களுக்கு நிச்சயம் பாதிப்புகளைத் தரவல்லன. இதனை இடம் மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இதுவரை அது நடைமுறைப்படுத்தபடவில்லை" என்கிறார் தெல்லிப்பழை பகுதி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சிவதாசன்.

பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று கொழும்பின் மையத்தில் அமைந்துள்ள புதிய ஆட்சியின் பின்னர் நகர அபிவிருத்தி, கரையோர கழிவுப் பொருள் அகற்றல் மற்றும் சமுதாய தூய்மைப் படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் வகுக்கப்பட்டுள்ள கொள்கைகள் பிரகடனங்களின் பிரகாரம் வைத்தியசாலைக்கழிவுகள், இலத்திரனியல் கழிவுகள் போன்றன உரியமுறையில் அகற்றப்படவேண்டும். ஆனால், அது வடக்கு, கிழக்குக்குப் பொருந்தாதா என்பதே இப்போது கேள்வி.

ஆட்சியாளர்கள் மேற்கொள்கின்ற எல்லா நல்ல விடயங்களையும் கொழும்பையும் மேல் மாகாணத்தையும் மையப்படுத்தியதாக வைத்திருக்காமல் அதனை அனைத்துப் பகுதிகளுக்கும் அவற்றின் தேவை முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்வது அவசியம். வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு இப்போது முறையான, முழுமையான கழிவகற்றல் தொகுதிகள் அவசியம் அவற்றை அமைப்பதற்கு உரிய தரப்புக்கள் கவனம் செலுத்தவேண்டும்.



# தகிக்கும் கோளில்....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ச்சியாளர்கள் இடையே எழுப்பியிருக்கிறது. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தற்போது பூமியில் இருப்பது போன்ற அதே தட்பவெப்ப சூழ்நிலைகளைக் கொண்டிருந்த ஒரு கிரகம் வெள்ளி. நீர் அதிக அளவில் வெள்ளியில் அப்போது இருந்திருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது. 70 கோடி ஆண்டுகளுக்கு முன்பு அங்கு கடல்கள் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பூமியும் வெள்ளியும் அளவிலும் ஏறத்தாழ ஒரே மாதிரியான கிரகங்கள்தான். 'இப்படியான கிரகம் ஒன்று அருகில் இருக்கையில் அதை விட்டுவிட்டு சூரியக் குடும்பத்திற்கு வெளியில் இருக்கும் கோள்களில் உயிர்கள் இருக்கிறதா என்று தேடியிருக்கிறோமே' என விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் யோசிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

நாசாவின் நிர்வாகத் தலைவர் ஜிம் பிரிடென்ஸ்டீன் 'வெள்ளிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது' என இந்தக் கண்டுபிடிப்பு குறித்து ட்விட்டரில் பதிவிட்டிருக்கிறார். ஆனால், வெள்ளியில் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. இப்போது ஜப்பானின் விண்கலம் ஒன்று மட்டும்தான் வெள்ளியைச் சுற்றிவந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் நிலப்பரப்பில் தரையிறங்கி ஆராய்ச்சிகள் மேற்கொள்வது என்பது விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அடைய முடி யாத இலக்காகவே இருந்துவருகிறது.

அதற்காக இதற்கு முன்பு எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அர்த்தம் இல்லை. சோவியத் ரஷ்யா வெனேரா (Venera) என்ற தொடர் மிஷன்களில் வெள்ளிக்குப் பல விண்கலங்களை அனுப்ப முயற்சி செய்தது. ஆனால், அங்கு இருக்கும் வெட்பத்திலும், அமிலத் தன்மையிலும் உலோகங்கள் உருகி விடும் என்பதால் எதுவுமே பெரிய வெற்றிகளைக் காணவில்லை. இரண்டு முறைதான் வெள்ளியின் நிலப்பரப்பைப் படம் பிடிக்க முடிந்திருக்கிறது. அதுவும் தரையிறங்கிய உடன் சில நொடிகளில் அனுப்பப்பட்டவை, அதன்பின் எப்படியும் விண்கலங்கள் செயலிழந்துவிடும்.

வெள்ளியின் நிலப்பரப்பில் வெப்பம் 426 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். அழுத்தம் பூமியில் இருப்பதை விட 90 மடங்கு அதிகம். அதாவது 3000 அடி நீரில் மூழ்கினால் எவ்வளவு அழுத்தம் இருக்குமோ அவ்வளவு அழுத்தம் வெள்ளியின் நிலப்பரப்பிலேயே இருக்கும். இதனால்தான் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள மிகவும் சவாலான கிரகமாக இருக்கிறது வெள்ளி. இதே காரணிகள்தான் அங்கு உயிர்கள் வாழ வாய்ப்பே இல்லை என்ற முன் முடிவுக்கு அறிவியலாளர்கள் முன்னர் வரக் காரணமாகவும் இருக்கிறது.

ஆனால், நிலத்திலிருந்து சுமார் 50 கிலோ மீற்றர் உயரத்தில் இதே நிலை இல்லை. 30 டிகிரி செல்சியஸ் வெப்பம், கிட்டத்தட்டப் பூமி யின் பரப்பில் இருக்கும் அதே அழுத்தம் என உயிர்கள் இருக்க ஏற்ற பகுதியாகவே இருக்கிறது. இதை வைத்து 53 வருடங்களுக்கு முன்பே சில விஞ்ஞானிகள் அங்கு உயிர்கள் இருந்தால் ஆச்சர்யப்படுவதற்கில்லை என்றனர்.

கிட்டத் தட்ட இந்த உயரத்தில்தான் தற்போது பொஸ்பெய்ன் (Phosphine) வாயு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு நிலத்தில் வாழ்ந்த உயிரினங்கள் நிலை மோசமாக மோசமாக இந்த உயரத்திற்கு வந்திருக்கலாம் எனக் கணிக்கின்றனர் அறிவியலாளர்கள்.

இந்த விடயத்தைக் கண்டறிவது அவசியம் என்றும் அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். வெள்ளியில் என்ன நிகழ்ந்தது, நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை அறிவதன் மூலம் பூமியின் வருங்காலத்தை எடுத்துக்கூற கூட வாய்ப்புகள் ஏற்படக்கூடும் என்பது அவர்களின் நம்பிக்கை.

# யாழ்.பாடியும்....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவெளிக்குக் கொடுக்கப்பட்ட விளம்பரங்கள் அந்தக் கட்டடம் உச்சப் பயன்பாட்டை எட்டுவதற்கும் அதன் மூலம் அதிக வருமானங்களைப் பெறவும் வழி வகுத்தன. யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ள இந்தப் பதினொரு மாடிகளையும், சுற்றுச் சூழலையும், முன்னால் உள்ள நீர் நிலையையும் எவ்வாறு கலாசார ரீதியில் பயன்படுத்துவது, அது சார்ந்த விற்பனை மையங்களை உருவாக்குவது போன்ற விடயங்களில் பயனாளிகளான மக்களின் ஆலோசனைகளைப் பெறும் வகையில் அதற்கான இணையத்தளம் ஒன்றை யாழ். மாநகரசபை உருவாக்கி அதனூடாக மக்களின் ஆலோசனைகளைப் பெற்று எமது கலாசாரத்தை எமது மக்களுக்கும் வெளியுலகுக்கும் அறியப்படுத்துவது மூலம் உற்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றலாப் பயணிகளையும் கவர முடியும்." என ஆலோசனை கூறினார். இறுதியில் இந்தக் கலாசார மண்டபத்தைப் பராமரிப்பதற்கான குழு ஒன்றை அமைப்பது எனவும் முடிவு எட்டப்பட்டது.

## பிதாமகரின் சிலையை நிறுவலாம்

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தக் கலாசார மண்டபத்தின் முன்றலில் யாழ்ப்பாணத்தின் பிதாமகரான, கண் பார்வையற்ற, யாழ் இசைக்கருவியை மீட்டுகின்ற பாணணின் உருவச்சிலை ஒன்றை அமைப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தின் தொன்மையை வெளியுலகுக்கும் சிங்கள மக்களுக்கும் எடுத்துக் காட்ட முடியும்.

முதலியார் குல சபா நாதனால் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ மாலை என்ற நூலில், "அந்தக் காலத்திலே சோழ நாட்டிலிருந்து இரண்டு கண்களும் குருடனாகிய கவி வீர ராகவன் என்னும் யாழ் பாணண் செங்கடக நகரில் இருந்து ஆட்சி செலுத்தும் பால சிங்க மகாராசன் பேரில் பிரபந்தம் பாடிக்கொண்டு போய் யாழ் வாசித்துப் பாடினான். அரசன் அதைக் கேட்டு மிக்க சந்தோசம் கொண்டு அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வட திசையிலுள்ள மணற்றிடல் என்னும் இந்நாட்டைக் கொடுத்தான்" எனக் குறிப்பிடுகிறார். இந்தப் பூர்வீக வரலாறு மறைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் பூர்வீகத்தைக் காட்டும் சின்னமாக இன்று நல்லூர்க் கோவில் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுகூட சபுமல் குமாரய என்ற சிங்கள மன்னனுடன் சம்பந்தப்படுகிறது. ஆனால், அதற்கு முன்னரான வரலாற்றில் உள்ள யாழ். பாடி பற்றி யாரும் கண்டு கொள்வதில்லை.

இந்தக் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டுள்ள இடம் யாழ். பாடிக்கு வழங்கப்பட்ட மணற்றிடலான கரையூர் மற்றும் பாசையூருக்கு அருகில் அமைந்திருப்பதும் யாழ். பாடி என்கிற பாணண் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உரியவர் என்பதும் இந்தக் கலாசார மண்டபத்தின் வளாகத்தில் அவரின் சிலையை நிறுவுவதற்குப் பொருத்தப்பாடானவையாக இருக்கும். யாழ்ப்பாணம் மாநகர சபை இதனைப் பரிசீலிக்க வேண்டும்.

## தொல்லியல் - வரலாறுகளைப் பேணுவது அவசியம்

சிங்களவர் தமது வரலாற்றை நியாயப்படுத்துவதற்காக வரலாற்று அடையாளங்களையும் தொல்லியல் சின்னங்களையும் பேணுகின்ற அளவுக்கு இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் தமக்குரிய அடையாளங்களைப் பேணுவதில் அக்கறை காட்டுவதில்லை. இந்தக் கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாணத்தின் தொன்மையைத் தெளிவுபடுத்தக் கூடிய ஒளிப்படங்கள், தொல்லியல் சின்னங்களை உள்ளடக்கிய பகுதி ஆகியன உருவாக்கப்படல் வேண்டும். யாழ்ப்பாணத்து நாட்டுக்கூத்து இசை வடிவங்களைப் பயிலும் பகுதி, முன்னாலுள்ள நீர் நிலையில் படகுச் சவாரி, பனம்பொருள் உற்பத்திகளை விற்பனை செய்யும் நிலையம், கைவினைப் பொருள்களை விற்பனை செய்யும் நிலையம், நிழல் குடைகளின் கீழ் விற்கக் கூடிய பாரம்பரிய உணவுகள் மற்றும் பானங்கள், தனிப்பட்ட முறையில் தொல்பொருள்களைச் சேமித்து வைத்திருப்பவர்கள் அவற்றைக் காட்சிப்படுத்துதல் - விற்பனை செய்வதற்கான வசதி, ஈழத் தமிழர்களின் கலைப் படைப்புகளை மாத்திரம் காட்சிப்படுத்தி விற்பதற்கான புத்தக விற்பனை நிலையம் (குறும்படங்கள், இசைத்தட்டுகள் போன்ற பல்வேறு வகையினதாக இருத்தல்) ஆகியவற்றை ஏற்படுத்தி இந்தக் கலா மண்டபத்தை மக்கள் கூடும் மையமாகவும் வருமானம் பெறும் மையமாகவும் மாற்ற முடியும்.

யாழ்ப்பாணத்துக்குள் வருகின்ற அனைவரும் இந்தக் கலாசார மண்டபத்தைச் சென்று பார்க்க வேண்டும் என்ற அவாவுடன் வரத்தக்கவாறு இதை ஒரு ஈர்ப்பு மையமாக மாற்றவேண்டிய பொறுப்பு யாழ். மாநகர சபைக்கு உண்டு.

# முகக்கவசமான மலைப்பாம்பு

கொரோனா பரவுவதைத் தடுப்பதற்காக அனைவரும் முகக் கவசம் அணிய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுவரும் சூழலில் பிரிட்டனில் ஒருவர் மலைப் பாம்பை முகக் கவசம்போல அணிந்துகொண்டு பஸ்ஸில் பயணம் செய்த சம்பவம் சக பயணிகளை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

ஸ்வின்டொனில் என்கிற இடத்தில் இருந்து மான்செஸ்டர் நோக்கிச் சென்ற பஸ்ஸில் ஏறிய நபர் ஒருவர் திடீரென மலைப்பாம்பு ஒன்றைத் தனது கழுத்தில் சுற்றிக் கொண்டு முகக் கவசம்போல அதை அணிந்தபடி இருந்துள்ளார். அவரது இந்தச் செயலைப் பார்த்த சக பயணிகள் அவர் நகைச்சுவையாகப் பாம்பு போன்ற தோற்றம் கொண்ட ஏதோ ஒரு பொருளை முகத்தைச் சுற்றி அந்த மூடியிருக்கிறார் என்று நினைத்துள்ளனர். அதில் ஒரு பயணி அதைத் தொட்டுப் பாரத்துப் பரிசோதிக்க முற்பட்டுள்ளார். அப்போதுதான் விடயம் தெரிந்தது.



அது உண்மையாகவே மலைப்பாம்பு என்பதை அறிந்து அனைவரும் திகைத்துப்போய் நின்றனர். அதில் சிலர் அந்தப் பேருந்தில் இருந்து பதறியடித்துக் கொண்டு வெளியே குதித்து ஓடியுள்ளனர். ஆனாலும் தமது மனதைத் தெற்றிக் கொண்டு அந்த நபருடனே தொடர்ந்தும் பயணித்த சிலர், அந்த பாம்பு பயணியின் கழுத்தில் அமைதியாக இருந்தது எனவும், வேறு பயணிகளுக்கு அது எந்த தொந்தரவையும் தரவில்லை என்றும் தெரிவித்தனர்.


இருந்தாலும் முகக் கவசமாகப் பாம்பை பன்படுத்த அனுமதியில்லை என்று கூறி அந்தப் பயணியை எச்சரித்து அனுப்பினராம் போக்குவரத்துத்துறை உயரதிகாரிகள்.

# மிஸ்ரர் பீனுக்கு வயது 30!

சார்ளி சப்ளினுக்கு அடுத்து தனக்கென்றொரு சிரிப்புப் பட்டாளத்தை உருவாக்கியிருப்பது மிஸ்ரர் பீனின் கோமாளித் தனம் என்று சொல்லலாம். பிரபல பிரிட்டிஷ் நடிகரான ரோவன் அட்கின்ஸன் தான் இந்த 'மிஸ்டர் பீன்'. அவர் இந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து 30 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. வளர்ந்த மனிதனின் உடலில் இருக்கும் குழந்தை என்பதே அந்தக் கதாபாத்திரத்தின் உள்ளார்ந்தம். பேச்சுக்கள் அற்ற இந்த நிகழ்ச்சி நீண்ட நாள் நிலைத்து நின்று வெற்றி பெறும் என்ற நம்பிக்கையில்தான் அட்கின்ஸன் இதைத் தொடங்கினார். ஓரளவுக்கு அதில் அவர் வெற்றியும் கண்டு விட்டார். 1990ஆம் ஆண்டு பிரிட்டிஷ் தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகி பெரும் வரவேற்பைப் பெற்று இப்போது உலகின் பல நாடுகளிலும் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிறது. இந்தக் கதாபாத்திரத்தை வைத்துக் கார்ட்டூன் தொடரும், திரைப்படங்களும் கூட எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சி 30 வருடங்கள் கழித்து இன்றும் பிரபலமாக இருப்பதற்குக் காரணம் அந்தக் கதாபாத்திரத்தின் குழந்தைத்தனமான, அராஜகச் செயல்கள் பார்க்க நகைச்சுவையாக இருக்கின்றன என்பதுதான் என்று கூறுகிறார் அட்கின்ஸன்.



## கார்ட்டூன்



## மூளைக்கு வேலை விடைகள்

1) 1 + 3 + 9 - 5 = 8

2 + 8 + 3 - 9 = 4

0 + 6 + 1 - 5 = 2

ஆகவே

5 + 2 + 1 - 1 = 7.

# இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | | | 5 | 6 | |
| | 3 | 9 | | | 8 | | 7 | |
| 7 | | | 2 | 5 | | | | |
| 3 | 1 | | | | 6 | 7 | | |
| | | 5 | | 7 | | 1 | | |
| | | 6 | 4 | | | | 8 | 9 |
| | | | | 9 | 7 | | | 2 |
| | 2 | | 8 | | | 6 | 5 | |
| | 8 | 1 | | | | | 9 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
**551 A**, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 2 | 8 | 5 | 1 | 6 | 7 | 4 |
| 6 | 8 | 7 | 4 | 2 | 3 | 1 | 9 | 5 |
| 4 | 5 | 1 | 9 | 7 | 6 | 2 | 8 | 3 |
| 5 | 6 | 9 | 2 | 3 | 4 | 8 | 1 | 7 |
| 2 | 3 | 8 | 7 | 1 | 5 | 4 | 6 | 9 |
| 1 | 7 | 4 | 6 | 9 | 8 | 5 | 3 | 2 |
| 9 | 1 | 6 | 3 | 4 | 2 | 7 | 5 | 8 |
| 8 | 2 | 3 | 5 | 6 | 7 | 9 | 4 | 1 |
| 7 | 4 | 5 | 1 | 8 | 9 | 3 | 2 | 6 |

## செம்மணி

**வாரமலருக்கு...**

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

**அஞ்சல் /தபால்**
**செம்மண் வாரமலர்**
**551A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்**
**shemman.redsoil@gmail.com**
**தொடர்புக்கு: 021 492 7781**

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.




■ பேர் அறிஞன்

# சித்தி வீதத்தை உயர்த்துதல் தவிர்க்கவியலாக் கேள்விகள்...

4

தற்போதுள்ள சூழலில் குற்றச் சாட்டுக்களே அதிகம் என்பதும் முற்குறிப்பிட்ட துறைசார் தொகுதிக்குள்ளேயே ஆளை மாறி ஆளாக விமர்சித்துக்கொண்டிருக்கின்றனர் என்பதும் உண்மை. ஒட்டு மொத்தமாக இத்தொகுதியிலுள்ளவர்கள் கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் இடையே சிக்கித் தடுமாறுவது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. காரணம் அவர்களது இட்டுநிரப்பப்பட்ட அறிவே என்பது கவனத்திற்குரியது.

அவர்கள் கொண்டுள்ள அறிவு என்பது வெறுமனே கோட்பாடுகள் சார் ஏட்டறிவே என்பது குறிப்பிட த்தக்கது. எனவே அவர்களால் மண்சார்ந்து, பிரதேசம் சார்ந்து தாம் அறிந்து கொண்ட கோட்பாட்டறிவினை தாங்கள் பிரயோகிக்கத் தடுமாறுவதுடன் தம்மை நாடிவருகின்றவர்களைச் சரியான சிந்தனைத்தூண்டலுடன் கூடிய சுயதேடல்சார் அறிவுலகம் நோக்கி வழிப்படுத்த முடியாதவர்களாயும் உள்ளனர் என்பது பரவலான அவதானமாகும்.

இத்தொகுதிக்கு அப்பாலிருந்து எழும் குற்றச் சாட்டுக்களையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. துறைசார் தொகுதியினரின் துறைசார் மற்றும் துறைசாரா அறிவு மற்றும் அனுபவம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தும் தரப்பும் உள்ளது. அத் தரப்பு அதற்கான மதிப்பீட்டு அளப்பான்களை முன்வைக்கும் நிலையில் இருக்கிறதா? என்றால் இல்லையென்றுதான் கூறவேண்டியுள்ளது. ஆனால் தற்போதுள்ள எழுத்துத் தேர்வு முறையிலாவது குறித்த தரப்பினது பிரயோக அறிவை மதிப்பீடு செய்யலாமெனக் கூறுவோரும் உள்ளனர். ஆனால் எது எப்படியோ கோட்பாடுகள் கோட்பாட்டறிவுகளுக்கப்பால் நடைமுறைசார் பட்டறிவுசார் மதிப்பீடுகளின் அவசியம் பற்றிய கருத்துக்களையும் கவனத்தில் கொள்வது நல்லதுதான்.

இந்த இடத்தில்தான் மாணவர்களுக்கான வழிகாட்டல் எனும் விடயம் உயர்கல்வி வாய்ப்புகள், தொழிற்சார் கேள்வி மாணவனது விருப்புக்கு அப்பால் அவனது ஆற்றல் என்பவற்றினடிப்படையிலான கற்றல் கற்பித்தல் செயன்முறையை முன்னெடுத்தல் என்பதற்கப்பால் வகுப்பறைப் போதனை பரீட்சைக்குத் தயாரித்தல் - (தயார்ப்படுத்துதல்



அல்ல) - முக்கியம் பெறுகிறது. இந்த முக்கியமான விடயம் எந்தளவிற்குக் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது? கடந்தகால வினாவிடை மாதிரி வினா விடைச் செயலட்டைகள் மேலதிக நேர வகுப்புகள் என்பதற்கப்பால் ஏதாவது செய்யப்பட்டனவா? படுகின்றனவா?

அனைத்து மட்டங்களிலும் இருப்பவர்களின் செயற்திறன் மற்றும் செயற்பாடுகள் தவிர சுய சிந்தனையாற்றல் மற்றும் புதிய சிந்தனைத் திறன் என்பவை எவ்வாறு இருக்கின்றன என்று பார்த்தால் அவை மிக நலிவுற்றதாக அல்லது இல்லாததாகவே உள்ளன. அவை சிறப்பாக இருந்திருப்பின் சித்தி வீதக் குறைவு பற்றி அதிகம் அலட்டிக்கொண்டிருக்கத் தேவையற்றதாக இருந்திருக்கும். மேலும் தேர்ந்த தொழிலாளர் பற்றாக்குறை, வேலை வாய்ப்பின்மை மற்றும் பிற சமூக சீர்கேடுகள் பற்றியெல்லாம் பேசவேண்டிய தேவையும் இருந்திருக்காது. ஏனெனில் சான்றி தழும் தொழிலறிவும் அற்ற ஒரு சமூகம் உருவாக்கப்பட்டிருக்காது. அதனால் எழும் உள நிலைப் பாதிப்பு மற்றும்; விரக்திநிலையால் எழும் சீரழிவுகள் நிச்சயமாகத் தவிர்க்கப் பட்டிருக்கும்.

எனவே வகுப்பறைக் கற்றலில் ஈடுபடுவதில் இடர்பாடுள்ள ஒருவனை அதிலிருந்து மீட்டு சமூகப் பெறுமானமுள்ள நற்பிரஜையாக உருவாக்குவதிலிருந்து தவறிப்போகிறோம் அல்லது தவறவைக்கப்படுகிறோம் என்பதையாவது உணர்வோமானால் மட்டுமே மாற்றமுண்டாகும். இம்மாற்றம் பின்னடைவு, வீழ்ச்சி, சீர்கேடு எனும் பதங்களையும் அதற்கான விவாதங்களையும் அர்த்தமற்றதாக்கி ஒழிக்கும்.

மேலும் தேவையான அல்லது முக்கியத்துவம் வழங்கப்பட்டுக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை விடுத்து அர்த்தமற்ற விதத்தில் கதைத்துக்கொண்டிருப்பதைவிட மூல காரணிகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளையும் அதற்குப் பொருத்தமான பரிகாரநுட்பங்கள் தொடர்பாக ஆய்வுகள் யதார்த்தநிலைநின்று ஆக்கப்படுதல் அவசியமானதாகும். அந்நிலை நோக்கிய நகர்விற்கு ஆரோக்கியமான உரையாடல்கள் அவசிய மானவை. அதனை முன்னெடுப்போமா? ■


யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# எந்நாளும் நலம் வாழ

மருத்துவர்: கந்தையா சோதிதாசன்

## அறுகம்புல்..... (ஆயுள் பலம்..)


நறும் கூந்தல் வல்லி நல்லறுகம் புல்லிதனால்
கண் வெளிக்கும் புத்தி மிகும் விரணம் மாறும்
பெறும் உடல்பலம்தான், சோர்வு நீங்கும்
வயிற்றுப்புண் பிரமேகம் விசங்கள் ஓடும்
அறுகருந்த அகலும் பார் குருதிச்சோகை
நீங்குமாம் குருதிப்பித்தம் இழைப்பு போமே
மறக்காதே தோல் நோயும் தொலைந்தே போகும்
இன் சொல்லாய் இது நமக்குப் பச்சைக் குருதியாமே

### விளக்க உரை

வாசனை மிக்க கூந்தலையுடயவளே. நன்மையையுடைய அறுகம் புல்லினால் கண்பார்வை கூர்மையடைகிறது (ஆயுர் வேத முறைப்படி தயாரிக்கப்படும் அறு கம் வேர்த் தைலம் கண் நோய்களுக்கு நிவாரணம் தருகிறது. இது உடற் சூட்டைக் குறைப்பதால் சித்தம் தெளி வடைகிறது. இது காயங்களுக்கும் மருந்தாகிறது. அறுகம்புல் குடிநீர் அருந்த குருதிச் சோகை நீங்கு கிறது. இது திரிதோஷங்களைச் சமன் செய்வதால் குருதி அழுத்தம் சீரடைகிறது.உடல் வலுவாகிறது. குடலில் சேரும் விஷத்தை நீக்கும் மலமிளக்கியாகவும் தொழிற்படுகிறது. நீரிழிவையும் குணமாக்கு கிறது

மறந்துவிட வேண்டாம் இது தோல் நோய்க்கும் மருந்தாகும் இதனுடன் குப்பைமேனி சிறிது மிளகு அரைத்துப் பூசினால் தேமல் முதலிய தோல் நோய்களும் நீங்கும். இனிய சொற்களைப் பேசுபவளே! இத்தனை நன்மைகள் செய்வதால் இது நாம் அருந்தும் பச்சை நிறக் குருதி என்பதை அறிவாயாக!






## அக்ஷரா ஹாசனின் அச்சம் மடம் நாணம்...


அக்ஷரா ஹாசன் நடிப்பில் உருவாகி வருகின்ற படம் 'அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு'. இந்தப் படத்தின் முன்னோட்டக் காட்சி வெளியாகியுள்ளது. ராஜா ராமமூர்த்தி இயக்கியுள்ள இந்தப் படத்தில் அக்ஷரா ஹாசன் பிரதான கதாபாத்திரத்தில் நடிக்க, பிரபல பாடகி உஷா உதுப், அக்ஷரா ஹாசனுக்குப் பாட்டியாக நடித்துள்ளாராம். நீண்டகாலமாகப் பெயரிடப்படாமல் இருந்து வந்த இந்தப் படத்துக்குத் தற்போதுதான் 'அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு' என்று பெயரிட்டுள்ளது படக்குழு. 'சமூகத்தைப் பொறுத்தவரை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நான்கு பண்புகளும் ஒவ்வொரு நல்ல பெண்ணும் கொண்டிருக்க வேண்டிய தகுதிகளாகக் கருதப்படுகின்றன. எங்கள் படம் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் தலைப்பின் வழியே ஒரு பெண்ணை எது நல்லவள் ஆக்குகிறது எனும் கேள்வியை ஒரு பெண்ணின் பார்வையில் கேட்கிறது என்றுள்ளார் இதன் இயக்குநர் ராஜா ராமமூர்த்தி.


energy evolved (pvt) Ltd.

E. B. CREASY & CO. PLC
Since 1878

முதலீடு

நீங்களும் சூரிய ஒளியிலிருந்து
மின் சாரத்தை உற்பத்தி செய்து
இலங்கை மின்சாரசபைக்கு விற்பனை
செய்வதன் மூலம் சிறந்ததொரு மாதாந்த
வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் ...



- சிறிய, நடுத்தர, பாரிய அளவிலான முதலீடுகள்.
- அரச அங்கீகாரத்துடன் இலங்கை மின்சார சபையினால் 20 வருடங்களுக்கு செய்து கொள்ளப்படும் வலுவான ஒப்பந்தம்.
- மத்திய வங்கியால் வழங்கப்படும் மானிய வட்டி அடிப்படையில் இலகுவான முறையில் கடன் வசதி.
- சிறிய முதலீட்டின் மூலம் உங்களது வீட்டு மின் கட்டணத்தை (00 ரூ) பூச்சியம் ரூபாய் ஆக்கமுடியும்.
- சூரிய ஒளி மின்சக்தி தொழில் நுட்பங்களில் 18 வருட அனுபவம்.
- அலகு ஒன்றிற்கு ரூபாய் 22/- மின்சார சபையிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

SPECIAL OFFERS ARE AVAILABLE

| வழமையான மின் கட்டணம் | முதலீடு |
|---|---|
| 3363.00 | 185000.00 |
| 6763.00 | 285000.00 |
| 13963.00 | 495000.00 |

ENERGY EVOLVED (PVT) LTD
071 1387066
வாடிக்கையாளர் சேவை நிலையம்
மட்டக்களப்பு கல்லடி பாலம்
மீன் இசை பூங்கா. கட்டடத்தொகுதி.

# போயிங்குக்கு தொடர் சோகம்!

அடுத்தடுத்துத் தொடர் விபத்துகளுக்குள்ளாகிப் பல உயிரிழப்புகளை ஏற்படுத்திய காரணத்தால், அமெரிக்காவின் பல்தேசிய நிறுவனமான போயிங்கால் தயாரிக்கப்பட்ட மக்ஸ் 8 வானூர்திகளுக்ளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அவற்றின் பறத்தல்கள் நிறுத்திவைக்கப்பட்டன. தயாரிப்பு இடைநிறுத்தப்பட்டது மாத்திரமல்லாமல் தயாரித்துப் பல்வேறு நாடுகளுக்கும் விற்பனை செய்யப்பட்ட அந்த ரக வானூர்திகள் எதையும் பறத்தலில் ஈடுபடுத்தக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டது. அந்த ரக வானூர்திகள் அனைத்தும் பல்வேறு நாடுகளின் வானூர்தித் தளங்களில், நிலையங்களில் இன்றுவரை பயன்படுத்தப்படாமல் கிடக்கின்றன.

இந்தச் சூழலில் அந்த வானூர்திகளின் வடிவமைப்பே அவை தொடர்ந்து விபத்துக்குள்ளானமைக்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது. குறுகிய உடலமைப்பைக் கொண்ட போயிங் 737 மக்ஸ் ரக வானூர்திகளின் வகையிலிருந்து முன்னேற்றமடைந்த, மெருகூட்டப்பட்ட நான்காவது தலைமுறைத் தயாரிப்பான மக்ஸ் 8 ரக வானூர்திகளே இந்த விபத்துகளுக்குள்ளாகியிருந்தன. அவற்றின் வடிவமைப்பில்தான் குறைபாடு உள்ளது என்று தற்போது கூறப்பட்டுள்ளது.

### தொடர் விபத்துகள்

2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தோனேசியாவிலும் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எதியோப்பியாவிலும் அடுத்தடுத்து போயிங் 737 மக்ஸ் ரக வானூர்திகள் விபத்துகளைச் சந்தித்தன. எதியோப்பியாவில் நடந்த விபத்தில் 157 பேரும், இந்தோனேசியாவில் நடந்த விபத்தில் 189 பேரும் உயிரிழந்தனர். இந்த இரு சம்பவங்களிலும் வானூர்தியில் இருந்த ஒருவர்கூட உயிர் தப்பவில்லை.




இதன்பின்பே உலகம் முழுவதிலும் இந்த வானூர்திகளின் சேவை நிறுத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த விமானங்களைத் தயாரித்த அமெரிக்க நிறுவனமான போயிங்கின் உலகம் முழுவதும் பறந்துகொண்டிருந்த இந்த ரகத்தைச் சேர்ந்த 371 வானூர்திகள் இதன் மூலம் நிறுத்திவைக்கப்பட்டன.

இந்தோனோசியாவில் நடந்த விபத்தைத் தொடர்ந்து இந்தியா, பிரிட்டன், சீனா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் இந்த விமானத்துக்குத் தடை விதித்தன. இந்த வானூர்தியில் குறைபாடு உள்ளமையை நிரூபிக்கக்கூடிய ஆதாரம் இல்லை என்று கூறி அமெரிக்கா மட்டும் இந்த வானூர்திகளுக்குத் தடைவிதிக்க மறுப்புத் தெரிவித்து வந்தது. பின்னர் எதியோப்பியாவில் நடந்த விபத்துத் தொடர்பில் ஆராய்ந்த விசாரணையாளர்கள் விபத்துக்கான காரணமாகப் புதிய ஆதாரம் ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டனர் என்றுகூறி இந்த ரக வானூர்திகளின் பயன்பாட்டை நிறுத்திவைப்பதற்கு அமெரிக்காவும் முடிவெடுத்தது. இதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் உள்ள இந்த ரக விமானங்களின் சேவையை நிறுத்துவதாக போயிங் நிறுவனமும் அறிவித்தது. இதனால் நிறுவனத்தின் பங்குகளின் விலை பெருமளவில் சரிந்தன.

போயிங் நிறுவனம் இந்த வானூர்திகளின் தொழில்நுட்ப விவரங்களை வெளிப்படையாகத் தெரியப்படுத்தாமல் இருந்தது இந்த விபத்துகளுக்கு ஒரு காரணம் என்று விசாரணை ஒன்றில் சுட்டிக்காட்டிக் குறித்த ரக வானூர்தியின் ஒழுங்குக் கட்டுப்பாட்டு அமைப்பின் மீது அடிப்படையில் குறை இருக்கிறது என்று அமெரிக்கக் காங்கிரஸ் சபை தெரிவித்துள்ளது.

இந்த வானூர்திகளின் வடிவமைப்பில் போயிங் நிறுவனம் தோல்வியடைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ள காங்கிரஸ் சபை அது குறித்து விவரிக்கின்ற அறிக்கை ஒன்றையும் சபையில் முன்னிலைப்படுத்தியது. இந்த விபத்துக்களிலிருந்து கடுமையான பாடங்களைக் கற்றுக் கொண்டதாகப் போயிங் நிறுவனம் தெரிவித்திருக்க, விபத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், போயிங் மீது தொடர்ந்து குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றன. இதனால் தொடர்ந்தும் மீள முடியாத சோகத்தில் புதைந்தபடியுள்ளது அதன் வர்த்தகம். ■




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781